27 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416.282.8059
Email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட சேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
உங்கள் வாகனம், வீடு (for your Home & Auto)

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 27 | பாலம் 10 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MAY 15, 2017

# பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண நாடாளுமன்றத் தேர்தல்!

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் 41 ஆவது பொதுத்தேர்தல் 2017 மே 09 இல் நடைபெற்றது. இத்தேர்தல் முடிவுகள் சிறுபான்மை அரசாங்கம் ஒன்றுதான் பதவியேற்கப்போகிறது எனக் கூறுகின்றன. பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் சிறுபான்மை அரசு இதற்கு முன்னர் 1953 இல்தான் பதவியில் இருந்தது.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண நாடாளுமன்றத்தில் மொத்தமாக 87 தொகுதிகள் உண்டு. இவற்றில் 44 தொகுதிகளில் வெற்றி பெறும் கட்சியே பெரும்பான்மை அரசை அமைக்கும். இந்நிலையில் தற்போது வெளியாகிய தேர்தல் முடிவுகளின் படி லிபரல் 43 தொகுதிகளிலும் புதிய ஜனநாயகக்கட்சி 41 தொகுதிகளிலும் பசுமைக்கட்சி 3 தொகுதிகளிலும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் மொத்தமாக 85 தொகுதிகள் இருந்தன. அவற்றில் லிபரல் கட்சி 47 ஆசனங்களையும் புதிய ஜனநாயகக்கட்சி 35 ஆசனங்களையும் சுயேட்சை உறுப்பினர்கள் 2 ஆசனங்களையும் பசுமைக்கட்சி 1 ஆசனத்தையும் கொண்டிருந்தன.

இப்போதைய தேர்தலில் பெரும்பான்மைக்கு தேவையான 44 ஆசனங்களுக்கு ஒன்று குறைவாக லிபரல் கட்சி பெற்றிருந்தாலும் அதுவே அதிகப்படியான ஆசனங்களைப் பெற்றிருப்பதால் லிபரல் கட்சியே




தொடர்ந்தும் சிறுபான்மை அரசை அமைக்கும். அதன் தலைவியான தற்போதைய முதல்வர் Christy Clark தான் தொடர்ந்தும் முதல்வராக இருப்பார். ஆனால் பல தொகுதிகளில் தேர்தல் முடிவுகள் மிகவும் போட்டியாக இருந்து மிகக் குறைந்த வித்தியாசத்திலேயே ஒரு கட்சி வேட்பாளர் வென்றதாக அறிவிக்கப் பட்டது. இத்தொகுதிகளில் வாக்குகள் மீண்டும் மே 22 ஆம் திகதியில் இருந்து மே 24 ஆம் திகதிவரை எண்ணப்பட உள்ளன. அதன்பின்னரே யார் அத்தொகுதிகளில் வென்றார் என உறுதிப் படுத்தப்படும்.

Courtenay - Comox தொகுதியில் மொத்தமாக 27,075 வாக்குகள் பதியப்பட்டன. இதில் புதிய ஜனநாயகக்கட்சிக்கு 10,058 வாக்குகளும், லிபரல் கட்சிக்கு 10,049 வாக்குகளும், பசுமைக்கட்சிக்கு 4,907 வாக்குகளும் ஏனையோருக்கு 2,061 வாக்குகளும் விழுந்தன. இதனால் தற்போது புதிய ஜனநாயகக்கட்சியின் வேட்பாளர் Ronna-Rae Leonard 9 அதிகப் படியான வாக்குகளால் வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் Maple Ridge-Mission தொகுதியிலும் புதிய ஜனநாயகக் கட்சிக்கு 9,843 வாக்குகளும், லிபரல் கட்சிக்கு 9,723 வாக்குகளும், பசுமைக்கட்சிக்கு 3,181 வாக்குகளும் ஏனையோருக்கு 994 வாக்குகளும் விழுந்தன. இதனால் தற்போது புதிய

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

Lexus of Richmond Hill
LEXUS
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
Kumar Jegasothy
Sales Consultant
11552 Yonge Sreet
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
Homelife/Future Realty Inc.

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721 Fax: 647-351-3099
mortgage@nesan.ca www.nesan.ca
MORTGAGE ALLIANCE
1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC.

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

Buying - Leasing - Renting - Selling
A name you can trust
RUTH VIJENDRAN
Full-Time Sales Representative
416.300.5454
ruthvjhomes@gmail.com
ruthvjhomes.com
1% LISTING COMMISSION
Home is where your story begins, let me help you get there!!!
HOMELIFE/FUTURE REALTY Inc. Brokerage

DENTAL OFFICE
Dr.Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS(Glasg.)
DENTAL SURGEON
Wisdom Tooth Extraction.
Root Canal.
Gum Treatment.
Tooth Filling.
Dental Implant.
Dentures.
3150 Eglinton Ave. East, Unit #5
Markham & Eglinton
Tel: 416-264-3232
3351 Markham Road., #129
Markham & Steeles
Tel: 416-609-2022

JENA GULASINGHAM
Sales Representative
416.702.2030
This Special Offer Valid Only This Year
Buy a Home with Me & Listing Commission FREE FREE FREE
HomeLife/Future Realty Inc., Brokerage


$689,000
Brand New, Detached
North of Toronto BR: 4 WR: 3
$359,000
Free Hold Townhouse - Lindsay
7 Years New BR: 3+1 WR: 3
$499,000
Free Hold -Townhouse
Scarborough BR: 3 WR: 3
$549,900
Detached - Bowmanville
3 Years New BR: 3 WR: 3
$525,000
Detached - Ajax
BR: 3 WR: 2
$499,000
Detached - Oshawa,
BR: 2 WR: 2
$599,000
Detached - Brampton,
BR: 3+1 WR: 3 Fin. Basement
Thas....
Solid negotiator...
15 Years of business experience...
Real Estate Investor & advisor...
Sellers: Call me only; if you want top dollar for your house.
Buyers: Not enough down payments? You are Approved; Call me first.
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd. Toronto, Ont.
www.remaxace.com
Not intended to solicit buyers/sellers under contract. All properties advertised herein may not be listed by Thas.
Thas Thirunavukkarasu
Sales Representative Dip-in-Eng(Hons)
416-388-4333
thasremax@gmail.com


BRAND NEW HOMES FOR SALE
6 Third St Kawartha Lakes
$229,900
Detached Bungalow
222 Verdun Rd - Oshawa
$319,900
Detached 1 1/2 Storey
99 Haviland Circ. - Brampton
$1,268,888
Detached 3-Storey
1054 Cannon St E - Hamilton
$199,900
Att/Row/Twnhouse 2-Storey
252 Tragina Ave N - Hamilton
$199,000
Detached Bungalow
3558 Regional Rd 57 Rd - Scugog ON.
$499,000
Detached Bungalow-Raised
மேலும் Lindsay ல் 8 புதிய வீடுகள் விற்பனைக்கு உண்டு
1st & 2nd Mortgages available upto 1Million
A.ANTON JEEVA,FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.antonjeeva.com | www.newcondoproject.ca/com
#1
RE/MAX
Dynasty Realty Inc. Brokerage
Tel: 905.471.0002
8 Shadlock St. #7, Markham ON L3S 3K9
Independently owned & operated

# பிரிட்டிஷ்...

## 01ஆம் பக்கத்தொடர்ச்சி

ஜனநாயகக்கட்சியின் வேட்பாளர் Bob Deith 120 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் Coquitlam-Burke Mountain தொகுதியிலும் லிபரல் கட்சிக்கு 9,514 வாக்குகளும், புதிய ஜனநாயகக்கட்சிக்கு 9,344 வாக்குகளும், பசுமைக்கட்சிக்கு 2,553 வாக்குகளும் விழுந்தன. இதனால் தற்போது லிபரல்கட்சியின் வேட்பாளர் Joan Isaacs 170 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம் மூன்று தொகுதிகளிலும் வாக்கு மீள எண்ணப்பட்டு மே 24 இல் யார் வெற்றி பெற்றார் என உறுதிப்படுத்தும்வரை லிபரல் கட்சியின் சிறுபான்மை அரசு தொடரும். இம்முறை நடைபெற்ற தேர்தலில் மூன்று மடங்கு அதிக தொகுதிகளில் வெற்றி பெற்ற பசுமைக்கட்சி யாரை ஆதரிக்கிறதோ அக்கட்சியே ஆட்சி அமைக்கும் நிலையில் (Kingmaker) உள்ளது. இதனால் தற்போது லிபரல்கட்சியின் தலைவி Christy Clark உம் புதிய ஜனநாயகக்கட்சியின் தலைவர் John Horgan உம் பசுமைக்கட்சியின் தலைவர் Andrew Weaver உடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளனர்.

இம்முறை நடைபெற்ற தேர்தலில் மாகாணம் முழுவதும் விழுந்த 1,799,355 வாக்கு எண்ணிக்கையைப் பார்த்தால் லிபரல்கட்சி 40.85%, புதிய ஜனநாயகக் கட்சி 39.85%, மற்றும் பசுமைக்கட்சி 16.74% பெற்றுள்ளன. இதனால் Christy Clark தனது தேர்தல் வெற்றி உரையில் பேசும் போது லிபரல் கட்சி தான் மாகாணம் முழுவதும் அதிகூடிய வாக்குகளைப் பெற்றுள்ளது என்று கூறினார்.

ஆனால் கடந்த 2013 மே 14 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் லிபரல்கட்சி 44.14%, புதிய ஜனநாயகக்கட்சி 39.71% மற்றும் பசுமைக்கட்சி 8.21% வாக்குகளைப் பெற்றிருந்தன. இதனால் இம்முறை நடந்த தேர்தலில் விழுந்த மொத்த வாக்குகளின் எண்ணிக்கையை வைத்துப் பார்த்தால் லிபரல்கட்சி 3.29% வாக்குகளை இழந்துள்ளன, புதிய ஜனநாயகக்கட்சி ஆக 0.14% வாக்குகளை மேலதிகமாகப் பெற்றுள்ளன. ஆனால் பசுமைக்கட்சியோ இரண்டு மடங்கு வாக்குகளை அதாவது 8.53% மேலதிக வாக்குகளைப் பெற்றுள்ளது.








லிபரல்கட்சி 2001 ஆம் ஆண்டில் இருந்து அதாவது கடந்த 16 ஆண்டுகளாக பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தை ஆண்டு வருகிறது. ஆனாலும் Christy Clark 2011 ஆம் ஆண்டில் இருந்தே முதல்வராக இருக்கிறார்.

2005 ஆம் ஆண்டில் முதன்முதலில் பிரிட்டிஷ் கொலம்பியா நாடாளுமன்றத்திற்கு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட John Horgan கடந்த மூன்று ஆண்டுகளாக புதிய ஜனநாயகக்கட்சியின் தலைவராக இருக்கிறார்.

பசுமைக்கட்சியின் தலைவராக இருக்கும் Dr. Andrew Weaver காலநிலை மாற்றம் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்ட ஒரு விஞ்ஞானி ஆவார். இவர் உறுப்பினராக இருந்த விஞ்ஞானிகளின் குழு Al Gore உடன் சேர்ந்து நோபல் பரிசைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இவர் 2013 இல் நடைபெற்ற தேர்தலில் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாண நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு பசுமைக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார். இவர் 2015 இல் பசுமைக்கட்சிக்குத் தலைவரானார்.

இதுவரை தபால் மூலமாக வாக்களித்த வாக்குகள் என நாம் கூறும் Absentee

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)




# அன்னைதனை மறப்போமா?

சேயுள்ளம் தனையறிந்து
தேவைகளை நிறைவேற்றும்
தாயுள்ளம் போன்றிந்தத்
தரணியிலே வேறுண்டோ?

தெய்வத்தைத் தேடிமக்கள்
திருத்தலங்கள் செல்லுவதேன்?
மெய்யான தெய்வங்கள்
மேதினியில் அன்னையரே!

தானளிந்து போனாலும்
தன்குழந்தை வாழவென
ஆனமட்டும் பாடுபடும்
அன்னைதனை மறப்பேனா?

உதிரத்தால் உயிரீந்து
உலகத்துக் களித்திடவுன்
உதரத்தில் காத்தவளே
உனைமறந்து வாழ்வேனா?

பத்தியமோ பட்டினியோ
பக்குவமாய் அதைக்காத்து
நித்தம்நீ செய்தவற்றை
நினைத்துள்ளம் நெகிழ்கின்றேன்.

என்னையிங்கு உருவாக்கி
இப்புவியில் உயர்த்தவெனத்
தன்னைநிதம் வருத்தியஎன்



தாயவளை மறப்பேனா?
கற்றோரின் ஆசியுடன்
கைகோர்த்து நடைபயிலப்
பெற்றவளே நீசெய்தாய்!
பிறவியிதன் பயனீந்தாய்!

என்சுவைக்கு ஏற்றபடி
எனக்கெல்லாம் தந்தவளே!
உன்நினைவுச் சுகத்தோடு
உலகத்தில் நான்வாழ்வேன்!

- சபா. அருள்சுப்பிரமணியம் -

# யாவரும் போற்றும் அம்மா

இம்மாநிலத்தில் தோன்றிய அன்புத்தெய்வம்
சும்மா இரு என்றால் இருப்பாயா?
கடமையே கண்ணாக ஓயாது உழைப்பாய்
மடமை நீங்க நல்வழி காட்டியே
நல்வாழ்க்கை தந்தாய் தாயே!




பொறுமையின் இலக்கணமே
மறுமையில் இல்லை இம்மையில்தான்
இன்பம் என்று
ஒற்றுமையை வலியுறுத்தி
பன்முக சவால்களை எதிர்கொண்டு
முன்மாதிரி வாழ்க்கை வாழ்ந்த பெருமை
உமக்குண்டு
என்றும் மறவோம்

அம்மா என்றால்
மலர்ந்த முகமும் உபசரிப்பும்
மனதில் தெரியும்
அம்மா என்றால் ஆதரவான வார்த்தைகள்
நினைவில் வரும்
அம்மா என்றால் பொறுமைக்குணம்
நிழலாடும்

கல்விதனை பெற்றிட ஊக்கமும் அளித்து
பல்கலைகள் கற்க வழிகள் பல செய்த உத்தமியே
காலம் கடந்த மாற்றங்களையும்
மனதில் இருத்தி வாழும் கலையை
நன்கு கடைப்பிடித்து
வாழ்ந்து காட்டிய எம் தாயே!
எங்கிருந்தாலும் வாழ்க வளமுடன்

- ரஞ்சி கதிர் -

அம்மா
நகை அடைவு மாடம்



AMMA PAWN BROKER
வர்த்தகத்துறையில் நீண்டகால முன்னோடிகளான அம்மா நகைமாடத்தின் சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய
பெறுமதியும் குறைந்த வட்டியுடன்
5 நிமிடங்களில் உங்கள் கையில்
பணமும் பாதுகாப்பும் அளிக்கும்
நட்பான சேவையுடன்
கைராசியான நிறுவனம்

2425 Eglinton Ave. E
Scarborough, ON
(சங்கர அன் கோவுக்கு அருகில்)
416-757-0034
416-994-3861
Downtown: 416-921-0034
ammapawnbroker@gmail.com

1.5%
முதல்
2%
$1000ற்கு
மாதம்
$20 மட்டுமே
(Month)

நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்

அம்மாவுக்கு நிகரான சேவை
அம்மா நகை அடைவுமாடமே

உங்கள் பழைய நகைகளை
நியாயமான விலையில்
வாங்கலாம்/விற்கலாம்

அரச அங்கீகாரம் பெற்று முழுக்
காப்புறுதி செய்யப்பட்ட
முதன்மையான அடைவு சேவை

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட ,
- நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- கொன்சுமர் ப்ரொபோசல், பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க



## மற்றும் உங்கள் அனைத்து விதமான மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...

WIN UP TO
$100,000*
Everyone Who Funds
A Mortgage With US
Ask How !
*See contest rules at
www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

"மோட்கேஜ் கிளினிக்

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.



**வோக் இன்**

**சனி 9.00 - 5.00 மணிவரை**

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்—வெள்ளி (call for an appointment)

எமது முகவரி
**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
**(Markham & HWY 401)**

**ஜெ(Jey) இராசதுரை** MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487 Brokerage Office : 112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1W3 Office Phone : 416-391-3232

# கட்சிகளின் பலத்தை வெளிப்படுத்த நடத்தப்பட்ட மேதினக் கூட்டங்கள்!

-விகிர்தன்

நடந்து முடிந்த மேதின நிகழ்வுகள் 'நல்லாட்சி' அரசாங்கத்திற்கு அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. காரணம் காலிமுகத்திடலில் இடம்பெற்ற முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தலைமையிலான கூட்டு எதிரணியின் மேதினக் கூட்டத்தில் அதிகளவு மக்கள் திரளாகக் கலந்து கொண்டமைதான்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் மஹிந்த வின் கூட்டத்திலும் பார்க்க அரைவாசி சனத் திரளே கலந்து கொண்டன. அது மட்டுமன்றி, பிரதமர் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களை விடவும் மைத்திரியின் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் குறைவாகக் காணப் பட்டதாகக் கணிப்பிடப்படுகின்றது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியானது பிளவடைந்துள்ளது. இதில் மஹிந்தவுடன் ஓர் அணியும், மைத்திரிபால சிறிசேனவுடன் ஓர் அணியும் உள்ளன. என்னதான் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பிளவடையவில்லை என்று அக்கட்சித் தரப்பினர் கூறினாலும், நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் இந்தப் பிளவை அவதானிக்க முடிந்தது. இதில் மஹிந்த அணி நடத்திய கூட்டத்தில் அவரது ஆதரவாளர்கள் அலையென திரண்டமை மைத்திரி தரப்பினருக்கு அதிர்ச்சியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மஹிந்தவை ஆதரிக்கும் கூட்டு எதிர்க் கட்சியினரின் கூட்டம் கொழும்பு காலிமுகத்திடலிலும், மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டம் கண்டியில் கொட்டம்பே மைதானத்திலும் நடைபெற்றன. பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசிய கட்சியின் பேரணியும் கூட்டமும் பொரளை கெம்பல் மைதானத்தில் நடைபெற்றது. சில தரப்பினால் வெளியிடப் பட்டுள்ள புள்ளிவிபரத்தின்படி, மஹிந்தவின் கூட்டத்தில் சுமார் ஒரு இலட்சம் வரையிலானவர்களும், மைத்திரியின் கூட்டத்தில் சுமார் 58 ஆயிரம் வரையிலானவர்களும், ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டத்தில் 65 ஆயிரம் வரையிலானவர் களும் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படு கின்றது.

கொழும்பில்- அதுவும், காலிமுகத்திடலில் மஹிந்த அணியினரின் கூட்டம் இடம் பெற்றமை அங்கு மக்கள் அதிகம் கலந்து கொண்டமைக்கான காரணம் எனச் சொல் லப்படுவதிலும் உண்மை இருக்கின்றது. பொதுவாகவே நாளாந்தம் அதிகளவிலான வர்கள் பொழுதுபோக்கிற்காகக் கூடும் இடம் காலிமுகத்திடலாகும். கவர்ச்சி மிக்க தும், பொருத்தமானதுமான அந்த இடத்தை



மஹிந்தவிற்கு வழங்க பிரதமர் ரணில் விக்ரமசிங்க சம்மதம் தெரிவித்திருந்தார்.

கண்டியில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பேரணி மற்றும், கூட்டத்தில் மக்கள் குறைவாகக் கலந்து கொண்ட மைக்கு அந்தச் சூழல் ஒரு காரணமாக அமைந்திருக்கலாம். அவ்வேளையில் அங்கு மழை பெய்ததால் மக்கள் அதிகம் கலந்து கொள்வதில் சிரமம் ஏற்பட்டதாக வும் கூறப்படுகின்றது. மஹிந்த தரப்பினர் மதுபானம் மற்றும் பணத்தினை வழங்கி கிராமப்புறங்களிலிருந்து பெருமளவு ஆட் களை தங்களது கூட்டத்திற்கென கொண்டு வந்ததாக எதிர்தரப்பினர் குற்றம் சாட்டு கின்றனர். இதேவேளை, இந்தப் புள்ளி விபரங்கள் பொய்யானவை என்றும், தங்களது கூட்டத்திலேயே மஹிந்தவின் கூட்டத்தை விடவும் அதிகமானவர்கள் கலந்து கொண்டதாகவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் தெரிவிக்கின்றனர்.

மகிந்தவின் மேதினக் கூட்டத்தில் காலிமுகத்திடலின் 40 வீத பகுதியிலேயே மக்கள் கூட்டம் நிறைந்திருந்ததாகவும், கண்டி கெட்டம்பேயில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மேதினக் கூட்டத்திற்கு

மஹிந்தவின் மேதினக் கூட்டத்தைக் காட்டி லும் அதிகமானோர் கலந்து கொண்டனர் என்றும், குறைந்தளவு மக்கள் கூட்டம் என்பதற்காகவே மஹிந்த தரப்பினர் மேதின ஊர்வலத்தை நடத்தவில்லை என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இரண்டிலும்

மொத்தமாகக் கலந்து கொண்டவர்களின் தொகை மஹிந்தவின் கூட்டத்தை விட அதிகமானதே. இதில், ஐக்கிய தேசியக் கட்சி இல்லாமல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாட்டில் தனித்து ஆட்சியமைக்க இயலாது என்கின்ற ஒரு செய்தியும் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. இது ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமானதே.


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதன் பிளவை சரிப்படுத்தும் முயற்சியில் அதிகம் கவனம் செலுத்தி வருகின்ற வேளையில் ஐக்கிய தேசியக் கட்சி தம்மை தனிப்பெரும் கட்சி யாக வளர்த்தெடுப்பதற்கான வேலைத் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிளவடைவதும் ஐக்கிய தேசியக்கட்சி தம்மை பலப்படுத்திக் கொள்ள சாதகமான நிலைமையை உருவாக்கும். இதனால் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் மஹிந்தவிற்கு ஆதரவாக அதிகளவானோர் கலந்து கொண்டமை குறித்து ஐக்கிய தேசியக் கட்சியினர் கவலைப்படவில்லை.

மேதினம் என்பது உலகத் தொழிலாளர்கள் தினமாகும். அவ்வாறானதொரு தினத்தை எவ்வாறு கொண்டாடுவது என்பதற்கான வடிவம் ஒன்றுள்ளது. கடந்த காலங்களில் தொழிற்சங்கங்களே இலங்கையில் இத் தினத்தை முன்னின்று கொண்டாடின. தொழிலாளர்கள் ஒடுக்கப்படுகின்றமைக்கு எதிராகவும், தொழிலாளர்களுக்கான நலன் களை ஆளும் தரப்பினரிடம் கோருகின்ற வகையிலும் இத்தினம் வடிவமைக்கப்பட்டு நடத்தப்பட்டது. இன்று கட்சிகளின் பலத்தை ஆட்தொகையை வெளிப்படுத்தும் வகையிலேயே இத்தினம் கொண்டாடப்படுகின்றது. மைத்திரி - ரணில் தலைமையிலான இந்த அரசாங்கத்தை வீழ்த்தப் போவதாக அடிக் கடி சவால் விடும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவிற்கு காலிமுகத்திடலில் கூடிய கூட்டம் மகிழ்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது. அவர் தனது தொனியை இப்போது மேலும் உயர்த்தியுள்ளார்.

“எங்கள் பலத்தைக் காட்டி விட்டோம் அரசாங்கம் தேர்தலை நடத்தத் தயாரா?” என அவர் சவால் விடுகின்றார். ஆட்சி யைக் கைப்பற்றுவதற்கான காலம் நெருங் கிவிட்டது என்றும், சரியான நேரத்தில் ஆட்சி அதிகாரங்களைக் கைப் பற்றுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஆட்சி அதிகாரங்கள் எப்படிக் கை மாறும் என்பது தொடர்பில் தன்னைப்போல வேறு எவரும் அறிந்து வைத்திருக்க முடியாது எனவும் அவர் கூறுகின்றார். “எனது கரங்களில் இருந்து ஆட்சி கைநழுவிச் செல்ல வில்லை. நான் கடந்த தேர்தலின் போது உத்தியோகபூர்வமான முடிவுகள் வெளிவர முன்னரே என் வீட்டிற்குச் சென்றிருந்தேன். இப்பொழுது மீண்டும் எங்கள் பிடிக்குள் சரியான நேரம் வந்திருக்கிறது. அந்தத் தருணத்தைத் தக்கவாறு பயன்படுத்திக் கொள்வோம். இந்த ஆட்சியை கவிழ்த்து எமது ஆட்சி யைக் கொண்டுவருவதற்கு எந்த நேரத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதையும், எப்படியான அணுகுமுறைகளில் அதைச் செய்யவேண்டும் என்பதையும் மிகமிக நுணுக்கமாக செய்வதற்கான நேர த்தில் செய்து முடிப்போம். இந்த ஆட்சியை மாற்றி எங்கள் ஆட்சியைக் கொண்டுவரும் நேரம் வந்துவிட்டது” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தங்களுக்கான ஆதரவை மக்கள் மத்தியில் மேலும் திரட்டுவதற்கான வேலைகளை மஹிந்த அணியினர் உற்சாகமாகத் தற்போது ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக் கப்படுகின்றது. இவை ஒருபுறமிருக்க, இந்த

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் - 1

## கனடா - 150 வருடங்கள்

## கனடாவின் 150ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் கட்டுரை.



குரு அரவிந்தன்

கனடா என்ற நாடு உருவாகி, பல்கலாச்சார நாடாகமாறி 150வது பிறந்த வருடத்தை 2017 ஆம் ஆண்டு முழுவதும் கொண்டாடுகின்றது. கனடா என்ற பெயர் எப்படி வந்தது என்பதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், பழங்குடி மக்கள் தங்கள் கிராமத்தைக் 'கனரா' என்று அழைத்ததாகவும் அந்தப் பெயரே மருவி கனடா என்று நிலைத்ததாகவும் சிலர் குறிப்பிடுவர். புதிய இடங்களைக் கண்டுபிடிக்கும் நோக்கத்தோடு வட அமெரிக்கா நோக்கிப் பலர் கடல் மார்க்கமாக வந்து சென்றாலும், 1604 இல் தான் பிரெஞ்ச் குடியேற்றத்திற்குக் கனடாவில் அடிகோலப்பட்டது. அதைத் தொடர்ந்து 1607 இல் ஆங்கிலேயரும் அதன்பின் ஏனைய ஐரோப்பிய இனத்தவர்களும் காலப்போக்கில் கனடாவிற்கு வந்து குடியேறினர். 1534 ஆம் ஆண்டு தொடக்கம் 1763 ஆம் ஆண்டுவரை பிரான்ஸ் நாட்டின் கட்டுப்பாட்டுக்குள்ளும், 1763 ஆம் ஆண்டு தொடக்கம் 1931 ஆம் ஆண்டுவரை பிரித்தானியரின் கட்டுப்பாட்டிலும் கனடா இருந்தது. 1857ம் ஆண்டு ஒட்டாவா கனடாவின் தலை நகரமாக மாறினாலும், 1867ம் ஆண்டு கனடா கூட்டரசாகப் பிரகடனப்படுத்தப்பட்ட போது ஒட்டாவாவே தொடர்ந்தும் கனடாவின் தலைநகராக இருக்கும் என்றும் உறுதி செய்யப்பட்டது. தற்போது கனடா பத்து மாகாணங்களையும் மூன்று ஆட்சி நிலப்பகுதிகளையும் கொண்ட கூட்டமைப்பு நாடாக இருக்கின்றது. ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய இரண்டும் கனடாவின் ஆட்சி மொழிகளாக இருக்கின்றன. சுமார் 35,152, 000 பல்லின மக்கள் தற்போது கனடாவில் வாழ்கின்றார்கள்.

15 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து படிப்படியாகப் பல்வேறு இனத்தவர்களும் பல பாகங்களில் இருந்தும் கனடாவில் குடியேறத் தொடங்கியதால் கனடாவின் முதற்குடிமக்கள் ஓரங்கட்டப்பட்டனர். கனடாவின் முதற்குடிமக்கள் ஈட்டி, வில், அம்பு என்று பழைய ஆயுதங்களைப் பாவித்த காலத்தில் ஐரோப்பாவில் இருந்து வர்த்தக நோக்கத்தோடு வந்தவர்கள் துப்பாக்கியைப் பாவனையில் வைத்திருந்தனர். பழங்குடி மக்களைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர குடியேற்ற வாசிகளுக்கு ஆயுதங்கள் உதவியாக இருந்தன. இங்கு வாழ்ந்த முதற்குடி மக்கள் பின் தங்கிய நிலையில் இருந்ததால்தான் பல்வேறு இனத்தவர்களும் இலகுவாகக் கனடாவில் குடியேறமுடிந்தது. இப்படியாகக் குடியேறிய பல்வேறு இன, மதத்தவர்கள் ஒற்றுமையாக இருக்க



வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டுதான் பல்கலாச்சார நாடாகக் கனடா உதயமானது. கனடாவின் ஆரம்ப சரித்திரத்தை அறிய வேண்டுமானால், அதற்கு முன்பே வடஅமெரிக்கக் கண்டத்தில் வாழ்ந்த பழங்குடி மக்கள் பற்றி அறிந்து கொள்வது நல்லது. முக்கியமாகக் கனடா என்று அழைக்கப்படும் பகுதியில் 150 வருடங்களுக்கு முன் வாழ்ந்த, இன்று சிறுபான்மையினராகி விட்ட முதற்குடி மக்களின் வரலாற்றை அறிந்து கொள்வது சிறப்பாகும். வரலாறுகள் எழுதப்பட்டு ஆவணம் ஆக்கப்படாவிட்டால், கடந்த காலம் எதையுமே எம்மால் அறிந்து கொள்ள முடியாமற் போய்விடலாம்.

எல்லா நாடுகளிலும் பழங்குடி மக்கள் இருக்கின்றனர். அவர்கள் பெரும்பான்மை இனத்தவர்களாக இருந்தால் ஜனநாயக ஆட்சி அமைப்பின்படி அனேகமான நாடுகளில் அவர்களே அந்த நிலத்தை ஆள்கின்றனர். அரசியலமைப்பைப் பொறுத்து, சிறுபான்மை இனத்தவராக இருந்தால் சில நாடுகளில் இலைமறைகாயாக மெல்ல மெல்ல இவர்கள் ஒதுக்கப்பட்டு ஓரம் தள்ளப்படுகின்றார்கள். அப்படி ஒதுக்கப் பட்ட இன, மதத்தவர்களும், சொந்த நாட்டில் அரசியல் முரண்பாடு கொண்டவர்களுமே பெரும்பாலும் கனடா நோக்கி வந்தனர். தொடக்கத்தில் எந்தவித கட்டுப்பாடும் இல்லாமல் கனடாவில் மக்கள் குடியேறினாலும், தற்போது கனடிய சட்ட திட்டங்களுக்கு அமையவே மக்கள் உள்ளேவர அனுமதிக்கப் படுகின்றனர்.

ஈழம், இலங்கை, இலங்காபுரி, நாகதீபம், செரெண்டிப், தப்ரபோன், சிலோன் என்றெல்லாம் பல பெயர்களால் காலத்திற்குக் காலம் அழைக்கப்பட்ட ஸ்ரீ லங்காவும் இதற்கு விதிவிலக்கல்ல. இலங்கையில் வாழும் பழங்குடிமக்களான வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த ஈழத் தமிழ் மக்களின் வரலாறு சொந்த மண்ணிலேயே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்ல எடுத்துக்காட்டாகும். அவர்கள் இலங்கையில் வந்தேறு குடிகள் அல்ல என்பதற்குப் பல சரித்திரச் சான்றுகள் உண்டு. மற்றவர்கள் என்ன சொல்வார்களோ என்ற பயத்தில் நம் முன்னோர்கள் எதையுமே எழுதி ஆவணப்படுத்த முன்வரவில்லை. வெளிநாடுகளின் ஆளுமைக்குள் பல காலம் கட்டுண்டு கிடந்ததாலோ என்னவோ, ஈழத்தமிழர்கள் சிலரிடம் அதே அடிமைத்தனம் இன்னும் இருப்பதும் இதற்கு ஒரு காரணமாகும். ஈழத்தமிழர்கள் பற்றிய சிறந்த ஆவணங்கள் பல வேண்டுமென்றே சிலரால் ஒதுக்கப்பட்டதையோ, அல்லது திரிபுபடுத்தப்பட்டதையோ நாங்கள் அப்போது கவனத்தில் கொள்ள வில்லை. நாங்கள் விட்ட பெரிய தவறும் அதுதான்! அதனால்தான் ஒரு கட்டத்தில் சொந்த மண்ணிலேயே முகவரி அற்றவர் களாக ஈழத்தமிழர்களை மாற்ற முயன்றார்கள்.

பல்லாயிரம் வருடங்களுக்குமுன் இந்தியாவோடு இணைந்திருந்த இலங்கை என்று சொல்லப்படும் பகுதி ஆழிப்பேரலையால் (Tsunami) பிரிக்கப்பட்டு ஒரு சிறிய தீவாக மாற்றப்பட்ட போது அக்கரையான தென்னிந்தியாவில் வாழ்ந்த தமிழர்களில் ஒரு பகுதியினர் நிலவாரியாகப் பிரிக்கப்பட்டனர். மொழி மட்டுமல்ல, இயற்கை தந்த மண், மரம் செடி கொடிகள் கூட தென்னிந்தியப் பகுதியோடு புவியியல் ரீதியாக ஒத்துப் போவதைச் சரித்திர சான்றுகள் நிரூபித்திருக்கின்றன. தென்னிந்தியாவில் இருக்கும் பனை மரங்கள் மட்டுமல்ல அங்கே உள்ள அதே ஆயுள்வேத மூலிகைகளும் இலங்கையின் வடபகுதியில் அதே மண்வளத்தோடு இருப்பதை அவதானிக்க முடியும். 'கடல் கொண்ட சங்கம்' என்பது போன்ற பாடல்வடிவில் எழுதப்பட்ட தகவல்களைக்கூட யாரும் அப்போது நம்பவில்லை. ஆனால் ஆழிப் பேரலை எங்கள் காலத்தில் எங்கள் கண் முன்னால் அழிவுகளைச் செய்தபோதுதான் நாங்கள் ஆழிப்பேரலை (26-12-2004) ஒன்று உண்டு என்பதை நம்பினோம். சுமார் 12 வருடங்களுக்கு முன்பாக இந்து சமுத்திரத்தைச் சுற்றியுள்ள நாடுகள் நில நடுக்கத்தால் ஏற்பட்ட ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டபோது, சுமார் 35,000 மேற்பட்ட மக்கள் ஸ்ரீலங்காவில் மட்டும் மாண்டுபோயினர். இதைப்போலவே இதை விடப் பெரிதான ஓர் ஆழிப்பேரலையும், நிலநடுக்கமும் ஏற்பட்டு இலங்கைத் தீவு பல வருடங்களின் முன் பிரிக்கப் பட்டிருக்கலாம் என்று நம்ப இடமுண்டு. சங்க இலக்கியங்கள் இதற்குச் சான்றாக இருக்கின்றன. ஆவணப்படுத்தப்பட்ட சரித்திரச் சான்றுகள் இல்லாவிட்டால், ஐதீகக் கதைகளும், நம்பிக்கைகளும் தானே ஆவணமாகின்றன.

வணக்கம்

(கனடா நாடு தனது 150 வது பிறந்த தினத்தைக் கொண்டாடும் இந்த வருடத்தில் 'கனடா வின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும்' என்ற கட்டுரையை விளம்பரம் பத்திரிகை யில் எழுதுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். கனடிய அரசின் ஆதரவுடன் 150 வது வருடக் கொண்டாட்டத்திற்காகத் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆங்கிலக் கதை களில் எனது கதையான "பிறீடம் இஸ் பிறீ இன் கனடா" (Freedom is Free in Canada) என்ற ஆங்கிலக் கதையும் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டுப் பிரசுரமாகி இருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். அன்புடன் - குரு அரவிந்தன்)

LOANS & MORTGAGES.... that meets your needs
$5,000...$35,000...$50,000...$100,000...1Million...
MORTGAGE ALLIANCE
Corporate Office:
2005 Sheppard Ave E.
Suite 200, Toronto ON M2J 5B4
Toll Free: 1-877-366-3487
- Commercial Mortgages.
- 2nd Mortgages.
- Construction Mortgages.
- Secured Credit line.
- Unsecured Loans.
SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
647-922-5704
Twitter @OK_Mortgages






# நினைவு கூர்வதோடு மட்டும் நின்று விடலாமா?

- ஆதித்தன் -

மே மாதம் என்றவுடன் தமிழ் மக்களின் நினைவுகளில் வருவது முள்ளிவாய்க்கால் துயரம் தான். 2009ம் ஆண்டிற்குப் பின்னரான மே மாதங்கள் இறுதிப் போரில் கொல்லப்பட்டு உயிரிழந்த மக்களை நினைவுகூர்வதாகவே அமைந்துள்ளன.

தாயகத்தில் வாழ்கின்றவர்கள் இறுதிப் போரில் உயிரிழந்தவர்களை மே 18ம் திகதி முள்ளிவாய்க்கால் சென்று சுடரேற்றி நினைவுகூர்கின்றனர். உலகம் முழுவதும் புலம்பெயர்ந்து வாழும் உறவுகளும் தாங்கள் வாழும் நாடுகளில் அத்தினத்தை சில நிகழ்வுகள் மூலம் நினைவு கூர்கின்றனர். ஆனால், உறவுகளை இழந்து தவிப்பவர்களின் வாழ்வு நிலை பற்றி அதிகம் யாரும் அத்தினத்தில் சிந்தித்துப் பார்ப்பது குறைவு. உள ரீதியாகவும், வாழ்வாதார உதவிகளின்றியும் வீழ்ந்து கிடக்கும் அவர்களைத் தூக்கி விடும் பணிகள் எந்தளவில் நடைபெற்று வருகின்றன என்பதும் கேள்விக்குறியே.

யுத்தம் முடிவுற்று எட்டு வருடங்களாகின்றன. பாதிக்கப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டவர்களாகவே வாழ்கின்றனர். குடும்ப உறுப்பினர்களான உழைப்பாளிகளை இழந்த குடும்பங்கள் இன்னும் தங்கள் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாத நிலையிலேயே உள்ளன. யுத்தத்தின் போது ஏற்பட்ட உடற் காயங்கள் மாறினாலும் பலர் மனக் காயங்களுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அக்காயங்கள் ஆற்றப்படுவதற்கான சரியான பொறிமுறைகள் மேற்கொள்ளப்படவில்லை.

அவ்வாறானதொரு பொறிமுறையை ஏற்படுத்துவதற்கான சிந்தனைகள் கூட இன்னமும் வெளிப்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. இது குறித்து உண்மையிலேயே, பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து சிந்திக்கின்ற ஒருசிலர் கவலை கொள்கின்றனர்.




அண்மையில், மனநல மருத்துவ நிபுணரான சிவதாஸ் பல்வேறு கருத்துக்களை தனது நேர்காணல் ஒன்றில் வெளிப்படுத்தியுள்ளார். அவர் மனநல சிகிச்சையளிக்கும் மருத்துவராக மட்டுமல்லாது, நேரடியாக மக்களோடு உறவாடி அவர்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டுள்ள சமூக சேவையாளராகவும் இருப்பதால் பல விடயங்களை ஆழமாக அவதானித்துள்ளார், அதனால், சிலவற்றை சற்று ஆத்திரத்துடனும் வெளிப்படுத்தினார்.

யுத்தம் முடிவுற்று எட்டு வருடங்களாகியும் அந்த இறுதி நாளை தமிழ்மக்களின் இழப்பின் நாட்களாக அடையாளப்படுத்தி, சுடரேற்றுவதிலும், சில சடங்குகளை மேற்கொள்வதிலும் மட்டுமே காலம் கழிந்துள்ளது. காத்திரமான செயற்பாடுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்று அவர் கூறுகின்றார். வட மாகாண சபை, வடக்கின் நிர்வாகத்தை நடத்தும் ஒரு மையம். அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த விதமான காரியங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

உண்மையில், வட மாகாணசபை அமைந்து மூன்று வருடங்களுக்கு மேலாகின்றது. இந்த மூன்று வருடங்களில் அது எதனை சாதித்திருக்கின்றது என்று பார்த்தால் எதுவுமில்லை என்றுதான் கூற வேண்டியுள்ளது. மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சிக்காலத்தில், வட மாகாண சபைக்கு அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்ற வாசகத்தையே வட மாகாணசபையினர் தொடர்ந்து உச்சரித்து வந்தனர். ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர் வட மாகாண சபை எதிர்பார்க்கும் முழுமையான அதிகாரங்கள் இல்லாவிடினும் சில காரியங்களை மேற்கொள்ளக் கூடிய வசதிகள் ஏற்பட்டுள்ளதை மறுக்க முடியாது.

உதாரணமாக, முன்னைய அரசாங்கம் இருந்தபோது, வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் தொடர்பு கொள்வதே சிக்கலான காரியமாக இருந்தது. புலம்பெயர்ந்து வாழும் மக்கள் வழங்குகின்ற சிறு நிதியுதவிகளை பெற்றுக்கொள்வதற்குக் கூடத் தடை போடப்பட்டது. இவ்வாறான கடுமையான தடைகள் தற்போது தளர்த்தப்பட்டுள்ளன. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சில வேலைத் திட்டங்களை வட மாகாணசபை மேற்கொள்ளலாம்.

வெளிநாட்டு அமைப்புக்களோ, புலம்பெயர் மக்களின் அமைப்புக்களோ ஒரு வேலைத் திட்டத்தை தாயகத்தில் மேற்கொள்வதானால் அதற்கான வசதிகளையும், தரவுகளையும் வழங்கி அவற்றின் நடவடிக்கையை ஊக்குவிக்கும் பணியை வடக்கில் வட மாகாண சபையே மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு ஏதும் நடைபெறுகின்றதா என்பது குறித்து யாருக்கும் தெரியாது.

போரினால் அதிகம் பாதிப்பிற்குள்ளான வட மாகாணத்தில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப அரசாங்கத்தை மட்டும் நம்பியிருப்பது தவறானது. அரசாங்கம்தான் எல்லாவற்றையும் செய்ய வேண்டும் எம்மால் எதுவும் இயலாது அதற்கான அதிகாரங்கள் எம்மிடமில்லை என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப்பதற்காக ஒரு மாகாண சபை தேவையா என்கின்ற கேள்வி பலருக்கும் எழுகின்றது.

இறுதிப் போரில் இறந்தவர்கள் குறித்த சரியானதொரு புள்ளிவிபரம் கூட வட மாகாணசபையிடம் இல்லை. மக்களின் இழப்புக்கள், பாதிப்புக்கள் குறித்த வகைப்படுத்தப்பட்ட விபரங்கள் கூட இருப்பதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் வடக்கில் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பிரதேசங்களில் முதலீடுகளை மேற்கொள்ளவோ, தொழிற்சாலைகளை அமைத்து வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கோ எவரும் முன்வரப்போவதில்லை. முதலீட்டாளர்களைக் கவரக்கூடிய திட்டங்கள், முன்மொழிவுகளை முன்வைக்க, நிபுணத்துவம் பெற்றவர்களைக் கொண்டு ஒரு பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும். ஆனால் இதுவரை அவ்வாறான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இன்று சாதாரண பொதுமக்கள் கூட இதனை உணரத் தொடங்கியுள்ளனர். அரசியல்வாதிகளின் நிகழ்ச்சிநிரலின் கீழ் நடைபெற்று வந்த போராட்டங்கள் தற்போது மக்கள் தாங்களாகவே முடிவெடுத்து நடத்தும் போராட்டங்களாக மாறியுள்ளன. இது ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம்.

அரசாங்கத்திற்கு எதிராக மட்டும் கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் மேற்கொண்ட மக்கள் இன்று தங்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் கோசங்களை எழுப்பும் நிலை ஏற்பட்டுள்ளது. காலப்போக்கில் இது தீவிர நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதற்கான தன்மைகளை அவதானிக்க முடிகின்றது. இழப்புகளின் துயரமும், இழப்புக்களால் ஏற்பட்டுள்ள மனக் காயங்களும் அடுத்த சந்ததிக்கும் கடத்தப்படுவதென்பது ஆபத்தானது. இன்று காணாமலாக்கப் பட்டவர்கள் நடத்தும் போராட்டங்களில் கண்களில் நீர் மல்க சிறு பிள்ளைகளும் பதாதைகளை ஏந்திக்கொண்டிருப்பதைக் காண்கின்றோம். இதனை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் சிந்திக்க வேண்டும். காணாமலாக்கப்பட்டவர்கள் பலர் உயிரோடு இல்லை என்கின்ற யதார்த்தத்தை உறவுகளை இழந்தவர்களுக்குப் புரியவைத்து அவர்களை வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்வது யார் என்கின்ற கேள்விக்கு விடை காண முடியவில்லை.

இந்த நிலையிலேயே சுடரேற்றலும், சடங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)

27 வது ஆண்டில் கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம் VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன், தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.
பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.


CreativeTravels.ca
Book with Trust and Confidence
குறைந்த விலை
100% உத்தரவாதம்
ஆசியா. அமெரிக்கா. ஐரோப்பா. ஆபிரிக்கா.
அவுஸ்ரேலியா. மத்திய கிழக்கு மற்றும் அனைத்து
நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்
tico.ca
Consumer protection for your travel investment
#50020450
விடுமுறைத் தொகுப்புக்கள் Vacation Packages
விமான சீட்டுக்கள் Flight Tickets
பயண பயணியர் கப்பல் சீட்டுக்கள் Cruise
விடுதிகள் Hotels
வாடகைக் கார்கள் Rental Cars
பயண காப்புறுதி Travel Insurance
சிறப்பு பயண காப்புறுதி Super Visa Insurance
விசா ஏற்பாடுகள் Visa Arrangements
LOWEST PRICE PROMISE
IATA
Accredited Agent
647-608-8647
www.CreativeTravels.ca
www.facebook.com/CreativeTravels.ca
info@CreativeTravels.ca
open 7 days a week
7 AM to 10 PM
Colombo: +94 76 708 8647
UK: +44 203 239 8647
Australia: +61 28 005 8647
Jaffna Office: +94 21 227 1647
CreativeTravels.asia (Pvt) Ltd.

# பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் இமானுவல் மக்ரான் வெற்றி!



பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நடைபெற்ற பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் லிபரல் சென்டிரிஸ்ட் கட்சியை சேர்ந்த இமானுவல் மக்ரான் வெற்றி பெற்றுள்ளார். இந்தத் தேர்தலை சர்வதேசம் அவதானித்துக் கொண்டிருந்தது. பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலுக்கான முதல் கட்ட வாக்குப்பதிவு கடந்த மாதம் 23ஆம் திகதி நடைபெற்றது. இதில் போட்டியிட்ட 11 வேட்பாளர்களில் லிபரல் சென்டிரிஸ்ட் கட்சியை சேர்ந்த இமானுவல் மக்ரான் உம், தீவிர வலதுசாரி தேசியவாத தலைவர் மரைன் லெ பென்னும் அடுத்த சுற்றுக்கு வெற்றி பெற்றனர். இந்நிலையில், இறுதிச் சுற்றுக்கான வாக்குப்பதிவு மே 07, 2017 இல் நடைபெற்று ஜனாதிபதியாக முன்னாள் பொருளாதார அமைச்சரான இமானுவல் மக்ரான் வெற்றி பெற்றுள்ளார்.

இமானுவல் மக்ரான் பிரான்ஸ் வரலாற்றில் புதிய சாதனையைப் படைத்திருக்கிறார். குறைந்த வயதில் (39) அந்த நாட்டின் ஜனாதிபதியாக தெரிவாகியவர் இவர். வரலாற்றில் முதன்முறையாக ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன இந்தத் தேர்தலை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வந்தன.

சோசலிஸ்ட் கட்சியிலிருந்து விலகியவர் 'En Marche' என்ற தனது சொந்தக் கட்சியை ஒரு வருடத்திற்கு முன்பு ஆரம்பித்தார். அவர் முதல் தடவையாக முக்கிய இரண்டு தரப்பு கட்சிகளையும் முதல் சுற்றில் வென்றிருந்தார். இந்த தேர்தலில் வெற்றி பெற்று பிரான்ஸ் ஜனாதிபதியாகி இவர் வரலாறு படைத்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டு வரலாற்றில் 1958 ஆம் ஆண்டு முதல் பெரும்பான்மை பெற்ற இரண்டு முக்கிய கட்சிகள் மட்டுமே தொடர்ந்து ஆட்சியை பிடித்து வந்துள்ளன. ஆனால், இந்த வழக்கத்தை உடைத்த மக்ரான் எதிரணி வேட்பாளரான லீ பென்னை தோல்வி அடையச் செய்து சுமார் 65 சத விகித வாக்குகள் மூலம் வெற்றி பெற்றுள்ளார்.
பிரான்ஸ் நாட்டை வழிநடத்திய நெப்போலியன் போனபர்ட்டிற்கு பிறகு மிகவும் இளம் வயதில் உயரிய பதவிக்கு வந்தவர் இமானுவேல் மக்ரான் தான். இதன்மூலம் சர்வதேச அளவில் இளம் தலைவர்களின் பட்டியலில் மக்ரான் 4வது இடத்தைப் பிடித்துள்ளார்.

தேர்தல் பிரச்சாரத்தின்போது புதிய ஜனாதிபதி மக்ரான் அகதிகளுக்கு ஆதரவாக செயல்படுவது பற்றி ஒரு உறுதியான நிலைப்பாட்டினை வெளிப்படுத்தினார்.

அண்டை நாடான ஜேர்மனியின் சான்சலர் அகதிகளுக்கு அடைக்கலம் அளித்து வருவதை மக்ரான் வெகுவாகப் பாராட்டியுள்ளார். மக்ரானை எதிர்த்துப் போட்டியிட்ட லீ பென் 'அகதிகளுக்குப் புகலிடம் அளிப்பதில் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும்'என வலியுறுத்தியுள்ளார். ஆனால், இதனை மக்ரான் வரவேற்கவில்லை. இது குறித்து மக்ரான் பேசியபோது, 'பிரான்ஸ் நாட்டில் அகதிகளுக்குப் புகலிடம் அளிப்பதில் எவ்வித மாற்றுக்கருத்துக்கும் இடம் இல்லை.

பாதுகாப்பு தேவைப்படும் அகதிகளுக்கு நிச்சயமாக பிரான்ஸ் அடைக்கலம் வழங்கும். ஆனால், தகுதி இல்லாத புலம்பெயர்ந்தவர்கள் உடனடியாக தாய்நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள். புலம்பெயர்ந்தவர்களின் கோரிக்கையை அடுத்த 6 மாதங்களுக்குள் பரிசீலிக்கப்படும் எனவும் இமானுவேல் மக்ரான் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இமானுவல் மக்ரான் தன்னை விடவும் 24 வயது மூத்த உயர்நிலைப் பாடசாலை ஆசிரியரை திருமணம் செய்துள்ளார். தனது 15

(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...)

WORLD FAMOUS ADIVASI TRIBAL CHIEF
NOW AT YOUR SERVICE
No side Effects
P V RAJU (BAMS)
Vaidhya
Herbal & Ayurvedic
* பரம்பரைபரம்பரையாக இத்தொழிலை செய்து வருகின்றோம். நோயை கண்டறிந்து வைத்தியம் செய்கின்றோம்.
* சகயா இரக்கல் மூலிகை எங்களிடம் உள்ளது.
100 வீதம் நம்பகத்தன்மை கொண்ட பாரம்பரிய இந்திய சிகிச்சை முறை
நாடித்துடிப்பு பரிசிக்கப்படும். தேகப்பயிற்சி மற்றும் [illegible] ஆகியவை தேவையில்லை
உங்கள் ஒவ்வொரு பிரச்சனைக்கும் இங்கே தீர்வு உண்டு
ஆஸ்த்துமா — ஒவ்வாமை
தோல் வியாதிகள் — சொறாய்சஸ்
பாரிச வாதம் — உடல் பலவீனம்
மூட்டு வலிகள் — முதுகு வலி
சிறுநீரக பிரச்சனைகள் — சிறுநீர் தொடர்பான பிரச்சனைகள்
வாயு சிக்கல்கள் — அல்சர் வியாதி
இரத்தக் கொதிப்பு — நீரிழிவு நோய்
பெண்கள் நோய்கள் — சிறுவர்களுக்கான நோய்கள்
பாலியல் தொடர்பான பிரச்சனைகள்... இன்னும் பல
வாரத்தில் ஏழு நாட்களும் காலை 10.00 தொடக்கம் இரவு 8.00 மணிவரை திறந்திருக்கும்
Member of All India Alternative Medical Academy (Regd.)
Member of All India Sidha Doctors Association (Regd.)
Member of All India Alternative Medical Practitioner (Regd.)
Adivasi Tribal Chief Herbal Medicines Practitioner (Regd.)
Regd. No. 12222

100% GENUINE TRADITIONAL INDIAN TREATMENT
SAHAJA AYURVEDIC (HERBAL) MEDICINES CENTRE

P V RAJU (BAMS)
Vaidhya
PULSE CHECKUP AVAILABLE

TREATMENTS GIVEN FOR
Asthma, Allergy, Skin Problems, Psoriasis, Hair Problems, Paralysis, Weekness
Joint Pains, Back Pain, Artheritis, Weight Loss, Weight Gain, Kidney Problems, Urinary Problems
Gas Trouble, Ulcer, Blood Pressure, Diabetes, Ladies Problems, Childrens Problems, Sexual Problems
YOU WILL GET PERMANANT RELIEF FROM ALL YOUR HEALTH PROBLEMS
Certified Member of All India Sidha Doctors Associaton (Regd.)
Certified Adivasi Tribal Chief Herbal Medicines Practitioner (Redg.)
Excercises, Belts & Massages are Not Required
FOR EVERY PROBLEM HERE IS A SOLUTION
100% NO SIDE EFFECTS
100% SOLUTIONS GUARANTEE
We Can Speak Tamil Hindi English
Call for An Appointment
Vaidhyar : P V RAJU
2619 Eglinton Ave East, Scarborough ON M1K 2S2
(Upstairs Abbirami - Brimley & Eglinton)
Mobile: 416-617-6364
Privacy & Confidenciality is provided
Open 7 Days a Week 9.00 a.m. to 9.00 p.m.

# நாமும் நமது இல்லமும் - 487

## ஒன்ராரியோவின் நியாயமான ஆதனத் திட்டம்

ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397
416.321.6969



ஒன்ராரியோவில் ஆட்சியில் இருக்கும் லிபரல் அரசு, ஏப்ரல் 21, 2017 ஆம் திகதியிலிருந்து தனது 16 அம்சத்திட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வந்ததனை விளம்பரம் வாசகர்கள் அறிந்திருப்பார்கள். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி ஏறக்குறைய மூன்று கிழமைகள் கடந்த காலகட்டத்தில் இதன் சாதக, பாதகங்களை இதில் பார்க்கலாம். பதினாறு திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அனேகரினாலும் பெரிதாக ஆராயப்பட்டது, வெளிநாட்டு வாங்குபவர்களிற்கான மேலதிக 15% (Non Residents Speculation Tax). இவ்வாறான வரி வன்கூவரில் (2016 ஒகஸ்ட் 2இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து வன்கூவரில் ஆதன விற்பனையில் 40% இறக்கம் ஏற்பட்டது. கடந்த ஆறு மாதங்களில் விலையில் 10% இற்கு குறைவான இறக்கமே ஏற்பட்டது.

ஆனால் வன்கூவரில் கொண்டுவரப்பட்ட நிலமாற்றுவரி, வாங்குபவர்கள் மீது அறவிட்ட முறைக்கும், ரொறன்ரோ பெரும்பாகத்திலும் அதனைச் சுற்றிய பாகத்திலும் (Greater Golden Horseshoe) கொண்டுவந்த முறைக்கும் நிறைய வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

ரொறன்ரோவில் வெளிநாட்டு வாங்குபவர்களுக்கு அதிக அனுகூலங்கள் இருப்பதால் மேலதிகமாக (15%) செலுத்திய பணத்தை திரும்பப் பெறக்கூடிய பல வசதிகள் இதில் உண்டு. இதனால் ரொறன்ரோ பெரும்பாக நிலமாற்றுவரி எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனை உடனடியாகக் கூறமுடியாது.

எனினும், கடந்த மூன்று கிழமைகளில் இதன் பாதிப்பை அல்லது தாக்கத்தை நடைமுறையில் காணக்கூடியதாக உள்ளது. ஏற்கனவே, அதாவது இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் ஏற்பட்ட விலை அதிகரிப்பு, வியாபார அதிகரிப்பு, போட்டி போட்டு ஆதனம் வாங்கிய மனநிலையில் பெரிய மாற்றம் தெரிகின்றது. இதுவரை பெரிதான தகவல்களை Toronto Real Estate Board வெளியிடவில்லை. ஆனாலும் வியாபாரத்தில் சிறிய இறக்கம் தெரிவதனை ஆதன வியாபாரத்துடன் தொடர்புள்ளவர்களுடனான தொடர்பாடல்களில் இருந்து இலகுவாக அறியக் கூடியதாக உள்ளது.

அண்மைக்காலங்களாக கனடிய மூன்று மட்ட அரசுகளினதும் தொடர் நடவடிக்கைகளால் ஆதன வியாபாரத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கான பல நடவடிக்



கைகள் எடுத்து வரப்பட்டன. இதன் தாக்கங்கள் நிச்சயமாக எதிர்காலத்தில் தெரியவரலாம். புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வாடகைக்கட்டுப்பாடு வாடகைக்கு கொடுப்பதற்காக கட்டப்படும் அடுக்குமாடி கட்டிடங்களின் எண்ணிக்கையில் இறக்கம் ஏற்படலாம். 1991 இற்கு பிற்பாடு கட்டப்பட்ட வாடகைக் கட்டிடங்களில் அதன் முதலாளிகளுக்கு வாடகையை இலகுவாக அதிகரிக்கக்கூடிய பல வசதிகள் காணப்பட்டன. ஆனால் புதிய நிலைப்பாட்டின் பிரகாரம் அதிகரிக்கப்படும் வாடகை, பணவீக்கத்துடன் தொடர்பு ஏற்படுத்தியதுடன் ஆகக்கூடியதாக வருடத்திற்கு 2.5% ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. புதிய அம்சத்திட்டத்தில் ஒவ்வொரு உள்ளூராட்சிகளும் மேலதிக வரியை அறவிடப்படுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அதாவது வாங்கப்பட்ட ஆதனம் பாவனைக்கு விடாது மூடிய நிலையில் (Vacancy Tax) வைத்திருக்கும் போது அதற்கான வரியை செலுத்த வேண்டிய வரும். அத்துடன் இதுவரை, வாங்கி விற்கப்படும் ஆதனங்களின் வியாபாரத்தில் சில சட்ட ஓட்டைகளால் (B-Lenders) பலர் அரசிற்கு செலுத்த வேண்டிய வரிகளில் ஏப்பம் விட்டு வந்துள்ளார்கள். இதனைத் தடுப்பதற்கான புதியமுறை சட்டத்தரணிகளினூடாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை இலகுவாக இரண்டாந்தர நிறுவனங்களால் பெற்றுவந்த அடமானக் கடன் பெறும் வழிவகைகளிலும் இறுக்கம் ஏற்பட்டுள்ளது. அடமானக் கடன் பெறுவதில் மேலும் இறுக்கம் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகவே காணப்படுகின்றன.

ஏற்கனவே இரண்டாம் நிலையில் இருக்கும் அடமானக்கடன் கொடுக்கும் நிறுவனங்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான நிலைமை மற்றைய நிதி நிறுவனங்களின் மீதும் ஏற்படலாம். அடமானக்கடன் பெறும்நிலை இறுக்கமாகும்

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)

NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.

• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்

KABIS
KABIS & ASSOCIATES INC.




உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.

Does your current life insurance policy need a tune up please call me.

**Nimal Subramaniam**
Cell: 416.816.7994 Email:neel900@hotmail.com

La Capitale Financial Group · IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Assumption Life

•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA



# அத்தனைக்கும் ஆசைப்படு!

## சத்குரு வாசுதேவ்

உங்கள் ஊரில் பகவத் கீதையையோ, பைபிளையோ, குரானையோ யாராவது எரித்துவிட்டால், என்ன நேரும்? பதிலுக்கு நகரத்தையே சிலர் எரித்துவிடுவார்கள்.

உங்கள் கடவுள் சொன்னதாக நீங்கள் கொண்டாடும் ஒரு அச்சிட்ட புத்தகம், அதே கடவுளால் படைக்கப்பட்ட சக மனிதனை விட மேலானதாகத் தோன்றிவிடுகிறது... ஏன்?

உங்களிடம் கடவுள்களைப் பற்றிப் பேசியவர்கள் உணர்ச்சிகரமாக அந்தப் புத்தகங்களைப் பற்றி சொல்லிச் சொல்லி, அவற்றைப் புனித நூல்கள் என்று உங்களை நம்ப வைத்திருக்கிறார்கள்.

கடவுள்கள் சொல்லிவிட்டுப் போனதாக எழுதப்பட்டிருக்கும் அந்த நூல்களில் புனிதம் இல்லை என்று நான் சொல்லவில்லை. அவை உண்மையில்லை என்றும் நான் மறுக்கவில்லை. ஆனால், அவற்றிலிருந்து ராமனையோ கிருஷ்ணனையோ ஏசுவையோ நீங்கள் ஒரு முன்னோடியாக வைத்து, வாழ்க்கையை முழுமையாகத் தெரிந்து கொள்ளும் உங்கள் ஆர்வத்தை வளர்த்துக்கொள்ளலாம். அவ்வளவு தான்!

மற்றபடி, அவர்கள் சொன்னதை வாசித்துவிட்டாலே நீங்கள் உயர்ந்து விடுவீர்கள் என்ற நம்பிக்கை மூடத்தனமானது என்றுதான் சொல்கிறேன். அப்படியென்றால், அவர்கள் எதற்காக அவற்றைச் சொன்னார்கள்?

ஒரு நல்ல ஜோக்கைக் கேட்கிறீர்கள். ஒரு நல்ல புத்தகத்தைப் படிக்கிறீர்கள். ஒரு சுவாரஸ்யமான சினிமாவைப் பார்க்கிறீர்கள்... உடனே என்ன செய்வீர்கள்? நீங்கள் ரசித்ததை யாரிடமாவது பகிர்ந்துகொள்ள வேண்டுமென்ற தாகம் உங்களுக்குள் எழுகிறது அல்லவா? ஆனந்தமானதோர் அனுபவத்தைப் பெறும்போது, அதை நெருக்கமானவர்கள் யாரிடமாவது பகிர்ந்து கொள்ளும் தவிப்பு உண்டாகிறதல்லவா? உங்கள் மதப்புத்தகங்களும் அப்படி உருவானவை தான்.

யாரோ சிலர், மிக அற்புதமான அனுபவங்களைப் பெற்றார்கள். அதை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்பினார்கள். அவற்றைப் புத்தகமாக எழுதினார்கள். சுலோகமாகச் சொல்லி வைத்தார்கள். அல்லது வேறு ஏதோ ஒரு வடிவத்தில் அதைப் பதிவு செய்தார்கள்.

அவை உங்கள் உயிரும் வாழ்கையும் எவ்வளவு மேன்மையாக அமைய வேண்டும் என்றுதான் சொல்ல முற்பட்டிருக்கின்றான்.

அதை மறந்துவிட்டு, அடிப்படை நோக்கத்தையே செயலிழக்கச் செய்யும் விதமாக, உடன் வாழும் மனிதரையே எரிந்து விடுகிறீர்கள்....அது எப்பேர்ப்பட்ட முட்டாள்தனம்?

ராமனோ, கிருஷ்ணனோ, நபிகளோ, ஏசுவோ தங்கள் புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்தி ஆழமான உண்மைகளை அனுபவங்களால் உணர்ந்து கொண்டார்கள். ஆனந்த வாழ்க்கையை வாழ்ந்தார்கள். அதனால்தான் உயர்ந்த நிலைக்கு போனார்கள்.

ஆனால், நீங்கள்? பகவத்கீதையைப் படித்து முடித்ததுமே, ஞானம் பெற்றுவிட்டதைப் போல நினைத்துக்கொள்கிறீர்கள். உண்மையைப் புரிந்துகொண்டவர் போல் கதை அளக்கிறீர்கள். இது எப்படி இருக்கிறது தெரியுமா?

சங்கரன் பிள்ளை வெளியூரி ஒரு கடற்கரைக்குப் போயிருந்தார். அங்கே அற்புதமான தென்றல் வீசிக்கொண்டிருந்தது. வெறெங்கும் அவருக்கு அத்தனை சந்தோசம் கிடைத்ததில்லை. தனக்குக் கிடைத்த அனுபவத்தை தன் மனைவியிடம் உடனே பகிர்ந்து கொள்ள விரும்பினார் அவர். ஆனால் அவர் மனைவி அப்போது சிகிச்சைக்காக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தாள். சங்கரன்பிள்ளை ஒரு சவப்பெட்டியை வாங்கினார். அதில் கொஞ்சம் கடற்கரை மணலை நிரப்பி, காற்றையும் அப்படியே பிடித்து பெட்டியை மூடி சீல் வைத்தார்.
'நான் அனுபவித்த தென்றலை நீயும் அனுபவிக்க, உனக்கு இதைக் காதலுடன் அனுப்பி வைக்கிறேன். இந்தப் பெட்டிக்குள் படுத்து, அழுத்தமாக மூடிக்கொள். கடற்கரையில் அமர்ந்து காற்றை ரசிக்கும் அனுபவம் உனக்கும் கிடைக்கும்' என்று ஒரு குறிப்பை எழுதி. அந்தப் பெட்டியை தன் மனைவிக்கு அனுப்பினார்.

அப்புறம் அவர் என்ன கதி ஆகியிருப்பார் என்று சொல்ல வேண்டுமா?

புனிதப் புத்தகங்களைப் படித்துவிட்டதாலேயே அதே அனுபவங்கள் உங்களுக்குக் கிடைத்துவிட்டதாக நீங்கள் அறிவித்துக் கொள்வதற்கும், சங்கரன் பிள்ளை அனுப்பிய பெட்டிக்குள்' போய்ப் படுத்துக் கொண்டு கடற்கரைத்தென்றலை அனுபவிப்பதற்கும் பெரிய வித்தியாசம் இல்லை.

அவருக்குக் கிடைத்த அனுபவத்தை உண்மையில் அனுபவிக்க வேண்டுமானால், அந்தக் கடற்கரைக்கு எப்படிப் போவது என்பதை அல்லவா நீங்கள் தெரிந்துகொள்ள முற்பட வேண்டும்?

மகான்கள் தங்கள் வாழ்க்கையில் நேர்ந்த அற்புதமான அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள பதிவுசெய்துவிட்டுப் போயிருப்பவையே மறை நூல்கள்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

அந்தப் புனித நூல்களை மனப்பாடம் செய்து ஒப்பிப்பதல்ல வளர்ச்சி! அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை உங்கள் அனுபவத்தால் உணர முயலுங்கள்.

உங்கள் வாழ்க்கையை நீங்களே வாழ ஆரம்பியுங்கள். உண்மையை நீங்களே உய்த்து உணர முற்படுங்கள்.

சரி, உண்மையைப் புரிந்துகொள்ள முதலடியை எங்கே வைப்பது?

சொல்கிறேன்!

## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

### 'ஆசையினால்தானே பிரச்சினைகள்?'

'எதற்காவது ஆசைப்பட்டீர்களென்றால் அது தடையில்லாமல் கிடைக்க வேண்டும் என்ற அச்சம் உங்களைச் செலுத்துகிறது. உங்களால் கையாள முடியாத சூழ்நிலைகளை எதிர்கொண்டால், அவற்றைப் பிரச்சினைகள் என்று முத்திரை குத்தி விடுகிறீர்கள். உண்மையில் பிரச்சினை என்பது வெளியில் இல்லை. உங்கள் மனதில் தான் இருக்கிறது.

உணவு கிடைக்கவில்லையா? இன்றைக்கு ஏகாதசி என்று நினைத்துக் கொள்ளுங்கள். அப்புறம் ஏது பிரச்சினை?

தடைகளே இல்லை என்றால், வாழ்க்கை சப்பென்று அல்லவா இருக்கும்.

ருசியே தெரியாமல், உணவையெல்லாம் நேரே வயிற்றுக்குள் செலுத்துவதையா விரும்புகிறீர்கள்?

வாழ்க்கையை ருசித்து அனுபவிக்காமல் பலன்களை மட்டும் பரிசாகக் கேட்பது என்ன நிச்சயம்?'




*4 day Inner Engineering Program*

*led by an Isha teacher trained by Sadhguru*
*Coming to Toronto in 2 locations – June 15 - 18, 2017*

TIMINGS: Thursday June 15 : 6:30pm – 9:45pm
Friday June 16 : 6:30pm – 9:45pm
Saturday June 17 : 8:30am – 7:00pm
Sunday June 18 : 7:30am – 7:00pm

*VENUE* - ***Richmondhill:*** - Elegance Banquet Hall
10 Newkirk Rd, Richmond Hill (Toronto), ON L4C 5S3

***MISSISSAUGA*** - Swagat Banquet Hall,
6991 Millcreek Drive, Mississauga (Toronto), ON L5N 6B9

*Email: toronto@ishafoundation.org / Phone: 416 300 3010*
*Online registrations: www.innerengineering.com/live/toronto*

# 'கடன் வசூல் முகவர் நிறுவனம்' உண்மையான கடன்காரனையா துரத்துகின்றது?

## கனடிய தகவல் தொடர் 267



சிவ. பஞ்சலிங்கம், B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999

**(Harassment from credit collection agency)**

'கடனேயில்லாத கனடியர்களை கடன் வசூலிக்கும் முகவர் நிறுவனம் தொல்லைப்படுத்துகின்றது.' ('Collection agency harass ed debt free Canadians') என்ற தலைப் பில் ஒரு புலனாய்வு செய்திக் கட்டுரை பிர பல ஆங்கில ஊடகமான சி.பி.சி. (C.B.C news) செய்திப் பிரிவில் வெளிவந்திருந்தது.

'விளம்பரம்' வாசகர்களுக்கும் இதேமாதிரியான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கலாம் என்ற ஐய உணர்வில், இது தொடர்பான விடயங்களை அறிந்து பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு ஏற்பட்டது.

திரு. டேவ் ஜோன்சன் (Mr. Dave Johnson) 61 வயதானவர். கனடாவில் 'பெம்புருக்' (Pembroke) நகரில் வாழ்பவர். றோயேர்ஸ் கம்பனிக்கு (Rogers) செலுத்தாத கட்ட ணம் மொத்தமாக $5,400 செலுத்தும்படி, அவர்கள் சார்பில் கடன் வசூலிக்கும் முகவர் நிறுவனம் ஒன்று அவரை துரத்தத் தொடங்கியது. ஆனால் அவருக்கு றோயேர்ஸ் கம்பனியோடு ஒரு கணக்குமில்லை. எதுவிதமான தொடர்பும் ஒருபோதும் இருந்ததில்லை என் பதனை மட்டும் தெரிந்துவிட்டு அமைதியாக இருந்துவிட்டார். ஆனால் இந்தவிடயம் அவரின் கடன் வரலாற்று பதிவுகளில் பதியப்பட்டுவிட்டது. இதனால் சில கடன் அட்டைகள் எடுப்பதில் அவருக்கு சிக்கல்கள் ஏற்பட்டது. தனது மகனின் அடமானக் கடன் ஒன்றுக்கு உத்தரவாதம் வழங்கபோனதுபோது வங்கி அதனை ஏற்க மறுத்துவிட்டது. இந்தப் பிரச்சியினை புலன் விசாரணைக்கு அவர் வெளிக்கொணர்ந்தபோதே அது இன்னொரு 'டேவ் ஜோன்ஸன்' என்ற பெயரில் உள்ளவர் என்பது தெரியவந்தது. அது இவருடைய பெயரில் தப்பாக எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதும் வெளிச்சத்திற்கு வந்தது. இப்படிப் பல பேருக்கு சம்பவங்கள் நடந்துள்ளன. இதனைப்பற்றி பல கதைகள் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஜோன்ஸன் களத்தில் இறங்கி, தட்டிக் கேட்டு நியாயம் பெற்றார். இது சகலருக்கும் சாத்தியமாகுமா?

கனடாவில் வர்த்தக நிறுவனம் ஒன்று வாடிக்கையாளர்கள் விடயங்களில் ஏதாவது தவறு செய்தால் பின்வரும் மாகாண அமைச்சகத்தில் உள்ள நியாயமன்றத்திற்கு எடுத்து வாருங்கள். விசாரித்துத் தீர்வு பெற்றுத் தருவோம் என்ற உறுதிப்பாட்டில் அவர்களின் கதவுகள் பொது மக்களுக்காக திறந்த வண்ணம் உள்ளது.

அதன் விபரம் பின்வருமாறு!
Ministry of Government Consumer Services
Consumer Services, Analytics & Partnership Branch
77 Wellesly St. West, P.O Box 450
Toronto - ON M7A 2J1
Phone - 1-800-889-9967 / 416-326-8800

மாகாணத்தில் உள்ள ஏராளமான வர்த்தக நிறுவனங்களுக்கு எதிராக பாதிக்கப்பட்ட நுகர்வோரின் முறைப்பாடுகள் இங்கு வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அவற்றில் கடன் வசூலிக்கும் முகவர் நிறுவனத்திற்கு எதிரான முறைப்பாடுகளே ஒவ்வொரு வருடமும் அதிகமாக இருக்கும் என அமைச்சின் புள்ளி விபர தகவல்களில் வெளியிடப் பட்டுள்ளன.

கடன் வசூலிக்கும் முகவர் நிறுவனங்களுக்கு (Credit Collection Agencies) எதி ராக கடந்த வருடங்களில் மாகாண நுகர் வோர் அமைச்சுக்கு வந்த மொத்த முறைப் பாடுகளின் எண்ணிக்கை.

2004ஆம் ஆண்டு - 5106 பேரின் முறைப்பாடுகள்
2005ஆம் ஆண்டு - 4533 பேரின் முறைப்பாடுகள்
2006ஆம் ஆண்டு - 4170 பேரின் முறைப்பாடுகள்
2007ஆம் ஆண்டு - 3549 பேரின் முறைப்பாடுகள்
2008ஆம் ஆண்டு - 4132 பேரின் முறைப்பாடுகள்
2009ஆம் ஆண்டு - 4764 பேரின் முறைப்பாடுகள்
2010ஆம் ஆண்டு - 5041 பேரின் முறைப்பாடுகள்
2011ஆம் ஆண்டு - 4512 பேரின் முறைப்பாடுகள்
2012ஆம் ஆண்டு - 4265 பேரின் முறைப்பாடுகள்

பொதுவாக பாரிய வர்த்தக நிறுவனங்கள் தங்களினால் பல வாடிக்கையாளர்டமிருந்து அறவிடமுடியாத கடன்களை அறவிட கடன் வசூல் முகவர் நிறுவனங்களோடு வர்த்தக ஒப்பந்த அடிப்படையில் நாடுவது உண்டு. வழங்கப்பட்ட கடன்காரர்களின் விபரங்களை வைத்துக் கொண்டு அவர்களை தேடிப் பிடித்து துரத்துவார்கள். அதில் நிரபராதிகளும் அகப்படுவார்கள். அடுத்ததாக கடன் வசூலிக்கும் சகல முகவர் நிறுவனங்களும் சட்டரீதியாக இயங்குகின்றவையா? சட்ட ஒழுங்கு விதிகளை அனுசரித்து தொழில்படுகின்றனரா? என்பது அடுத்த கேள்வியாகும்.

'கடன வசூல் முகவர் நிறுவனம்' (Credit Collection Agency)
இவ்வாறு ஒரு நிறுவனம் கனடாவில்

(தொடர்ச்சி 35 ஆம் பக்கம்...)



# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*




## மயக்கத்தின் மர்மம் என்ன?

### (Faint - Unconsciousness)

எமக்கு ஏற்படும் மயக்கநிலையானது மூளைதொடர்பானது எனப்பலர் கருதுவதுண்டு. பெரும்பாலும் காதின் தொடர்பாட்டினால் மயக்கம் கூடுதலாக ஏற்படுகின்றது. மற்றும் நரம்பு சம்பந்தமான தாக்கத்தினாலும் மயக்கம் வருவதற்கு இடம் உண்டு. சோர்வு, தூக்கம் இன்மை, பசி, தலைப்பாரம் போன்றவை நிலையற்ற மயக்கமாகும். எனவே காது தொடர்பான குறைபாடு என்பதைப் பார்க்கும்போது காதில் இருந்து மூளைக்குச் செல்லும் நரம்புப்பிரச்சினை முக்கியமானது. நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்றவற்றினால் நம் கட்டுப்பாட்டை மீறி உடலின் சமநிலை குலைவதே மயக்கம் (Giddiness) எனக் கூறலாம்.

பொதுவாக ஒருநோய் ஏற்படும் இடம், ஒன்றாக இருக்கும். ஆனால் காதுகளில் இருந்து ஏற்படும் மயக்கம் விசித்திரமாக உடலின் வேறு பகுதிகளில் அறிகுறிகளைக் காண்பிக்கும். கண்களில் வலி, வாந்தி வருவது போன்ற உணர்வு, நெஞ்சில் படபடப்பு போன்றவை தென்படும். இதன் பொருட்டு உரியவர்கள் கண் பரிசோதனை, இருதயநல மருத்துவம், நரம்பியல் மருத்துவம் போன்ற இடங்களுக்குச் சென்று பரீட்சித்துப் பயன் பெறாமல், காதை பரிசோதிக்கும் வைத்தியரிடம் காதைப் பரிசோதித்து பயன் பெற்றோர் பலருண்டு. எனவே காதின் குறைபாட்டால் ஏற்படும்

மயக்கநிலையை பற்றி அறிவது முக்கியமாகும். காதில் மூன்று பகுதிகள் உண்டு. அதாவது வெளிக்காது, நடுக்காது, உட் காது என்பனவாகும். இவை மூன்றைக் கூறியகொடுக்கின்றது. காதுக்குள் இருக்கும் இந்த உட்பகுதி யிலே 5 பகுதிகள் இயங்குகின்றது. இதில் ஏதாவது ஒன்று பாதிப்பு நிலையில் இப்பதை அறிய முடியும். எதற்கும் உரியவர்



பாதிலும் மயக்கம் ஏற்படும் நிலை யில் காதை இருபகுதியாகப் பிரிக்கலாம்.

ஒன்று அரைவட்ட வடிவக்குழாய்ப்பகுதி (Semi circle canal) அடுத்தது கொக் ஸியா (Cochlear)என்ற பகுதியாகும். இதன் பகுதிகளை நன்கு பரீட்சித்துப் பார்த்தால் எதனால் இந்நிலை ஏற்படுகி ன்றது என்பதை அறியமுடிகின்றது. இன்னும் கூறுவதானால் அரைவட்ட வடிவுக்குள் சுழன்று கொண்டிருக்கும் 'Endolymph' என்ற திரவம்தான் நமக்குச் சமநிலையைக்

விபரமாக வைத்தியர்களிடம் நிகழவ தைக் கூறினால் தாமதிக்காமல் சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்வது நன்று.

மேலும் சிறுநீர்க்கோளாறு, தைரொயிட் குறைபாடு போன்றவற்றினாலும் மயக்க நிலை ஏற்பட இடம் உண்டு. மற்றும் மனப்பிரமை, அதிர்ச்சியான விடயங்களைத் தாங்கமுடியாத நிலையில் 'மன நிலை' சார்ந்த மயக்கமாக இருக்கும் எனக் கூறினாலும் நம்பமாட்டார்கள். ஆனால்

இளம் வயதினர் மயக்கத்தில் அதிகம் பாதிப்பதில்லை. நடுத்தரவயதினர் நோய் தொற்று, விபத்து போன்றவற்றினாலும் மயக்க நிலையடைவார்கள். வயது முதிர்ந்தோருக்கு மயக்கம் ஏற்படலாம். அதாவது நரம்பு தளர்ச்சி, இரத்தோட்டப் பிரச்சினை ஏற்பட்டு விழுந்து எலும்பு முறிவுகளும் ஏற்பட இடம் உண்டு. எதற்கும் உடன் சிகிச்சை பெற்றுக்கொள்வது சாலச் சிறந்தது. விசப்பாம்புகள் தீண்டினாலும் மயக்க நிலை ஏற்பட இடம் உண்டு. எதற்கும் காரணம் கண்டறியவேண்டும்.

மேலும் கூறப்போனால் சளித்தொல்லையாலும் மயக்கம் ஏற்பட இடம் உண்டு. அதாவது வைரஸ் கிருமியால் சுரம், சளிப் பிடிப்பு அதிகரித்து காது அடைப்பு நிலை ஏற்பட்டாலும் தலைப்பகுதி அடிபட்டாலும் மயக்கநிலை தென்பட இடம் உண்டு. மற்றும் காசநோய் போன்ற வியாதிகளுக்கு சிலவகை மருந்துகள் எடுக்கும் வேளையில் மயக்கநிலை ஏற்பட இடம் உண்டு என்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும்.

மேலும் தங்கள் வைத்தியர்கள் தங்களுக்கு உணவுமுறைகளைக் கூறும்போது அவற்றை முறையாகக் கையாள வேண்டும். அதாவது உடம்பில் உப்புச்சத்து, இரத்தத்தில் சர்க்கரை அளவு, எண்ணெய்வகை போன்றவற்றை ஏற்றுக்கொள்ளாதது போன்ற காரணத்தால் மயக்கநிலை ஏற்படலாம் எனக் கூறியிருந்தால் அவற்றைத் தவிர்த்துக் கொள்வது நன்று. சில உறுப்புக்களில் ஏற்படும் வியாதிகளைப் பொறுத்து மயக்க நிலை ஏற்பட்டிருந்தால் உரிய உறுப்புக்கள் காரணமாக இருந்தாலும் நிவிர்த்தி செய்வதற்காக சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நிலையும் ஏற்படலாம் எனவே எதற்கும் உரிய வைத்தியர்களை தாமதிக்காமல் சந்திப்பது மிக நன்று.

---

# பிரான்ஸ்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

வயதில் உயர்நிலைப் பாடசாலையில் வைத்து Brigitte Trogneux என்ற பெண்னை சந்தித்துள்ளார். அப்போது 39 வயதான அவர் மக்ரானுக்கு இலக்கிய ஆசிரியராக இருந்துள்ளார். இத்துடன் அவர் திருமணம் முடித்து மூன்று பிள்ளைகளின் தாயும் ஆவார்.

மக்ரான் ஒரு முதலாளித்துவ குடும்பத்தைச் சேர்ந்தவராவர். 11ஆம் வகுப்பில் கல்வி கற்ற Macronக்கு Trogneux நாடகம் ஒன்றை எழுத உதவியுள்ளார். இதற்காக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இருவரும் சந்தித்துள்ளனர். Macron தன்னுடைய இறுதி வருட கற்கையை நிறைவு செய்வதற்காக பாரிஸில் ஓர் உயர் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். "நீ என்னை விலக்கமாட்டாய். நான் திரும்பி வருகிறேன், நான் உன்னை திருமணம் செய்து கொள்கிறேன்," என்று அவர் பகிரங்கமாக கூறி விட்டு சென்றுள்ளார்.

தூரம் அவர்களை பிரிக்கவில்லை. இறுதியில் Trogneux தன்னுடைய முன்னாள் கணவனை விட்டுவிட்டு பரிசுக்கு சென்றுள்ளார். 2007 ஆம் ஆண்டு இவர்களின் திருமணம் வட கடற்கரை ரிசோர்ட்டில் நடைபெற்றது. மக்ரான் தனது திருமண உரையில் Trogneux இன் பிள்ளைகள் அவருக்கு உதவியமைக்காக நன்றியும் தெரிவித்துள்ளார்.



**இலங்கை அஞ்சல் தொலை தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கம் கனடா**

தனது 20வது ஆண்டில் காலடி வைக்கும் வேளையில் காலம் சென்ற அங்கத்தவர்களை நினைவு கூரும் பொருட்டு **Sunday, July 9, 2017**
**THE QUEEN PALACE BANKQUET HALL** லில் **(1173 Brimley Road, Scarborough ON M1P 3G5)** நினைவு அஞ்சலி நிகழ்வு நடத்தவுள்ளோம். அதற்குக் காலஞ் சென்ற அங்கத்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தயவுசெய்து பின்வரும் நிர்வாக அங்கத்தவர்களைத் தொடர்பு கொண்டு தொலைபேசி இலக்கத்தையும் விலாசத்தையும் கொடுத்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்களது வருகையை **May 22, 2017** க்கு முன்னதாக அறிவித்து உறுதிப்படுத்தும்படியும் பணிவுடன் வேண்டுகிறோம்.

| | |
|---|---|
| Mr. S. Mahendranathan, President – | 416-818-8990<br>email: sinnamahen@gmail.com |
| Mr. R. Sundaralingam, Secretary – | 416-454-6360<br>email: sundar114@gmail.com |
| Mr. S. Wijayachandran, Treasurer – | 647-783-0835<br>email: wijaysel@gmail.com |

# சிறுநீரகக் கல்லுக்கு இயற்கை மருத்துவம்

**நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்**


ஆரோக்கிய வாழ்வு

Diploma in Yoga Therapy (India)



C - 416.617.5721/H - 416.289.2033 after 7:00pm


## Kidney Stone

மனித இனத்தைத் தாக்கிவரும் மிகவும் பழமையான நோய்களில் சிறுநீரகக் கற்களும் ஒன்று. இந்த நோயால் பாதிக்கப் படுபவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதன் காரணம் மாறி வரும் வாழ்க்கை முறையே எனப் பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சிறுநீரகத்தில் கல் உற்பத்தியாவதற்கு உணவுமுறை பாரம்பரியம், போதிய தண்ணீர் குடிக்காமை போன்ற பொதுவான காரணங்கள் உள்ளபோதும் அவை மட்டுமே காரணமாகாது.

**சிறுநீரகக் கல் உற்பத்தியாகக் காரணம் தான் என்ன?**

மனித உடலிலுள்ள சக்கரைச்சத்து, கொழுப்புச்சத்து, சுண்ணாம்புச்சத்து மற்றும் இவற்றோடு கபாலநீரும் சேர்ந்து கல்லாக உறைகிறது. பொதுவாக சுண்ணாம்பையும் சக்கரையையும் சேர்த்தால் அது கல்லாக இறுகுவதைக் காணமுடிகிறது. இரத்தத்தில் உள்ள உப்பு மற்றும் கொழுப்புச்சத்து சேரும்போது அழற்சி ஏற்பட்டு அதனால் ஏற்படும் ஒவ்வாமையினால் (Alergy) தேவைக்கு அதிகமான புரதச்சத்து உடலில் சேர்கிறது. இந்தப் புரதமானது சிறுநீரகம் தனது பணியைச் செய்யும் போது உள்ளே உறைந்து கல்லாக மாறுகிறது.

அதிக உழைப்பு, உஷ்ணம் அதிகமாக உள்ள இடங்களில் வேலை பார்த்தல், தூக்கமின்மை, அலைச்சல், மனஇறுக்கம். இவற்றால் இரத்தத்தில் பித்தம் அதிகரித்து இதனால் உருவாகும் பித்த அழற்சியின் காரணமாக இரத்தத்தில் உப்புப் படிவங்கள் உருவாகி அதனுடன் சுண்ணாம்பும் கொழுப்பும் சேர்ந்து இறுகிக் கல்லாக மாறுகிறது. ஒரு சிலருக்கு சிறுநீர்ப்பையில் கல் உண்டாகும் இதற்கு மூலச்சூடு தான் மூல காரணம்.

சிறுநீரகக் கல் சிறுநீரகத்திலிருந்து தான் உருவாவதென்று பலரும் நினைக்கின்றனர். ஆனால் இது சிறுநீரகம், சிறுநீர்க்குழாய், சிறுநீர்ப்பை இவை எங்கிலும் உருவாக வாய்ப்புண்டு. அதெல்லாம் அவரவர் உடலின் தன்மை, வாழ்க்கைமுறை என்பன வற்றைப் பொறுத்தது. மேலும் இரத்தத்திலுள்ள கொழுப்பு அடைப்புக்களும் நாளடைவில் கிட்னியில் உறைந்து கல்லாக மாறுகிறது. கிட்னியில் கல் உள்ளவர்கள் இரத்த நாளங்களையும் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். கல்லீரல் தனது வேலையை சரிவரச்செய்தால் இரத்தத்தில் தேவையற்ற புரதச்சத்து சேராது. எனினும் சிறுநீரகக்கல், மற்றும் சிறுநீரகநோய்கள் வராமல் தடுப்பதற்கு நாம் நமது கல்லீரலை சிறந்த முறையில் பராமரித்து வரவேண்டும். கல்லீரலை திறம்படச் செயல்படவைக்க உணவில் மாற்றங்கள் தேவை. கல்லீரல் திறம்பட செயல்படுமானால் மலச்சிக்கல், சிறுநீர் எரிச்சல் போன்றவற்றிலிருந்து விடுபடமுடியும்.



சிறுநீரகத்தில் கல் உருவாவதற்கும் இதய நோய்க்கும் நெருங்கிய தொடர்புண்டு. இரத்த நாளங்களில் உண்டாகும் அடைப்புக் களால் ஏற்படும் இதய நோய்களுக்கு காரணம் கல்லீரலின் செயல்பாட்டினுள்ள குறைபாடு தான் காரணமாகும். இரத்தத்தைச் சுத்திகரிப்பது கிட்னியின் செயல் பாடாகும். கல்லீரலை வலுப்படுத்தி இரத்த நாளங்களைச் சுத்திகரிக்கச் செய்து விட்டாலே சிறுநீரகம், மற்றும் இருதய நோய்களிலிருந்து விடுபடலாம்.

**சிறுநீரக கற்களுக்கான மருத்துவம்**

1. வாழைத்தண்டு 4 அங்குலம் (4 Inch)
2. சீரகம், சோம்பு, 1 தேக்கரண்டி (1 tea spoon)
3. இஞ்சி - சிறுதுண்டு
4. சின்னவெங்காயம் - 4
5. பூண்டுப்பல் - 4
6. கறிவேப்பிலை - 4
7. கொத்தமல்லி - அரைதேக்கரண்டி
8. மிளகு - 5

வாழைத்தண்டை சிறு துண்டாக்கி மற்றைய வற்றை இலேசாக இடித்து இரண்டு டம்ளர் தண்ணீரில் கொதிக்கவைக்க வேண்டும். அது ஒரு டம்ளராக வற்றியவுடன் அதை எடுத்து வைத்து காலையில் வெறும் வயிற்றில் அருந்தவும். இவ்வாறு 20 நாட்கள் குடித்து வந்தால் இரத்தக் குழாய் அடைப்புகள் நீங்கி சிறுநீரக கற்களும் கரைந்துவிடும். இதுதான் சித்தர்கள் கண்ட மருத்துவ விஞ்ஞானம். இதனால் கிட்னியும் இதயமும் மறுபடியும் திறம்பட இயங்கும்.

**இருதய அடைப்பு நீங்க** (Heart blook)

1. வெற்றிலை -2
2. திப்பிலி - சிறுதுண்டு
3. வாழைத்தண்டு - 4 அங்குல அளவு
4. சீரகம் - ஒரு தேக்கரண்டி
5. சோம்பு - சிறிதளவு
6. இஞ்சி - 1துண்டு
7. சின்ன வெங்காயம் -2
8. பூண்டுப்பல் - 4
9. கொத்தமல்லி
10. கறிவேப்பிலை - 10

இவற்றை சேர்த்து கொதிக்கவைத்து கசாயம் செய்து குடித்துவர இதய அடைப்பு சிறிது சிறிதாக நீங்கும்.

**யோகா முறையில்**

சிறுநீரகக் கற்களைக் கரைப்பதற்கு யோகா சனத்தில் சில பயிற்சிகள் கூறப்பட்டுள்ளன



1. யோகா முத்ரா
2. தனுராசனம்
3. பட்ஸி மொத்தாசனம்
4. சலபாசனம்
5. உட்டியானா

இவற்றைத் தினமும் முறைப்படி செய்துவர 4 முதல் 6 வாரங்களில் கற்கள் முழுமையாகக் கரைந்து விடும்.


**IMPERIAL MIGRATION**

Need help to prepare to apply for Canadian PR? Call Us!

**647-219-6553 Tamil**

**647-336-2374 English**

Meet us at Carissauga Spain Pavilion

Hershey Centre, Mississauga

May 26, 27,and 28

**Services:**

Express Entry | Super VISA
Student VISA | Spousal
Visitor VISA | Parental
Work Permit | PR Card Review
LMIA | Citizenship

**imperialmigration.com**


**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் -கனடா**

மேற்படி கூட்டம்:

திகதி: மே 27, 2017, சனிக்கிழமை நேரம்: பிற்பகல் 3:00 மணி

இடம்: *GTA Square (Second Floor) 5215 Finch Ave. E., BOX #224 Scarborough, ON M1S 0C2*

இக்கூட்டத்திற்கு கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் அவர்களின் தலைமுறைகள் அனைவரையும் தவறாது வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

தேவாரம், மௌன அஞ்சலி, சென்ற பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தல், செயலாளரின் ஆண்டறிக்கை சமர்ப்பித்தல், பொருளாளரின் நிதியறிக்கை சமர்ப்பித்தல் பிரேரணைகள், தலைவர் உரை, வேறு விடயங்கள், நன்றி உரை, கல்லூரி கீதம்

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் அவற்றை 23. 05. 2017 அன்று அல்லது அதற்கு முன்பாக செயலாளருக்குக் கிடைக்கக் கூடியதாக 5215 Finch Avenue East, Box #204 Scarborough, Ontario, M1S 0C2 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல்.

தொடர்புகளுக்கு: *416.301.1733 /416.616.4386 / 647.609.5392*

## யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்.

# அந்த மூன்று நிமிடங்கள்

## (பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் அழகியற் கதை)

- கனி -
416.261.1348
ptons@hotmail.ca



3. பிளாங் யுகம் (தொடர்ச்சி)

சென்ற தடவை பேரண்டம் தோன்றியிருக்கக் கூடிய சாத்தியக் கூறு ஒன்றியைப் பற்றிப் பார்த்தோம். முடிவிலி எண்ணிக்கையிலான '0', '1' எண்களின் வடிவிலான செய்திகளின் வெளித் தள்ளல்களினாலேயே பேரண்டம் தோன்றியிருக்க வேண்டும் என்று விஞ்ஞானத்தனமாகச் சில விஞ்ஞானிகள் கூறியிருந்தார்கள், கூறுகின்றார்கள் அதன் அடிப்படையில் வலுப் பெற்றதுதான் பல்பேரண்டம் (Multiverse) கொள்கை.

இன்று விஞ்ஞானிகளிடையே பல்பேரண்டம் என்பது பரவாலகப் பேசப்படுகிற ஒரு விடயம் ஆகும். பல பேரண்டங்கள் இருப்பினும் அவை எல்லாம் ஒரே மாதிரியாவையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. எப்படியெனில், பிளாங் யுகத்தின் பின்னராக எங்களது பேரண்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் போன்றே, மற்றப் பேரண்டங்களிலும் ஏற்பட்டிருக்கும் என்று கூறமுடியாது. ஆனால், ஒன்றிரண்டு எங்களது பேரண்டம் போலவோ அல்லது கிட்டத்தட்ட அதனை ஒத்ததாகவோவும் கூடப், பரிணாமம் அடைந்திருக்கலாம். திடமாகக் கூறுவது என்பது முடியாத விடயம்.

இன்னொரு சிந்தனையின் வெளிப்பாட்டினையும் பார்ப்போம். பிளாங் யுகத்தில் புடவியின் பருமன் மிகவும் சிறியது. எனவே இங்கு குவாண்ரம் கொள்கையினைப் பாவிக்கலாம். ஆனால், பாரமோ மிகப் பெரியது. இந்நிலையில் பொதுச் சார்புக் கொள்கையினைக் கருத்தில் எடுக்க வேண்டும். எனவே பிளாங்கின் யுகத்தின் நிலையினை எதிர்வு கூறுவதற்கு, குவாண்ரமும் சார்புக் கொள்கையும் இணைந்த ஒரு புதிய கொள்கையினைக் கொண்டுவர வேண்டும் எனத் தெரிகின்றது. அதாவது மிகவும் சிறிய விவகாரங்களுக்கான குவாண்ரமும் பெரிய காரியங்களுக்கான பொதுச்சார்புக் கொள்கையும் இணைந்த ஒரு கொள்கை பெறப்பட்டால்தான் பிளாங் யுகத்தினை ஒருவாறு விளக்க முடியும், விளங்க முடியும். விஞ்ஞானிகள் அந்த வழியிலும் முயற்சி செய்து பார்த்தார்கள். இரண்டு கொள்கைகளையும் இணைக்கக் கூடிய ஒரு கொள்கைக்கு குவாண்ரம் ஈர்ப்புக் கொள்கை எனப் பெயருமிட்டு, அதனைப் பற்றிய ஆய்வுகளைச் செய்தார்கள். குவாண்ரமும் பொதுச்சார்பும் தனித்தனி வெற்றிகரமான கொள்கைகளாக இருந்தாலும் ஒன்றை ஒன்று முட்டி மோதிக் கொண்டு இருக்கின்றன. அதனால் இவையிரண்டும் இணைந்த புதிய கொள்கையான குவாண்ரம் ஈர்ப்பினை விஞ்ஞானிகளால் முழுமையாகப் பெறமுடியாது இருக்கின்றது.



இவ்வாறான சிக்கல்களினால், பிளாங் யுக சமாச்சாரங்கள் கூறமுடியாது இருக்கின்றது. ஆனால் பிளாங் யுகத்தின் முடிவில் இருந்து புடவியின் பரிணாம வளர்ச்சிப் பாதையினை விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். அதனையும் ஒரு ஏற்றுக் கொள்ளக் கூடியதான கருகோளாகவே கூறுகின்றார்கள். ஏனெனில், பிளாங் யுக முடிவில் புடவியின் வெப்பநிலை மிகவும் அதிகமாக இருப்பதால், அவ்வுயர் வெப்பநிலையில் என்னென்ன மாற்றங்களைப் புடவி அடைந்தது என்பதனைக் கூறி, அவற்றினைப் பரிசோதனை ஆய்வுகளின் மூலமாக நிரூபிப்பது கடினமாக இருக்கின்றது. எங்களது அறிவியல் நிலையில் அது முடியாத விடயமாகவே உள்ளது. ஐரோப்பிய அணுக்கரு ஆய்வு மையத்தினரின் (CERN), 'கட்றோன் மோதுகையாக்கி'யில் உயர் வேகத்தில் உபஅணுத்துகள்களை மோதவிட்டு உயர் வெப்பநிலையில் ஏற்படக் கூடிய மாற்றங்களை, நிகழ்வுகளை விஞ்ஞானிகள் அறிய முயற்சிகள் செய்து வருகின்ற போதிலும், 1.4 $10^{32}$ பாகை கெல்வின் வெப்பநிலைக்கு ஒத்ததான வெப்பநிலையின் மாற்றங்களை அறியக் கூடியதான நிலைக்கு இன்னமும் அவர்கள் வரவில்லை. அதனால் ஆரம்ப காலத்தில் எற்பட்டிருக்கக் கூடிய மாற்றங்களை கணிதத்தின் துணையுடன் கொள்கை வடிவிலேயே விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். அப்படியான பிளாங் யுகத்திற்கு அடுத்ததான காலப் பகுதியான பேரிணை காலப்பகுதியைப் பற்றி இனிப் பார்ப்போம்.

### 4. பேரிணை காலம்

(10ன்-43ம் அடுக்கு செக்கனில் இருந்து 10ன்-35ம் அடுக்கு செக்கன் வரை)பிக்பாங்குடன் தோன்றிய புடவியின் வயது பத்தின் மறை 43 செக்கன் ஆகியதும் அதன் வெப்பநிலை 1.4 $10^{32}$ பாகை கெல்வின் ஆகிவிட்டது. இப்போது பருமனும் பிளாங் நீளமாகிவிட்டது. இதனால், புடவியில் சிலமாற்றங்கள் ஏற்பட வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. இப்போது இருக்கும் பிரபஞ்ச வெப்பநிலையால் ஈர்ப்புவிசையை மற்ற மூன்று விசைகளுடனும் சேர்த்துக் கட்டி வைக்க முடியவில்லை. இதனால் ஈர்ப்பு விசை மேம்பட்டவிசையில் இருந்து பிரிந்து தனியனாக வெளியே வந்து விடுகின்றது. அது தானாகத் தனியனாகச் செயற்படக் கூடியதான வல்லமையைப் பெற்றுவிடுகின்றது.

அதாவது புடவி தனது முதலாவது பரிணாம மாற்றத்திற்கு உள்ளாக, பிளாங் யுகம் முடிவுற்று புடவி தனது அடுத்த நிலைக்குள் வந்து விடுகின்றது. பிளாங் யுக முடிவில், ஈர்ப்புவிசை பிரிந்து விட்டது அல்லவா. அதனால் புடவியின் உள்ளே இருந்ததாகக் கருதப்பட்ட தனிவிசைச் சமச்சீர் உடைந்து விடுகின்றது. இப்போது அந்தக் குட்டிப் புடவியினுள் ஈர்ப்புவிசையும், மற்ற மூன்று இயற்கை விசைகளின் கூட்டணி விசையுமாக, இரண்டு விசைகள் காணப்படுகின்றன. அந்தக் கூட்டணி விசையான, மூன்று விசைகளிதும் இணைப்பான தனிவிசையினை பேரிணைவிசை (Grand Unified Force) என்கிறார்கள். இப்போது பிரபஞ்சம் புதியதோர் சமச்சீரினைப் பெற்றுவிட்டதனால், இச்சமச்சீர் கொண்ட காலம் முழுவதுமே பிரபஞ்சத்தின் இரண்டாவது யுகமாகக் கூறப்படுகின்றது.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான வி'யங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பிளாங் காலத்தின் பின்னராக ஈர்ப்புவிசையுடன் பேரிணைவிசை புடவியினுள் செயற்பட்டதையும் ஒரு கொள்கை அளவிலேயே எங்களால் அறிய முடியும். இப்படியாக மூன்று விசைகளையும் ஒருவிசையாகப் பார்க்கும் கொள்கையை பேரிணைக் கொள்கை என அழைக்கிறார்கள். ஆங்கிலத்தில் இதனை Grand Unified Theory எனக் கூறி, சுருக்கமாக புருவு எனக் குறிப்பிடுவார்கள். ஈர்ப்புவிசையும் பேரிணைவிசையும் புடவியினுள் பத்தின் மறை 43ம் அடுக்கு செக்கனில் இருந்து பத்தின் மறை 35ம் அடுக்கு செக்கன் வரையிலுமான காலப் பகுதியிலேயே ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தன. இக்காலப் பகுதியை பேரிணைக் காலம் Grand Unified Theory Era எனக் குறிப்பிடுகிறார்கள். இந்தப் பேரிணைக் காலப் பகுதிதான் எங்களின் பேரண்டத்தின் வளர்ச்சிப் பாதையின் ஆரம்ப அடியெனக் கூறமுடியும். ஏனெனி ல், இங்கிருந்துதான் எங்கள் அறிவியற் பார்வை கொள்கையளவில் வெளிக்கிறது.

அறிவியற் பார்வையின் முதற்படியாக, பேரிணைவிசை என்பதனைப் பற்றிக் கொஞ்சம் அலசுவோம். இங்கே அணுக்கரு விசைகளான வலிந்தவிசை, மெலிந்தவிசை இரண்டுடனும் மின்காந்தவிசையும் இணைந்து இருக்கின்றது. இணைந்திருக்கின்றன எனக் கூறுகையில் வெவ்வேறு இயல்புடைய இம்மூன்று விசைகளும் ஒரே இயல்புடைய தனிவிசையாகக் காணப்படுகின்றன. இப்படியாக இந்த மூன்றுவிசைகளும் தத்தமது சிறப்பான இயல்புகளைக் காட்டாது ஒரே மாதிரியானவை போன்று தொழிற்படக் கூடியனவாக இருப்பது ஏனெனில், பேரண்டமான புடவி அப்போது கொண்டிருந்த உயர் வெப்பநிலையின் காரணமாகவாகும்.

பேரிணை காலம் பற்றிய மேலதிக, சுவாரசியமான தகவல்களை மறுமுறை சந்திக்கையில் தொடருவோம்.

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL • TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Gout | Diabetes | Stumatitis |
| Flu | Arthritis | Cystitis | Colitis |
| Depression | P.M.S | Cancer | |
| Anxiety | Leucorrhea | Prostatitis | |
| Asthma | Migraines | Obesity | |
| Tonsillitis | Hair Loss | Hemorrhoids | |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# மறைகிறதா திராவிடம் மலர்கிறதா தாமரை

- சிவதாணு -

இந்தியாவில் 2014ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நாடு முழுவதும் வீசிய மோடி அலை, மூன்று ஆண்டுகள் ஆகியும் இன்னும் வலுவிழக்காமல் இருக்கிறது. இந்த ஆண்டு மார்ச் நடந்து முடிந்த ஐந்து மாநிலங்கள் சட்டப்பேரவை தேர்தலில் உத்தரப் பிரதேசம், உத்தராகாண்ட் ஆகிய இரண்டு மாநிலங்களிலும் அபார வெற்றியைப் பெற்றிருக்கிறது பாஜக. கோவாவிலும் மணிப்பூரிலும் அதிக இடங்களை காங்கிரஸ் கைப்பற்றியிருந்தாலும் வாக்கு சதவீதத்தில் பாஜகவுக்கே முதலிடம். இந்த ஐந்தில் நான்கு மாநிலங்களில் ஆட்சிப் பொறுப் பேற்றிருப்பதன் மூலம் இந்தியாவில் பாஜக ஆளும் மாநிலங்கள் எண்ணிக்கை 13ஆக உயர்ந்துள்ளது. அதன்பின்னரும் சென்ற மாதம் டெல்லி உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடைபெற்ற தேர்தலில் பெரும்பான்மை இடங்களை பாஜகவே கைப்பற்றியிருக்கிறது. பாஜகவின் இந்த வெற்றிப் பயணம் தொடருமா? தமிழகத்தில் தாமரை மலர வாய்ப்புள்ளதா?

## தொடரும் மோடி அலை!

இந்தியாவின் மிகப் பெரிய மாநிலமான உத்தர பிரதேசம்தான், நாட்டின் அரசியல் தலையெழுத்தை நிர்ணயிக்கும் மாநிலமாகவும் விளங்குகிறது. 2014 நாடாளுமன்றத் தேர்தலில் உத்தரப் பிரதேசத்தில் பாஜக பெற்ற வெற்றியே பாஜக இந்திய மத்திய அரசை தனிப் பெரும்பான்மையுடன் கைப்பற்றக் காரணமானது. ஆனால், 2014 நாடாளுமன்றத் தேர்தலில் உத்தரப் பிரதேசத்தில் பாஜக பெற்ற வெற்றியை 2017 சட்டப்பேரவைத் தேர்தலில் தக்கவைத்துக் கொள்ள முடியாது என்றே அரசியல் விமர்சகர்கள் கணித்தார்கள். முக்கியக் காரணம் 500, 1000 ரூபாய் செல்லாது என்ற மோடியின் நடவடிக்கை. ஆனால், பண மதிப்பிழப்பு நடவடிக்கையால் ஏற்பட்ட நெருக்கடிகளை மக்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அல்லது உண்மையிலேயே அந்த நடவடிக்கை கருப்புப் பணத்தை ஒழிக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள் என்பதற்கான அறிகுறிகள், பெப்ரவரி 2017 மும்பை மாநகராட்சி தேர்தல் முடிவுகளிலேயே வெளிப்பட்டது. ஆனாலும், பாஜக ஒரு பயத்துடனேயே உத்தரப் பிரதேச தேர்தலை அணுகியது. எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடைசி மூன்று தினங்கள் அவரவர் தொகுதியில் இருந்து உழைக்க வேண்டும் என்று பாஜக தலைவர் அமித்ஷா உத்தரவிட்டார். மோடியே வாரணாசியில் மூன்று நாட்கள் தங்கினார். அனைத்துக் கணிப்புகளையும் பொய்யாக்கி, ஏறக்குறைய 2014 வெற்றிக்கு இணையான வெற்றியை 2017இலும் பாஜக பெற்றிருக்கிறது.

இத்தனைக்கும், ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகள் ஆகும் நிலையில், கருப்புப் பணம் உட்பட 2014 தேர்தலில் அளித்த எந்த வாக்குறுதியையும் மோடி நிறைவேற்றவில்லை. பெட்ரோல் விலை உட்பட அத்தியாவசியப் பொருட்கள் விலைவாசி உயர்ந்திருக்கிறது. ஆனாலும், மக்கள் மோடி மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதையே உத்தரப் பிரதேச தேர்தல் முடிவு காட்டுகிறது.



தமிழக அரசியல்

அடுத்து கர்நாடக மாநிலத்தை பாஜக கைப்பற்றக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், 2019 பொதுத் தேர்தலிலும் பாஜகவின் வெற்றியைத் தடுக்கவே முடியாது என்று, இப்போதே பல எதிர்க் கட்சிகள் சோர்ந்துபோயிருப்பது, அவர்கள் உதிர்க்கும் வார்த்தைகளில் வெளிப்படையாக தெரிகிறது. காஷ்மீரைச் சேர்ந்த வரும் தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவருமான உமர் அப்துல்லா, "2024 பொதுத் தேர்தல் வரை எதிர்க்கட்சிகள் வெற்றியை மறந்துவிட வேண்டியதுதான்" என்று சொல்லியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில் தாமரை மலருமா?

உத்தரப் பிரதேச தேர்தல் முடிவுகள் வெளியானதும், "தமிழகத்திலும் விரைவில் பாஜக ஆட்சி மலரும்" என்று சொன்னார் தமிழக பாஜக தலைவர் தமிழிசை சௌந்தரராஜன். தமிழகத்தில் பாஜகவுக்கு அடித்தளமே இல்லாத நிலையில், அதே சாத்தியமே இல்லை என்று சமூக வலைதளங்களில் மீம்ஸ் போட்டு தமிழிசையை வாறினார்கள் நெட்டிசன்கள். தமிழகத்தில் பாஜகவால் காலுன்ற முடியாது என்பதற்கு பலரும் சொல்லும் காரணம் அதன் சாதி, மத அடையாளம். ஆனால், உத்தரப் பிரதேசத்தில் இப்போது பாஜக பெற்றிருக்கும் வெற்றியின் மிக முக்கியமான அம்சமே அது சாதி, மத அடையாளங்களைத் தாண்டியிருக்கிறது என்பதுதான். மேல் சாதிக்காரரர்களின் கட்சி என்று முத்திரை குத்தப்பட்ட பாஜகவை, கடந்த மூன்று வருடங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் தங்களுடைய கட்சியாகக் கருதும் அளவுக்கு மாற்றியிருக்கிறார் மோடி.

உபியில் உயர் சாதியைச் சேர்ந்தவர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் மட்டுமல்லாமல் தலித்துகள், பிற்படுத்தப்பட்டவர்கள் அதிகமாக வாழும் பகுதிகளிலும் பாஜக பெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. குறிப்பாக, முஸ்லிம்கள் அதிகம் வாழும் பகுதிகளிலும் பாஜக பெற்றுள்ள வெற்றிதான் அனைவரையும் ஆச்சரியப்படுத்துகிறது. உத்தரப் பிரதேச மக்கள் தொகையில் முஸ்லிம்கள் 18 சதவீதம் உள்ள நிலையில், மொத்தம் உள்ள 403 தொகுதிகளில் பாஜக ஒரு முஸ்லீம் வேட்பாளரைக் கூட நிறுத்தவில்லை. கூட்டணிக் கட்சிகள் போட்டியிட்ட தொகுதிகளிலும்கூட எந்த முஸ்லீம் வேட்பாளரும் இல்லை. ஆனாலும், முஸ்லீம்கள் பாஜகவுக்கு ஓட்டுப் போட்டிருக்கிறார்கள். இல்லை யென்றால் இந்த வெற்றி சாத்தியமில்லை. 76 சத வீதம் முஸ்லிம் மக்கள் வாழும் தொகுதியில்கூட பாஜக வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார். இந்நிலையில்தான், "உத்தரப் பிரதேசத்தில் நடந்தது ஏன் தமிழகத்தில் நடக்காது?" என்று கேள்வி எழுப்புகிறார்கள் தமிழக பாஜக தலைவர் கள். நம்முடன் பேசிய தமிழக பாஜக செய்தி தொடர்பாளர் எஸ்.ஆர். சேகர், "நாட்டிலேயே அதிக வாக்காளர்களைக் கொண்ட உத்தரப் பிரதேசத்தில் இப்போது எப்படி பாஜகவை அனைத்து தரப்பினரும் ஆதரித்திருக்கிறார்களோ, அதேபோலத் தான் தமிழக மக்களின் மனநிலையும் இருக்கிறது. இதுவரையில் சாதி, மத அடிப்படையாலும், திராவிடம் என்ற கொள் கையாலும்தான் இங்கே ஆட்சி நடந்து கொண்டிருந்தது. அது இனி மாறும்.

ஜெயலலிதா எனும் ஆலமரம் சாய்ந்திருப்பதாலும் கருணாநிதி என்கிற அரசமரம் ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதாலும், தமிழக அரசியல் நிலைமை அளவுக்கதிகமாகவே மாறியிருக்கிறது. அதிமுகவோ இரண்டாகப் பிளவுபட்டு நிற்கிறது. திமுக செயல் தலைவர் ஸ்டாலினுக்கு கருணாநிதி அளவுக்கு சாதுர்யமும் சாமர்த்தியமும் இல்லை. அவரால் அதிமுக சட்டமன்ற உறுப்பினர்களில் ஒருவரைக்கூட தங்கள் வசம் இழுக்க முடியவில்லையே. இன்னொரு பக்கம், இந்த இரண்டு கட்சிகளும் நம்மை வஞ்சித்துக் கொண்டிருக் கிறது என்று தமிழக மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள். இவர்கள் இல்லாத ஒரு நல்ல ஆட்சி மலர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தமிழக மக்களிடம் வந்து விட்டது. இந்தச் சூழ்நிலையை நிச்சயம் பாஜக கைவிடாது" என்கிறார்.

ஒவ்வொரு மாநிலத்திலும் பாஜக வலுப் பெறும்போது அந்த மாநிலத்தைச் சேர்ந்த கட்சிகள் ஒவ்வொன்றாகத் தேய்ந்து வருவதை பாஜக தலைவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். அஸ்ஸாம் கணபரிசத் (அஸ்ஸாம்), எம்ஜிபி (கோவா), தேவ கவுடாவின் ஜனதா தளம் (கர்நாடகா), சிவசேனா (மகராஷ்டிரா), பிஎஸ்பி (உத்தரப் பிரதேசம்), ஜேஎம்எம் (ஜார்கண்ட்), எச்விபி (ஹரியாணா) ஆகிய கட்சிகள் எல்லாம் அந்தந்த மாநிலங்களில் ஒருகாலத்தில் பாஜகவை சிறிய கூட்டணியாக சேர்த்துக் கொண்ட மாநிலக் கட்சிகள். இன்று அவர்களை சிறிய கூட்டணியாக பாஜக சேர்த்துக்கொண்டுள்ளது. அதாவது, மாநில கட்சிகளின் அழிவில் பாஜக வளர்வது கவனிக்கத்தக்கது. எஸ்.ஆர். சேகர் குறிப்பிடுவது போல், தமிழகத்தில் பலமான இரு கட்சிகளான அதிமுகவும் திமுகவும் இப்போது நெருக்கடியான சூழ்நிலையில் இருப்பது கவனிக்கத்தக்கது. ஓ. பன்னீர் செல்வம் அணி, சசிகலா அணி என இரண்டாக உடைந்துள்ளது, அதிமுக. இதில், சசிகலா அணிக்கு அதிமுக தொண்டர்கள் மத்தியிலேயே பெரும் எதிர்ப்பு உள்ளது. உண்மையோ பொய்யோ ஜெயலலிதா மரணத்தையும் சசிகலாவையும் சம்பந்தப்படுத்தி வரும் செய்திகளைத் தொண்டர்கள் நம்புகிறார்கள் குறிப்பாக தமிழகம் முழுக்க பெண்கள் உறுதியாக நம்புகிறார்கள். இந்நிலையில், பெரும்பான்மை சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவுடன் சசிகலா அணி ஆட்சியைப் பிடித்து விட்டது என்றாலும் தாங்கள் விரும்பாத, தங்கள் மேல் திணிக்கப்பட்ட ஒரு ஆட்சியாகவே எடப்பாடி பழனிசாமி தலைமையிலான தற்போதைய ஆட்சியை மக்கள் கருதுகிறார்கள். "நாங்கள் ஜெயலலிதாவுக்குத்தான் ஓட்டு போட்டோம் இவர்களுக்கு ஓட்டுப் போடவில்லை. எனவே, ஆட்சியைக் கலைத்துவிட்டு மீண்டும் தேர்தலை நடத்த வேண்டும்" என மக்கள் வெளிப்படையாகவே பேசுகிறார்கள். நடிகர் கமல்ஹாசன் டிவிட் தொடங்கி, ஞாயிற்றுக்கிழமை தோறும் சென்னை பெசண்ட் நகர் எலியட்ஸ் கடற்கரையில் கூடும் பெண்கள் எழுப்பும் கோஷம் வரை இது வெளிப்படுகிறது.

இன்னொரு பக்கம், ஜெயலலிதா மரணத்துக்கு நீதி கேட்டு பன்னீர்செல்வம் போகும் பயணத்துக்கு அதிமுக தொண்டர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது. எல்லாவற்றையும் பார்க்கும் போது, "எம்.ஜி.ஆர். தொடங்கிய, ஜெயலலிதா கட்டிக்காத்த அதிமுகவின் இருண்ட பக்கங்கள் ஆரம்பமாகிவிட்டது" என்ற விமர்சனத்தில் உண்மை இல்லாமலில்லை என்றே தெரிகிறது. 'மக்கள் கண்ணை மூடிக்கொண்டு வாக்களித்த இரட்டை இலை' சின்னமும் இப்போது இல்லை என்பது முக்கியமானது.

இன்னொரு பக்கம் திமுகவிலும் உற்சாகம் இல்லை. அதிமுக பிளவால், அரசியல் சூழ்நிலை தங்களுக்கு சாதகமாக இருந்தும் திமுக செயல் தலைவரால் ஒரு கட்டத்து க்கு மேல் காய்களை நகர்த்த முடிய வில்லை. "கலைஞர் உடல்நிலை சீராக இருந்திருந்தால் இன்று தமிழக அரசியல் சூழ்நிலையே வேறு" என்று திமுக காரர் களே பேசுகிறார்கள். மேலும், ஜல்லிக்கட்டு, நெடுவாசல், தங்கச்சிமடம் மீனவர்கள் தர்ணா, அரசு மதுபானக் கடைகளுக்கு எதிரான கிளர்ச்சி உட்பட சமீப தமிழக மக்கள் போராட்டங்கள் எதிலும் திமுகவுக்கு பெரிய பங்கில்லை. திமுக அழைப்புவிடுத்த போராட்டங்களில் தமிழக மக்கள் பங்கெடு க்கவும் இல்லை.

இப்படி அதிமுக, திமுக இரண்டும் மக்களிடம் இருந்து விலகியுள்ள சூழல் பாஜக தமிழ்நாட்டில் காலூன்ற வாய்ப்பான நேரம் என்றே அரசியல் நோக்கர்களால் கணிக்கப்படுகிறது. ஆனால், "அதற்கு பெரும் தடையாக இருப்பது களத்தில் வேலை செய்ய ஆட்கள் இல்லாததுதான்" என்றார் நம்மிடம் பேசிய பாஜக அனுதாபி

(தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)

# பிரிட்டிஷ்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

வாக்குகள் எண்ணப்படவில்லை. அவ்வாக்குகளின் முடிவுகளும் மே 22 ஆம் திகதியில் இருந்து மே 24 ஆம் திகதிவரையில் எண்ணப்பட்டே முடிவுகள் அறிவிக்கப்படும். பிரிட்டிஸ் கொலம்பியாவில் இவ்வாறு அளிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கை ஒவ்வொரு தேர்தலிலும் அதிகரித்துக் கொண்டே சென்றுள்ளன. 2013ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அளிக்கப்பட்ட Absentee வாக்குகளின் எண்ணிக்கை எல்லாத் தொகுதிகளுக்கு மாக சேர்த்து 159,000 ஆகும்.

மேற்கூறிய Absentee வாக்குகள் அல்லது மூன்று அல்லது நான்கு தொகுதிகளில் மீள எண்ணப்படும் வாக்குகளின் எண்ணிக்கை தேர்தல் முடிவுகளை மாற்றுமோ இல்லையோ என்பது மே 24 இல் தான் தெரியவரும். இவ்வாக்குகளின் எண்ணிக்கை தேர்தல் முடிவுகளை மாற்றாவிட்டால் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண அரசு சிறுபான்மை அரசு ஆக வருவது தவிர்க்க முடியாததாகிவிடும். அத்துடன் அந்த அரசு பசுமைக்கட்சியின் தயவிலேயே தங்கியிருக்க வேண்டிய அரசு ஆகவும் இருக்கும்.



இதனால் நடந்து முடிந்த தேர்தல் முடிவு பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண வியாபார சமூகத்திடையே ஒரு நிச்சயமற்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது. பசுமைக் கட்சியின் தயவில் தங்கியிருக்கும் ஓர் அரசால் எண்ணெய் குழாய்த்திட்டங்கள், இயற்கை எரிவாயு ஏற்றுமதித்திட்டங்கள், நீர்வழிமின்சார உற்பத்தித் திட்டங்கள், மற்றும் வளத் (Resource) திட்டங்கள் என்பவற்றில் சுயமாக முடிவு எடுக்க முடியாமல் இருக்கும் என்பதாலேயே இவ்வாறான ஒரு நிச்சயமற்ற நிலை வியாபார சமூகத்திடம் தோன்றியுள்ளதாக CTV செய்தி ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

# கட்சிகளின்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

நிலைமைகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் தாமதத்தையும், சிக்கலையுமே ஏற்படுத்தும். தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான வழியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்ற புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் தாமத



மாகும் எனவும், அத்துடன், இன்று தமிழ் மக்கள் தொடர்ந்து போராடிவரும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் வழங்கப்படுவதில் சிக்கல் நிலை ஏற்படும் என்றும் சொல்லப்படுகின்றது. ஏற்கனவே மஹிந்த தரப்பினர் சிங்கள மக்கள் மத்தியில் மேற்கொண்டுவரும் இனவாத பரப்புரைகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை கையாள்வதில் இந்த அரசாங்கத்திற்குப் பல தடைகளை ஏற்படுத்தி வருகின்றன.

மஹிந்தவிற்கு போட்டியாக, சிங்கள மக்களை அணிதிரட்டும் வேலைகளில் இந்த அரசாங்கம் அதீத கவனத்தை குவிக்க வேண்டியுள்ளது. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலும் வரவிருப்பதால் தமிழர் நலன்களைக் கைவிட வேண்டிய நிலையே 'நல்லாட்சி' அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது. வாக்குகளைக் குறி வைத்து மட்டும் செயற்படுகின்றபோது, ஏனைய முக்கிய விடயங்கள் கைவிடப்படுவதென்பது அனைத்து ஆட்சியாளர்களும் கைக்கொள்ளும் நடவடிக்கையே.

# நினைவு...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

றன. உயிரிழந்தவர்களுக்கு மதிப்பளித்து அவர்களை நினைவுகூர்வதானது உணர்வு பூர்வமான செயற்பாடு என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனாலும் இதனை மட்டுமே வருடந்தோறும் செய்து கொண்டிருக்கப் போகின்றோமா? பாதிக்கப்பட்ட உள்ளவர்களால் அது முடியாது. எனவே, காயங்கள் ஆற்றப்பட்டு மனங்கள் பலப்படுத்தப்பட வேண்டும் என்கின்றார் மனநல மருத்துவ நிபுணர் சிவதாஸ். சமூகத்தை ஊடுருவிப் பார்க்கும் இவர்களைப் போன்ற நிபுணர்களின் ஆலோசனைகளை மக்கள் பிரதிநிதிகளாகவுள்ள அரசியல்வாதிகள் கவனத்திற் கொள்ள வேண்டும். அவர்களைப் போன்ற நிபுணர்களின் ஆலோசனைகளை பெற்று செயற்படுவதானது ஆரோக்கியமானதாக அமையும்.




மக்களை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்ல என்ன வழி? என்பதையும் சிந்தித்து அதற்கானதொரு பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும்.

மனக்காயங்கள் ஆற்றப்பட்டு, மனங்கள் வளப்படுத்தப்பட்டு பலப்பட்ட மக்களினாலேயே உரிமைகளுக்காகப் போராட முடியும். நலிந்த, பேதலித்த மனநிலையில் முள்ளிவாய்க்கால் போன்ற நினைவு நிகழ்வுகளை நடத்துவதோடு, இழப்புக்களால் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். அதற்கான பொறிமுறையை இனியும் தாமதிக்காது உருவாக்குவதற்கு வட மாகாணசபை முன்வர வேண்டும்.

# நாமும்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

போது, இரண்டாம், மூன்றாம் தடவையாக குறுகியகால வியாபாரமே நோக்கமாக வாங்குபவர்களின் நிலைமை இறுக்கமடையலாம் என்பதும் கவனிக்க படவேண்டும். மேலும் பல இறுக்க நிலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் தாக்கங்கள் மிக விரைவில் அறியக்கூடியதாக இருக்கும்.

GTA பெரும்பாகத்திலும், ஹிமில்ரன் பகுதியிலும் (ரொறன்ரோ தவிர) தனி வீடு, இரு சேர்ந்த வீடுகள், பல சேர்ந்த நிலத்துடனான வீடுகள் (Attached Town Houses) கட்டுவதற்கான 56,762 நிலப்பகுதி, ஏற்கனவே அந்த உள்ளூராட்சி சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நிலப்பகுதிகள் வீடுகள் கட்டாமல் இருக்கின்றன. கடந்த வருடம் 17,536 நிலத்துடனான வீடுகளே GTA பகுதியில் கட்டப்பட்டுள்ளன. வீடு கட்டி விற்கும் நிறுவனங்கள் தமது ஆதாயத்தை நோக்கமாக கொண்டு, கட்டும்பணியை தள்ளிப் போட்டுக் கொண்டே வருகின்றன. அல்லது ஆகக்கூடிய விலையில் விற்கின்றன. அரசின் புதிய திட்டத்தின்பிரகாரம் அதிக வீடுகள், மனைகள் சந்தைக்கு கொண்டு வரப்படலாம். அத்துடன் ஏற்கனவே கட்டுவதற்காகக் கொடுக்கப்பட்ட வீடு / மனைகளை கட்டத்தொடங்குவதற்கு அரசுகள் மேலதிக நெருக்கடிகளையும் கொடுக்கவும் இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டால் ஆதன விலையிலும் / வியாபாரத்திலும் இவ்வருடத்தின் ஆரம்பத்தி லும் கடந்த வருடத்திலும் ஏற்பட்ட வியாபாரத்தை எதிர் பார்க்க முடியாது.


## யாழ். இந்துக் கல்லூரிச் சங்கம் கனடா நடத்தும்

தரம் 2 முதல் தரம் 12 வரையான பிரிவுகளுக்கான வருடாந்தப் பரீட்சை "கணிதம், பொதுஅறிவு, தமிழ்"ஆகிய பாடங்களில் மூன்று இடங்களில் நடைபெறும்.

இடம்: (1) Scarborough Sai Baba Centre, 5321 Finch Avenue East, Toronto, ON, M1S 5W2
(2) Earncliffe Recreation centre, 44 Eastbourne Drive, Brampton, ON, L6T 3M2
(3) Military Family Resource Centre National Capital Region , 330 Croil Priv. bldg. 471, Ottawa, ON K1V1J1

பரீட்சைத் திகதி: சனிக்கிழமை, மே 20, 2017 (Saturday, May 20, 2017)
பரீட்சை நேரம்: 9:30 AM to 1:30 PM ( Scarborough & Brampton)
4:30 PM to 8.30 PM ( Ottawa )
விண்ணப்பப் பதிவு கடைசித் திகதி: புதன்கிழமை, மே 17, 2017 (Wednesday, May 17, 2017)

மேலதிக விபரங்கள் - Toronto or Brampton:
Sivakumaran (647-607-4810), Suresh (647-961-6366), Sri (416-953-3297)
Ottawa: Vamanan (613-882-8267),
Jega (613-693-0593) & Thanesh (613-355-6659)

http://www.jhccacanada.com / http://www.jaffnahinducanada.com

# அறிவியல் கதிர் - தண்ணீர் பிடிக்க ஏடிஎம் மெஷின்

– பேராசிரியர் கே. ராஜு–

வரட்சி தாண்டவமாடும் மரத்வாடா பகுதியில் பல மைல்கள் தூரம் நடந்துசென்று ஒரு பானை தண்ணீர் பிடித்து வர வேண்டிய நிலையில் உள்ள பெண்களையும் குழந்தைகளையும் ஒவ்வொரு கிராமத்திலும் பார்க்க முடியும்.

“நீருக்காய் அவள் நடந்த தூரத்தை / ஒரு நேர்கோட்டில் இழுத்தால் / பூமத்திய ரேகையாகிப் போகும்” என்கிறது ஒரு கவிதை. ஆனால் அவரங்காபாத் நகரத்தின் அருகில் உள்ள படோடா என்ற சிறிய கிராமத்தின் கதை வேறு. சுற்றிலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்கள் இருந்தாலும் இந்தக் கிராமத்து மக்கள் அருகில் உள்ள தண்ணீர் ஏடிஎம்-மிற்குச் சென்று தங்களுடைய பங்கு குடிநீரை எடுத்து வருகின்றனர். பணத்தைவிட தண்ணீர் மதிப்பு மிக்கது என்ற அருமையான பாடத்தை படோடா கிராம மக்கள் கற்றுக் கொண்டுள்ளனர். நீரைப் பயன் படுத்துவது குறித்த விதிகளை அவர்கள் சரியாகப் பின்பற்றுகின்றனர். அங்கு தண்ணீருக்கான தணிக்கை முறைகள் கறாரானவை. அனைத்து வீடுகளிலும் மின்சாரத்திற்கு மீட்டர் இருப்பது மாதிரி தண்ணீருக்கும் மீட்டர்கள் உண்டு. கிராமத்தில் உற்பத்தியாகும் ஒவ்வொரு சொட்டு கழிவு நீரும் மறுசுழற்சி செய்யப்படுகிறது. நீரைப் பாதுகாப்பதில் ஒரு முன்னுதாரணத்தை படோடா உருவாக்கி விட்டதால் மரத்வாடா பகுதியில் உள்ள மற்ற கிராமங்கள் அதைப் பின்பற்றத் தொடங்கிவிட்டன.

“இதெல்லாம் ஒரே நாளில் நடந்து விடவில்லை. ஒவ்வொரு துளி மழைநீரையும் சேமிக்கவும் கழிவுநீர் உட்பட ஒரு துளி நீரும் கிராமத்தைவிட்டு வெளியேறாமல் தடுக்கவும் நாங்கள் கடந்த 10-12 ஆண்டுகளாக முயன்று வந்தோம். கடுமையான கட்டுப்பாடுகளின் விளைவாகவே இங்கே தண்ணீர் இருப்பு உறுதி செய்யப் பட்டிருக்கிறது. மரத்வாடாவில் உள்ள வரட்சி மனிதனால் உருவாக்கப்பட்டது. கிடைக்கும் தண்ணீரை திறம்படப் பயன்படுத்தவோ மறுசுழற்சி செய்யவோ மக்கள் தவறிவிட்டனர். வறண்ட நிலத்தில் அதிசயங்களை நிகழ்த்த இஸ்ரேலினால் முடியும் என்றால் நம்மால் ஏன் முடியாது?” எனக் கேட்கிறார் பாஸ்கர் பெரே-பட்டீல். இவர்தான் 22 மாநில மற்றும் தேசிய விருதுகளை வென்றுள்ள படோடா மொடலை உருவாக்கியவர். பட்டீல் 7 ஆவது வரை மட்டுமே படித்தவர். உள்ளூர் தாதாவாக இருந்து மக்களை மிரட்டி வாக்குகள் வாங்கி பஞ்சாயத்துத் தலைவர் ஆனவர். 10 ஆண்டுகளுக்கு முன் பணபலமும் அடியாள் பலமும் இருந்ததால்தான் மக்கள் தன்னிடம் பயப்பட்டனர் என்பதை அறிந்து மனம் மாறியவர். திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை முதலில் மாற்ற முயற்சி எடுத்தார். பின்னர் கிராமத்தின் தண்ணீர்ப் பிரச்சனையைத் தீர்க்க முன்வந்தார். முதலில் மக்கள் அவருக்குப் பயந்து கொண்டு அவர் பின் சென்றனர். ஆனால் விரைவிலேயே அவரது நல்ல நோக்கத்தைப் புரிந்து கொண்டு ஒத்துழைப்பு கொடுக்கத் தொடங்கினர்.




கிராமத்தின் வழியாக முன்னர் ஓடிக் கொண்டிருந்த காம் ஆறு சாக்கடை நீர், ஆலைக்கழிவுகள் கலந்ததன் காரணமாக சுருங்கி சிற்றோடையாக மாறியிருந்தது. கிணறுகளில் தண்ணீர் இல்லை. அரசின் திட்டங்கள் போதுமான நீரைத் தருபவையாக இல்லை. “எனவே வேறு தீர்வுகளைத் தேட முடிவு செய்தோம். நீரோடையின் குறுக்கே பல தடுப்பணைகளைக் கட்டி மழை-நீரைச் சேகரிக்கத் தொடங்கினோம். கிராமத்தை விட்டு ஒரு சொட்டு மழைநீரும் வெளியே செல்லாமல் தடுத்தோம். ஊற்றுக் கசிவு நீர்நிலைகளை புதுப்பித்த தால் நிலத்தடி நீரின் அளவு அதிகரித்தது” என்கிறார் பெரே பட்டீல். கிராமத்தில் கிணறுகளில் தண்ணீர் இருப்பதை உறுதி செய்ததும் நீர் வடிகட்டும் ஆலையை பஞ்சாயத்து நிறுவியது. தண்ணீர் மீட்டரும் ஏடிஎம் மெஷினும் வந்தன. இந்தத் திட்டங்களுக்கு அரசின் உதவி இருந்தாலும் முக்கியமான நிதியுதவி கிராம மக்களிடமிருந்தே வந்தது. இன்று ஏடிஎம் கார்டுகளைப் பயன்படுத்தும் 581 குடும்பங்களுக்கும் 20 லீட்டர் சுத்தமாக வடிகட்டிய தாதுநீரை பஞ்சாயத்து இலவசமாக வழங்குகிறது. மேற்கொண்டு நீர் வேண்டும் என்றால் 5 ரூபாய் செலுத்தி 1000 லீட்டர் நீரைப் பெறலாம். வருடம் முழுதும் ஒரு நாளில் 24 மணி நேரமும் ஏடிஎம் மெஷின் இயங்குகிறது. அது எப்போதும் காலியாக இருக்காது. எங்களுடைய மொத்த உழைப்பையும் அதில் செலுத்தியிருக்கிறோம் என்கிறார் ஏடிஎம் கார்டை அதற்குரிய துளையில் செலுத்தி 20 லீட்டர் நீரை எடுக்கும் ரவீந்திர ஜாதவ் என்ற இளைஞர். அரசு கொடுக்கும் நீரை துணி துவைக்கவும் வீட்டைச் சுத்தம் செய்யவும் பயன் படுத்திக் கொள்கின்றனர்.

தமிழக கிராமங்களும் நகரங்களும் இப்படிப்பட்ட முயற்சிகளில் இறங்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

# EDUCATION

## Review Questions17-10

➢ **CALCULUS 12**

(i) Find the equation of the tangent line to the function $f(x) = \ln\left(\frac{x^2}{x^2+1}\right)$ at $x = l$


(ii) Determine $\frac{d_x}{d_t}$, when $xy^2 = 32$

$y = 2 \text{ and } \frac{d_y}{d_t} = 8$

## Answer Key : 17-9

➢ **CALCULUS & VECTORS 12**

Car speed is given 54km/ h, (typo)




Assume that the shortest distance occurs "$t$" seconds after passing the overpass.
Truck speed = 30m/s
Car speed = 15 m/s
From the point P, The truck travelled 30 t m.
The car travelled ( 15 × 2 + 15t ) m

$$d^2 = {d_1}^2 + (30t)^2$$

$${d_1}^2 = (10)^2 + (30 + 15t)^2$$

$$d = \sqrt{1125t^2 + 900t + 1000}$$

$$\frac{d_{(d)}}{d_{(t)}} = 2250t + 900$$

$$2250t + 900 = 0 \; ; \quad t = -\frac{900}{2250}\ s$$

Shortest distance occurs before truck comes to point P

By substituting the t value,
Distance = 28.6m

➢ **CALCULUS & VECTORS 12**

(i) Find the exact value,

$$\lim_{x\to\infty}\left(1+\frac{2}{5x}\right)^{\frac{5x}{8}} \quad answer:\ e^{\frac{1}{4}}$$

(ii) Find $\lim_{n\to\infty} \frac{\sqrt{x^4+1} - 2x^2 - 1}{x^2}$

$$\lim_{n\to\infty} \frac{x^2\left[\sqrt{1+\frac{1}{x^4}} - 2 - \frac{1}{x^2}\right.}{x^2}$$

$$\lim_{n\to\infty} \sqrt{1+\frac{1}{x^4}} - 2 - \frac{1}{x^2}$$

$$= 1 - 2 = -1$$

➢ **PHYSICS 12 & IB**

➢

(i) Work done against gravitational force

= mgh = 1400× 9.8 ×( 0.2/7)×4000 N

(ii) Work done against friction

= 530 N/m × 4000m = $2.12\times10^6$ N

Total work done = (i) + (ii)

Time taken to reach 4km, in seconds

$$t = \frac{4km}{50km/h} \times \frac{3600s}{h}$$

$$power = \frac{work}{time}$$

$$power = \frac{3.688\times10^6}{288} = 1.23\times10^4\ w$$

➢ **BIOLOGY 12**

- Cancer cells rapidly dividing and abnormally reproducing. Cell division occurs followed by DNA replication.
- Chemical analogues that mimic the structure of nucleotides will prevent DNA polymerase and therefore the DNA replication will be prevented.

Thus cancer cells won't be able to reproduce/ further division

Answer key
17-10 next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE

# உலகிற்கு குரல் வழங்கியர் அலெக்சான்டர் கிரகாம் பெல்



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

## (Alexander Graham Bell - Givingudice to the World)


ஸ்கொட்லாந்தில் உள்ள எடின்பேர்க் நகரில் மெல்வில் பெல், எலிசா சைமன்ட் பெல் தம்பதியினருக்கு 1847 மார்ச் மாதம் 03ஆம் திகதி பிறந்தவர்தான் அலெசான்டர் பெல் ஆவர். மூன்று மகன்களில் இவர் இரண்டாமவர். தனது 11வது வயதில் 'கிரகாம்' என்ற பெயரையும் சேர்த்துக் கொண்டார். கிரகாம் அவரது குடும்ப நண்பர். இதன் பின்பதாகவே இவர் அலெக்சான்டர் கிரகாம் பெல் என்று பெயர் பெற்றார். இவர் ஓர் அறிவியலாளர், பொறியியலாளர், கண்டுபிடிப்பாளர், ஆசிரியர் மட்டும் அல்ல உலகிற்கு குரல் வழங்கிய பிதாமகன். இவ்வளவு ஆற்றல்களுக்கு காரணம் அவரது தந்தையார் ஆவார். அவரது பரம்பரையினர் பலர் பணிமுறையாக நாவன்மை பயிற்றுவிப்பவர்களாக (Professed Elocutions)திகழ்ந்து வந்தனர். கண்பார்வை அசைவுகளினால் பல்வேறு உணர்வுகளை எவ்வாறு காட்டுவது? உதடுகளின் அசைவைக் கொண்டு ஒருவர் பேசுவதை காது கேளாதோர் எவ்வாறு புரிந்து கொள்வது என்பதைப் பற்றியெல்லாம் பெல்லின் தந்தை பல நூல்களை எழுதியுள்ளார். இளம் வயதில் பியானோ வாசிப்பதில் வல்லவராக திகழ்ந்ததுடன் ஒலி அலைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதிலேயே கவனம் செலுத்தினார். இவரது தாயாரும் காது கேளாதவர். அத்துடன் காதுகேளாத பெண்ணை விரும்பி அவரையே திருமணம் செய்து கொண்ட ஒரு இலட்சியவாதி.

1865 இல் பெல் இலண்டன் நகருக்கு சென்று பின்பு வாற்சன்வீடு (Watson House) சென்று அங்கு துணை ஆசிரியராக நியமனம் பெற்றார். அங்கும் அவர் ஒலியின் மீதான ஆய்வுகளை மேற்கொண்டார். பின்னர் மின்சாரத்தினை பயன்படுத்தி ஒலி அலைகளை தனது அறையில் இருந்து நண்பனின் வீட்டுக்கு ரெலிகிராப் வயர் (Telegraph wire) மூலம் அனுப்ப முனைந்தார். அவ்வேளையில் இளைய சகோதரர் காசநோயினால் பாதிப்புற்று படுக்கையில் வீழ்ந்தார். இதனால் பெல் 1867இல் வீடு திரும்பினார். மற்றைய சகோதரனும் திருமணமாகி வெளியேறினார். இவரும் பட்டம்பெறும் நோக்கில் University College London இல் சேர்ந்தார். 1870 வரையில் செவிப்புலன் அற்றோர்க்கு ஆசிரியராகி உதவிசெய்தார். மற்றைய சகோதரர் மெல்பில் பெல் கூட காசநோயினால் இறந்தார். இதனால் சொத்துக்களை விற்றுவிட்டு தனது 23வது வயதில் இறந்த சகோதரனின் மனைவியான Caroline Margaret Ottawa வுடன் கனடாவுக்கு புலம் பெயர்ந்தார். தனது பெற்றோர்களையும் கூடவே அழைத்து வந்தார். குவிபெக் நகரில் தங்கி பின்பு மொன்றியல் நகரில் தங்கி பின்பு ஒன்ராரியோவில் உள்ள பரிஸ் (Paris) என்னுமிடத்துக்கு புகையிரத மூலம் வந்தடைந்தார். பெல் குடும்பத்தினர் 10.5 ஏக்கர் நிலத்தினை Brantford நகருக்கு அருகில் வாங்கி குடியேறினர். இது தேசிய வரலாற்று இடமாக தற்போது உள்ளது. மிக வசதியான அமைப்பிடத்தில் மீண்டும் மனித குரல் (Human Voice) பற்றி தொடர்ந்து ஆய்வு செய்தார். அங்கு தனது வேலைத்தளத்தினை அமைத்து ஆய்வு செய்தார்.

குறிப்பிட்ட இந்த வேளையில் பெல்லின் தகப்பனார் அமெரிக்க பொஸ்ரன் நகரில் உள்ள செவிப்புலன் அற்றோருக்கான பாடசாலையின் அதிபரான Sarah Fuller என்பவரை இங்கு அழைத்தார். அங்கு போஸ்டன், மசாசெட்ஸ் (Massachusetts) பகுதியில் அப்போது Fuller கடமையாற்றியதால் பெல் 1871 இல் அங்கு பிரயாணம் செய்ய நேர்ந்தது. அங்கு இவரது கற்பித்தலுக்கு பெருவரவேற்பு கிடைத்தது. அங்கு 6 மாதங்கள் பயிற்றுவித்த பின்பு அவர் Brantford க்கு திரும்பினார். மீண்டும் அவர் 'Harmonic Telegraph ஆய்வில் தொடர்ந்தார். ஒரு தனிப்பட்ட வயர் மூலம் ஒலி அலைகளை அனுப்புவதே அவரது முயற்சியாக இருந்தது. இதற்கு இரண்டு பக்கங்களிலும் உபகரணங்கள் தேவையாயின. எனவே மீண்டும் போஸ்டன் நகருக்கு ஆசிரியராக சென்றார். அங்கு 1872இல் 'School of vocal Physiology and Mechanics of Speech' என்ற பாடசாலையை போஸ்டனில் நிறுவினார். அங்கு பெருமளவு செவிப்புலனற்றோர் வருகை தந்தனர். 30 மாணவர்களுடன் ஆரம்பித்தார். அவர்களுள் பிரசித்தி பெற்ற ஹெலன் கெல்லரும் Helen Keller உம் ஒருவராவர். அவர் கட்புலன், செவிப்புலன் அற்றவர். பேசவும் முடியாதவர். பெல் அவருக்கு தனிப்பட்ட பயிற்சிகளை வழங்கி மிகவும் சிறந்த திறன்களைக் கொண்டவராக்கினார். மறு வருடம் போஸ்டன் பல்கலைக்கழகத்தில் 'Vocal Physiology and Elocution' பிரிவுக்கு பேராசிரியரானார் இந்தக் காலத்தில் தனது சொந்தவீட்டுக்கும் வசந்தகாலத்தில் வந்து செல்வார். போஸ்டன் பல்கலைக்கழகத்தில் பல விஞ்ஞானிகளை ஆச்சரியப்படுத்தக் கூடிய ஆய்வுகளை செய்தார். அவர் பலருக்கு ரியூசன் வகுப்புகளையும் நடத்தினார். அங்கு தலைவலியாலும் அவஸ்தைப் பட்டுள்ளார்.

1874 இல் அவருடைய 'Harmonic Telegraph' ஆய்வு நல்ல நிலையை அடைந்தது. போஸ்டன் ஆய்வு கூடத்திலும், கனடாவில் உள்ள தனது வீட்டிலும் ஆய்வுகளை மேற்கொண்டார். இந்த வேளையில் எலிசா கிரே, தோமஸ் அல்வா எடிசன், ஜேர்மனியில் பிலிப் ஆகியோரும் தொலைபேசியை கண்டுபிடிப்பதில் தனித்தனியாக முயன்று கொண்டிருந்தனர். இதில் கிரகாம் பெல் மட்டுமே வெற்றி பெற்றார். 1876 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ஆம்திகதி அமெரிக்க அரசு கிரகாம் பெல் கண்டுபிடிப்பை ஏற்றுக் கொண்டு தொலைபேசிக்கான காப்புரிமையை வழங்கியது. உலகிற்கு என்ன தேவையோ அதனை சரியான நேரத்தில் வழங்கிய பெருமை கிரகாம் பெல் அவர்களுக்கே உண்டு. இதே நேரத்தில் Elisha Gray என்பவரும் தொலை-பேசி சம்பந்தமான ஆய்வுகளைக் கொண்டு தனக்கே உரிமம் வேண்டுமென்று வேண்டி நின்றார். எனினுன் பெல்லின் ஆய்வுகள், உபகரணங்கள், ஒலி அலை கடத்தும் விதம், வேறும் விதமான ஒலிகளை எழுப்புதல், அதிர்வுகளை உண்டுபண்ணுதல் போன்ற பல விடயங்களில் கிரகாம் பெல்லுக்கு மட்டுமே அமெரிக்காவின் உரிமம் வழங்கப்பட்டது. அவருடைய செயல் முறைகளை பலர் கொண்டு வியந்தனர். அதே நாள் போஸ்டனுக்கு திரும்பி தனது ஆய்வுகளை மேலும் செல்ல தொடங்கினார்.


உரிமம் வழங்கப்பட்ட 3 நாட்களில் அவர் தொலைபேசி வலைப்பின்னலில் வெற்றி கண்டார். அவர் இந்த தொலைபேசி மூலம் தனது நண்பரும் உதவியாளருமான Watson என்பவரையே அழைத்தார்.



பெல்பேசிய இந்த வசனமே முதலாவது தொலைபேசி அழைப்பாகும். 'Mr. Watson, - Come here I want to see you' என்பதாகும். அடுத்த அறையில் இருந்த Watson க்கு தெளிவாக இக்குரல் கேட்டது. இது மேலும் முன்னேற் றம் பெற்று மின்காந்த தொலைபேசியை (Electrical Magnetic Telephone)உருவாக வழிவகுத்தது. பியானோவில் ஒலி எழுப்பி மின்சாரம் மூலமாக இசையை குறிப்பிட்ட தொலைவுக்கு அனுப்பிய அவர் பேசுவதையும் அவ்வாறு அனுப்பலாமே என்று சிந்தித்தமையை இன்றைய உலகம் விரும்பும் தொலைபேசிக்கும் வழிவகுத்தது. பிலடெல்பியாவில் நடைபெற்ற ஒரு கண்காட்சியில் தனது தொலைபேசியை பார்வைக்கு வைத்தார். அங்கு வந்த பிரேசில் மன்னர் வியப்போடு பார்வையிட்டார். இதன் பிறகு உலகமே அவரை திரும்பிப் பார்த்தது. உலகெங்கும் குரல் வழங்கிய பெருமை அவருக்கு கிடைத்தது.

தொலைபேசி கண்டுபிடிப்புக்காக பிரான்ஸ் நாடு வழங்கிய 50,000 பிராங் பரிசுத்தொகையை கொண்டு பெல் வோல்டா (Volta Laboratory) ஆய்வுக் கூடம் ஒன்றை வோஷிங்டனில் தொடங்கினார். குரலைப் பதிவு செய்யும் ஒலித்தகடுகளை உருவாக்கினார். 1882 இல் அமெரிக்க குடியுரிமை பெற்றதுடன் 1885 இல் தனது குரலை மெழுகு தடவிய கார்ட்போட் தகட்டில் பதிவு செய்துள்ளார். இதி இன்றும் அமெரிக்காவில் உள்ள ஒரு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. காது கேளாதவர் பேசவும் மற்றவர்கள் பேசுவதைப் புரிந்து கொள்வதற்கான முறை

தொடர்ச்சி 36ஆம் பக்கம்...)

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

TUTORING

KEEN TUTORING CENTRE

By Qualified & Experienced Tutors

- CHEMISTRY, PHYSICS, BIOLOGY
- FUNCTIONS, ADV. FUNCTIONS
- CALCULUS & VECTORS, DATA MGT
- SCIENCE, MATH, ENGLISH

GR 9- 12 , UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"

Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

உங்கள்
கல்விக்கான
சிறந்த தெரிவு

✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ M CAT Classes
✓ EQAO GR 3 & 6

Ajax
CREMATORIUM & VISITATION CENTRE INC.
Crematorium Operated by Park Lawn Corp.

# Now Open in Ajax


## New Crematorium / Visitation Centre



**Serving our Community at:**
**384 Finley Avenue Ajax, ON L1S 2E3**
**Tel: 289-372-3300 / *info@acvc.info***

## பார்வைக்கு வைக்கும் இடமும் தகனம் செய்யும் இடமும் ஒரே இடத்தில் அமைந்துள்ளது

- 500 பேர்வரை அமரக்கூடிய விசாலமான சகல வசதிகளுடன் கூடிய மண்டபம்.
- ஒரே இடத்தில் குறைந்த செலவுடன் நிறைந்த மன திருப்தியுடன் உங்களது அன்புக்குரியவரின் இறுதிக்கிரிகைகளை உங்களது சமய முறைப்படி நிறைவேற்றலாம்.
- தகனக்கிரிகை ஞாயிற்றுக் கிழமைகளிலும் நிறைவேற்றலாம்.
- 250 ற்கு மேற்பட்ட வாகனத்தரிப்பிட வசதி.
- வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.




Niru®
Niru 30 Years Of Excellence
கனடிய உணவு கட்டுப்பாட்டு தரத்துடன்
கனடாவில் தயாரித்து பொதி செய்யப்பட்ட
நிரு மிளகாய்த்தூள்
சுவை : தரம் : நறுமணம்




**CONCORD CANADA HOUSE**

***Developer:*** *Concord Adex*
***Architect:*** *Page and Steele/IBI*
***Storeys :*** *68 (* ***Phase 1****) and 75 (* ***Phase 2****)*
*The Signature towers will rise from a shared ten-storey podium containing retail, office space and residential units.*

***Phase 1***

*Bachelor*
*One-bedroom*
*Two-bedroom*
*Three-bedroom*
*Vehicular Parking Spaces*

***Amenities***

*Basketball court*
*Cantilevered pool*
*Cooking Toronto (School)*
*Sobeys (Grocery Shop)*
*T.O. (Grocery Shop)*
*Tuck Shop (Grocery Shop)*
*Bulkco (Grocery Shop)*
*Waterfront Children's Garden (Park)*
*Clarence Square (Park)*
*HTO Park West (Park)*

**For Special/VIP price**
**Please Call:**
**416-321-6969**

**HomeLife/GTA Realty Inc.** *Brockerage

**5215 Finch Ave East #203 Toronto ON M1S 0C2**

*Independently Owned and Operated

# சிவத்தமிழ் விழா 2017



அருந்ததி ஞா.

ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானமும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரியும் இணைந்து நடத்திய சிவத்தமிழ்விழா கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலயமண்டபத்தில் 2017 மே 06ஆம் திகதி நடைபெற்றது. 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரியின் மாணவர்களே முற்றுமுழுதாக பங்குபற்றிய இவ்விழா பதினோராம் ஆண்டு விழாவாக இம்முறை நடைபெற்றது.

மாலை 2:45 மணிக்கு மங்கல விளக்கேற்றல், விநாயகர் துதி, தேவாரம், தமிழ்த்தாய் வாழ்த்து, கனேடியத் தேசியகீதம் மற்றும் கல்லூரிக்கீதம் ஆகியவற்றுடன் ஆரம்பமான விழாவில் வேதபாராயணத்தைத் தொடர்ந்து சிவாச்சார்ய கலாநிதி சிவஸ்ரீ நா. சோமஸ்கந்தக்குருக்கள் ஆசி உரையாற்றினார்.

ஆசி உரையைத் தொடர்ந்து சிறுவர்களது கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. இயலும் இசையுடனும் பத்து மாணவர்கள் 'எமது வாழ்வில் தமிழும் சமயமும்' அளிக்கும்பங்கு என்பதை விளக்கினர். அதைத்தொடர்ந்து 'நம்வாழ்வுக்கு வழிகாட்டியவர்கள்' என்ற நிகழ்வில் ஔவையார், திருவள்ளுவர், மகாத்மாகாந்தி, சுப்பிரமணியபாரதியார் மற்றும் பகவான் ஸ்ரீராம கிருஷ்ணர் போன்று வேடமணிந்து பதின்நான்கு மாணவர்கள் அவர்களது அறிவுரைகளை வழங்கினர்.



இந்நிகழ்வுகளைத் தொடர்ந்து ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி அதிபர் சிவத்தமிழ் வாணி திருமதி. பூங்கோதை அமுதன் வரவேற்புரை நிகழ்த்தினார். உடலுக்கு விழி அத்தியாவசியம். அதேபோல் உணர்வுக்குத் தாய்மொழி அவசியம். விழியை இமைகள் பாதுகாப்பது போல் எம்மொழியைப் பாதுகாப்பது பண்பாடும், சமயமும் ஆகும். மொழி, பண்பாடு, சமயம் இவை மூன்றையும் சேர்த்துப் பாதுகாப்பது வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி என்று கூறி விழாவிற்கு வருகை தந்தவர்களையும் வரவேற்றார்.

இவ்விழாவிற்கு நிகழ்ச்சித் தொகுப்பாளர்களாக திருமதி சுதாரஞ்சினி வாசுதேவக் குருக்களும் திருமதி வத்சலா சதீஸ் அவர்களும் இருந்தனர். சிவத்தமிழ் விழாவிற்குப் பிரதம விருந்தினராக கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களும் கௌரவ விருந்தினர்களாக திரு. பொன்னையா விவேகானந்தன் மற்றும் திரு. வாசுதேவன் இராஜலிங்கம் அவர்களும் வந்திருந்தனர்.



வரவேற்புரையைத் தொடர்ந்து வேத-பாராயணம் நடைபெற்றது. இவ்வேத-பாராயணம் செய்த ஐந்து மாணவர்களும் வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரியில் வேதாகமம் பயில்பவர்களாவர். இதைத் தொடர்ந்து 'தமிழ் பண்டிகை' நடனநிகழ்வு நடைபெற்றது. இதில் பதினெட்டு மாணவர்கள் தைப்பொங்கல், சித்திரைப் புது வருடம் மற்றும் தீபாவளி பண்டிகைகள் பற்றி ஆடிப்பாடி மற்றும் பேசியும் நடித்தார்கள். தொடர்ந்து 'தன்கையே தனக்கு உதவி' என்ற நாடகம் நடைபெற்றது. பிறரின் உதவிகளை எதிர்பாராது தானாகவே தனது வேலைகளைச் செய்வதே மிகச்சிறந்தது என்பதை விளக்கும் ஒரு நாடகத்தை இருபது மாணவர்கள் நடித்துக்காட்டினர். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகளில் 'அடாது செய்வார் படாது படுவர்' என்ற நாடகத்தில் இருபத்தியிரண்டு மாணவர்கள் மிருகங்கள், பறவைகள் போல் வேடமணிந்து நடித்தனர். மாடு, மான், காகம், மயில் மற்றும் நரி போன்று நடித்த மாணவர்களின் நடிப்பு நன்றாக இருந்தது. ஒட்டகம் போல் நடித்தவரின் பேச்சும் நடிப்பும் உணர்வு பூர்வமாக இருந்தது. பதிவு செய்யப்பட்ட ஒலிப்பதிவாக இருந்தாலும் அவரின் பேச்சும் முகபாவனைகளும் அவற்றுடன் நன்றாக ஒத்துப்போனது. 'ஐங்கரனும் ஐயப்பனும்' என்ற பாடல் நிகழ்வில் பதினேழு மாணவர்கள் ஐங்கரனையும், ஐயப்பனையும் பற்றிய பாடல்களைப் பாடினர்.

இந்நிகழ்வுகளின் இடையே திரு. சின்னையா சிவநேசன் மற்றும் திரு. ஸ்ரீமுருகன் சின்னத்துரை அவர்கள் வாழ்த்துரைகளையும் சிவஸ்ரீ முத்து சற்குருநாதக் குருக்கள் ஆசியுரையையும் வழங்கினர். இந்துக்கல்லூரியின் வளர்ச்சி பற்றி அருட்கவிஞான கணேசன் மற்றும் இந்துக்கல்லூரி யோகாசன வகுப்பு ஆசிரியை திருமதி சுபா நகுலாநந்தன் சிறப்புரையும் வழங்கினர். அருட்கவி ஞான கணேசன் அவர்கள் இந்துக் கல்லூரியில்

(தொடர்ச்சி 37 ஆம் பக்கம்...)

# மனவெளி அரங்காடல் 2017

## மைதிலி தயாநிதி

The unity of a text is not in its origin, it is in its destination–Roland Barthes

மனவெளி கலையாற்றுக்குழு வழங்கிய பதினெட்டாவது அரங்காடல் ஞாயிற்றுக்கிழமை, ஏப்றில் 30, 2017 அன்று மார்க்கம் தியேட்டரில் பிற்பகல் ஒருமணிக்கும், மாலை ஆறுமணிக்கும் நடைபெற்றது. நான் மாலை ஆறுமணி நிகழ்வுக்குச் சென்றிருந்தேன். குறித்த நேரத்தில் ஒரு நிமிட மௌன அஞ்லியுடனும், மறைந்த அரங்காடல் கலைஞர்களான கவிஞர் திருமாவளவன், நா. சிவநாதன் என்பவர்களை நினைவு கூருதலுடனும் ஆரம்பமான இந்நிகழ்வில் ஐந்து அரங்க ஆற்றுகைகள் இடம் பெற்றன: பயிற்சிப்பட்டறை நாடகமான 'தரப்படுத்தப்பட்டவை', நீரஜா இரமணியின் 'உயிரி', மெலிஞ்சிமுத்தனின் 'கால சர்ப்பங்கள்', சுமதியின் 'துன்முகி', ஷோபாசக்தியின் 'ஆறாம்படை'. எல்லா ஆற்றுகைகளுமே சமூகவிமர்சன நோக்குடையவையாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. சிலகுறைபாடுகள் இருந்தன எனினும், நல்லதொரு கலை நிகழ்வினைப் பார்த்து அனுபவித்த திருப்தி மண்டபத்தினை விட்டு நீங்கும்போது எனக்கு ஏற்பட்டிருந்தது.



முதலில் மேடையேறிய "தரப்படுத்தப்பட்டவை" எனும் பயிற்சிப்பட்டறை நாடகத்தில் துஷி ஞானப்பிரகாசத்தினால் பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர். சமூக எதிர்பார்ப்புகள் இளையோர் மீது திணிக்கப்படுதலும், அதனால் அவர்களின் தனித்தன்மை, தனி அடையாளம் வளர்வதற்கு இடமளிக்கப்படாமையும், பாதிக்கப்படும் இளையோரின் மனக்குமுறல்களும் மிகவும் வலிமையான நவீன ஆங்கிலக் கவிதை மொழிகள் வாயிலாகவும், அதற்கேற்ற உடல் மொழியாலும் அழகாக வெளிப்படுத்தப்பட்டன. நடிகர்கள் இன்னும் சற்று நிதானமாக வரிகளைச் சொல்லியிருக்கலாமோ என்று தோன்றியது. 'தரப்படுத்தப்பட்டவை' இளையோரின் தனி அடையாளத்தை மறுதலிகின்றன என்பதை உணர்த்தும் முகமாக நடிகர்கள் முகத்தில் வெள்ளைப்பூச்சு / முகமூடி அணிந்து நடித்தனர்.

குழந்தையை ஒருபோதும் மொக்கு என்று வையாதீர்
ஒளிர வேண்டிய விண்மீன்களை ஒருபோதும் சிறை செய்யாதீர்
மனதில் பூட்டப்பட்டிருக்கும் இரகசிய விந்தைகளை எவராலும் அளக்கவியலாது
ஒரே ஒரு பரீட்சை மாத்திரமே இப்பூமிக் கிரகத்தில் உண்டு.

அது இறப்பில் முடிவடையும் பிறப்புடன் தொடங்கும்

என்ற கருத்துப்பட அமையும் கவிதை வரிகள் தரப்படுத்தப்பட்ட கல்விப் பரீட்சைகளுக்கு எதிராக ஓங்கி ஒலிக்கின்றன. இளையோரின் மன இறுக்கம், தற்கொலை என எதிர்மறையான செய்திகளை அதிகமாகக் கேள்விப்படும் சமயத்தில் இவ் ஆற்றுகை மேடையேற்றப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவதாக மேடையேறிய 'உயிரி' எனும் நாட்டிய அளிக்கை, கலைஞர்கள் நீரஜா இரமணி, அனுபா கேமதாச என்பவர்களினால் வழங்கப்பட்டது. நீரஜாவின் வாசிகாபிநயமும் (மொழி மூலம் புலப்படுத்தப்படுவது), ஆங்கிகாபிநயமும் (உடல் அவயவங்கள் மூலம் புலப்படுத்தப்படுவது) அனுபாவின் செலோ வாத்திய இசையுடன் அழகாக இணைந்திருந்தமை இவ் ஆற்றுகைக்கு வலுசேர்த்த அம்சமாகும். மென்மையான குரலில் ஆனால் மிகத் தெளிவாக நீரஜா வழங்கிய பேச்சின் பாங்கு இரசிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால், மேடையில் இரு குவிவிளக்கு வெளிச்சங்களுக்கு நடுவில் நின்று நீரஜா அபிநயிக்கும்போது, அவரின் கைமுத்திரைகளை அவதானிப்பது சற்றுக் கடினமாக இருந்தது. உயிரியின் பிரதி பெண்களின் அதீத காம உணர்ச்சி பற்றிக் கூறும் வடமொழியில் எழுந்த பஞ்ச தந்திரப்பாடல் ஒன்றினை மையமாகக் கொண்டிருந்தது. "எவ்வளவு விறகினை உண்ணினும் தீயின் பசி அடங்காதது போன்று, எத்தனை நதிகள் வந்து சேர்ந்தாலும் கடல் நிறைவடையாதது போன்று, எத்தனை உயிரை எடுத்தாலும், கால தேவன் திருப்தி அடையாதது போன்று, எத்தனை ஆண்களுடன் சேர்ந்தாலும் பெண் திருப்தி காணமாட்டாள்." மேற்கூறப்பட்ட சுலோகத்தை வடமொழி நூல்களிற் கூறப்படும் எந்த எந்த நாயகி, நாயக வகைகளுடன் தொடர்புறுத்தலாம் என்ற வினாவை எழுப்பியதன் மூலம் அறம், நீதி சார்ந்த இலக்கியப் பிரதிகளில் பெண்கள் பற்றிய சித்திரிப்பினை ஆய்திறனுக்குட் படுத்தல் வேண்டியதன் அவசியத்தை

தொடர்ச்சி 40ஆம் பக்கம்...)

# செஞ்சீனா பச்சையாகிறதா?

## பயணக் கட்டுரை - 8

- துறையூரான் -

எமது பயணத்தின் ஆரம்பத்தில் நான்கு நாட்கள் பெய்ஜிங் நகரத்தில் பல்வேறு இடங்களைப் பார்த்த பின் ஐந்தாம் நாள் காலை நாம் தங்கியிருந்த ஆடம்பர ஹோட்டலிலிருந்து சொகுசு வண்டிகள் மூலம் விமானநிலையத்துக்கு சென்றோம். அங்கிருந்த சொங்கிங் என்ற நகரத்துக்கு விமான மூலம் புறப்பட்டோம். அங்கு செல்வதற்கு ஏறக்குறைய 4 மணித்தியாலங்கள் சென்றன.

இப்பகுதி முழுவதும் வடக்குத் தெற்காக, பல ஏற்ற இறக்கங்களோடு யாங்சி ஆற்றுப் பள்ளத்தாக்கை நோக்கிச் சரிந்து செல்கின்றது. இதன் நிலப்பரப்பு காஸ்ற் (Karst) எனப்படுகிறது. அதாவது இது கரையக்கூடிய கற்களான முருகைக்கல், டொலமைற், ஜிப்சம் போன்றவற்றைக் கொண்டுள்ளன. இது நிலக்கீழ் நீரோட்டத்தையும், புதையும் துவாரங்களையும் குகைகளையுங் கொண்டிருக்கும். எமது யாழ். குடா நாடும் ஏறக்குறைய இதைப்போன்றதே. ஆனால் மலைகள் இல்லை. இம்மாநகர சபைக்கூடாக மேற்குக் கிழக்காக யாங்சி ஆறு ஓடுகிறது. இதன் நீளம் 665 கி.மீ. இது வூ மலைகளை மூன்று இடங்களில் ஊடறுத்துச் சென்று மூன்று பள்ளத்தாக்குகளை ஏற்படுத்தியுள்ளது. இவை குவாட்டுங், வுக்சியா, சீலிங் என அழைக்கப்படுகின்றன.



இனி இந்நகர் பற்றிய வரலாற்றைப் பார்ப்போம். இது தென்மேற்குச் சீனாவிலுள்ள பெரிய நகரம். சீனாவில் ஐந்து தேசிய மத்திய நகர்கள் உள்ளன. இவற்றில் நான்கு மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் உள்ள மாநகர சபைகள் ஆகும். அவையாவன: பெய்ஜிங், சங்காய், ரியான்சின், சொங்கிங். மார்ச் 1997 இல் சொங்கிங் மாநகர சபை ஆரம்பிக்கப்பட்டது. இதன் சனத்தொகை 2015 இல் 30 மில்லியன் ஆகும். இதில் 18.38 மில்லியன் மக்கள் நகர்ப்புறத்தில் வாழ்கிறார்கள். சொங்கிங் நகரில் மட்டும் 8.5 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். 2010 ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்கின்படி சீன மாநகரங்களில் கூடிய சனத்தொகையையும் பெரும் பரப்பளவையுங் இந்நகரம் கொண்டது. இது 26 மாவட்டங்கள், 8 மாவட்டகள், 4 தன்னாட்சி வட்டங்களையும் கொண்டுள்ளது. சொங்கிங்குக்கூடாக ஜியாலிங் ஆறு ஓடி யங்சி ஆற்றுடன் கலக்கிறது. இந்த மாநகரம் சீன ஜனநாயகக் குடியரசின் போது சிச்சுவான் மாகாண, மாநகர சபையாக இருந்து இரண்டாம் சீன யப்பான் போரின் போது யுத்த தலைநகராக விளங்கியது. (1937-1945)

சொங்கிங் மாநகரசபையின் அகலம் கிழக்கு மேற்காக 470 கிலோமீற்றராகவும் நீளம் வடக்குத் தெற்காக 450 கிலோ மீற்றராகவும் பரப்பளவைக் கொண்டுள்ளது. இதன் எல்லைகளாக கிழக்கே ஹபே மாகாணமும், தென்கிழக்கில் ஹுனானும், தெற்கே கீஷெனவும், சிசுவான் மேற்கேயும் வட மேற்கேயும், சான்ஷி வடக்கிலும் வடகிழக்கிலும் அமைந்துள்ளன. இதன் பெரும்பாலான பகுதி ஆறுகளாலும் மலைகளாலும் குறுக்கு நெடுக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. வடக்கே டாபா மலைகளும், கிழக்கே வூ மலைகளும், தென்கிழக்கில் வூலிங் மலைகளும், தெற்கே டாலோ மலைகளும் உள்ளன.

சொங்கிங் நகரம் சில விசேடங்களைக் கொண்டுள்ளது. இது மலை மேல் அமைந்து சில பகுதிகள் யங்சி, ஜியாலிங் ஆறுகளால் சூழப்பட்டுள்ளது. இதனால் இது மலைநகரமென்றும் ஆறுகள் நகரமென்றும் அழைக்கப்படுகிறது. இரவில் பல மில்லியன் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு அவற்றின் ஒளி ஆறுகளில் விழுந்து அழகாகக் காட்சியளிக்கிறது. இதன் தரைப்பகுதி மலைகள், ஆறுகள், காடுகள், நீரூற்றுகள், நீர்வீழ்ச்சிகள், மலையிடைப்பள்ளத்தாக்குகள், குகைகள் எனப் பலதரப்பட்ட வடிவங்களைக் கொண்டு விளங்குகின்றது. முக்கியமாக நகரின் மத்திய பகுதி பெரிய ஒரு மடங்கு பகுதியாக உளது. இது ஐக்கிய அமெரிக்காவிலுள்ள அப்பலாச்சின் மலைத்தொடர்கள் போல் காட்சியளிக்கிறது. இதன் அருகில் ரொங்குளோ மலையும் சொங்லியாங் மலையும் இரு இறங்கு பகுதிகளாக உள்ளன. இப்பகுதி பெரும்பாலான வருடம் முழுவதும் உஷ்ணமான ஆனால் ஈரலிப்பான காலநிலையைக் கொண்டிருக்கும். ஜுலை, ஓகஸ்ட் மாதங்களில் இங்கு வெப்பம் 33–34 செல்சியசாகவும், பிறமாதங்களில் இதற்குக் குறைவாகவும் இருக்கும். பனிக்காலம் குறுகியதாகவும் எப்போதும் ஈரலிப்பாகவும், மப்பாகவும் இருக்கும். நாங்கள் சென்றபோது இவ்வாறான நிலையே காணப்பட்டது.

சொங்கிங்கின் மத்திய பகுதி, சீனாவின்

தொடர்ச்சி 35ஆம் பக்கம்...)

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்

ECA



JOB READY PROGRAMS

EARLY CHILDCARE ASSISTANT(ECA)
40 Weeks
Classes starting soon

PERSONAL SUPPORT WORKER(PSW)
28 Weeks
Immediate Job Opportunities

ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks
Jobs available in plenty

COMPUTERIZED ACCOUNTING
26 Weeks

FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks

GOVERNMENT GRANT
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ [illegible] EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றைக் கற்கலாம்
Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $28000 or more

PART TIME COURSES
*Windows, Word, Excel, Power Point, Access, QuickBooks, Sage50 Accounting (Simply) & Accpac 2012*
Workshops
Food Handler Certification
First Aid & CPR

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Student Friendly Environment
- Ample Free Parking
- Placement Assistance
- TTC Accessible
- Instructors with over 15 years of Canadian Experience

416-291-5155 / 416-500-5300
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# இன்னல் நீக்கும் இயற்கை -2

- அகணி -
authorakani@gmail.com



அன்பான விளம்பரம் வாசகர்களே!

கடந்த இதழில் இருந்து ஆரம்பிக்கப் பட்டுள்ள “இன்னல் நீக்கும் இயற்கை” என்ற தொடர்கட்டுரை எத்திசை நோக்கிப் பயணிக்கப் போகின்றது என்பதை கட்டுரையின் ஆரம்பப் பகுதியில் இருந்து நீங்கள் ஊகித்திருப்பீர்கள் என்று நம்புகின்றேன். உலகத்தில் ஏற்படும் தொழில்நுட்ப வளர்ச்சியும் செயற்கை முறைகளின் ஆதிக்கமும் இந்த உலகத்தில் உள்ள அற்புதமான இயற்கை வளங்களை அறியாது அல்லது பயன்படுத்தாது இருக்கின்ற நிலைமை அதிகரித்துச் செல்லும் கால கட்டத்தில் இயற்கை சார்ந்த வளங்களை அறிந்து, ஆய்ந்து பயன்படுத்தி இன்னல் நீக்கி வாழ்வை வளமாக்க உதவும் குறிப்புக்களை இந்தத் தொடர்கட்டுரை மூலமாக வெளிக்கொணர்வதே எனது எண்ணமாகும்.

இயற்கை வளங்களைப் பயன்படுத்திக் கொள்வதில் இயற்கையோடு தொடர்புடைய பல்வேறு அறிவியல் துறைசார் விடயங்களையும், விஞ்ஞானக் கருத்துக்களையும், மெஞ்ஞானக் கருத்துக்களையும் சுருக்கமாக அலச வேண்டிய தேவையும் ஓரளவுக்குத் தேவைப்படலாம் என்று கருதுகின்றேன். இந்தக் கட்டுரையில் நான் பதிவு செய்யும் குறிப்புக்கள் உலகில் இத்துறை சார் அறிஞர்களால், அவர்களின் படைப்புக்களால், பட்டறிந்த மக்களால் வெளிக் கொணரப்பட்ட இயற்கையான வழிமுறைகளை ஆய்வு ரீதியில் அணுகி உரையாடும் நோக்கில் உள்ளன. இவை பற்றிய நமது அறிவை விரிவாக்கும் நோக்கில் இந்தத் தொடர்கட்டுரை அமையுமே அன்றி ஒரு மருத்துவ வழிகாட்டியாக அமையாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். உங்களின் நோய்களுக்கு உரிய நேரத்தில் வைத்தியர்களை நாடிப் பொருத்தமான ஆலோசனை பெறவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இந்தத் தொடர் கட்டுரையில் கூறப்படும் அதிகமான வழிமுறைகள் வெள்ளம் வருமுன் அணை கட்டுவது போன்று இயற்கை மருத்துவர் களாலும் அறிஞர்களாலும் நோய் வருவதைக் குறைக்கும் முகமாகப் பயன் படுத்தக் கூடியவையாக உள்ளன. உலகில் பல்வேறு இயற்கை வழிமுறைகள் மருத்துவ சிகிச்சை பெறுகின்ற காலத்திலும் சமாந்தரமாகப் பயன்படுத்தப்படக் கூடியவை யாக உள்ளன. எவ்வாறு இருப்பினும் பொருத்தமான வைத்திய ஆலோசனை அவசியமானதே என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

பேராசிரியர் அடிகளார் விபுலானந்தர் அவர்கள் எழுதிய அறிவியல் கட்டுரைகளில் உற்பத்தி விளக்கம் என்ற தலைப் பின்கீழ் சூரியன் உற்பத்தி, சந்திரன் உற்பத்தி, ஐம்பூதங்கள் போன்றவை பற்றிய வானவியல் அறிவியல் கருத்துக்களை வெளிக்கொண்டு வந்துள்ளார். ஐம்பூதங்களில் முதலில் வானமே தோன்றிய தென்றும் அடுத்து காற்றும் பின்னர் தீயும், நான்காவதாக நீரும் தோன்றி ஈற்றில் உயிர்கள் தோன்றுவதற்காக நிலம் தோன்றியதென்றும் விபரித்துள்ளார். ஒவ்வொரு பூதங்களும் தோன்றுவதற்கிடையில் பல ஊழிகள் (காலங்கள்) சென்றதாக அடிகளார் கூறியுள்ளார். உயிர்த்தோற்றத்திலும் ஓரறிவு உயிர்கள், மூவறிவு உயிர்கள் எனப் படிப்படியாகவே தோற்றங்கள் நடந்தன என விளக்குகின்றார். ஒரு காலத்தில் சூரியனும் கிரகங்களும், உப கிரகங்களும் ஒன்று சேர்ந்து தீப்பிழம்பாகவே இருந்தன என்றும்




குறிப்பிட்டுள்ளார். இவற்றை அறியும் பொழுது இவ்வுலக உயிர்களுக்காகவே இயற்கை உள்ளது என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது. இயற்கை தந்த கொடையாக உள்ள இயற்கை வளங்களில் மனிதன் உயிர் வாழ்வதற்கும், நோய்கள் வராது தடுக்கவும் நோய்கள் நீக்கவும் உதவும் வளங்களும், வழிமுறை களும் தாராளமாக உள்ளன. செயற்கையாகச் செய்யப்படும் மருந்துகளும் இயற்கையில் உள்ள பொருட்களைக் கொண்டே தயாரிக் கப்படுகின்றன. மருத்துவ ஆய் வாளர்களும் இயற்கையை நாடியே தீர்வுகளையும், கண்டுபிடிப்புக்களையும் செய்கின்றார்கள் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். குரானில் “இறைவனே இரவையும் பகலையும் சூரியனையும் சந்திரனையும் படைத் தான். வானில் தத்தமது வட்ட வரைக்குள் ஒவ்வொன்றும் நீந்துகின்றன.” என்று சொல்லப்படுகிறது. இவ்வாறாக உலகம் இறைவனால் படைக்கப்பட்டது என்ற கருத்து பல்வேறு மதங்களிலும் நிலவுகின்றது. விஞ்ஞானத்திலும் இனம் புரியாத சக்தி ஒன்றினால் உலகம் தோன்றியது என்ற கருத்தும் உள்ளது. யோகிராஜ் ஸ்ரீ வேதாத்திரி மகரிஷி சென்னையில் 1911ஆம் ஆண்டுக்கும் 2006ஆம் ஆண்டுக்கும் இடையில் வாழ்ந்த ஓர் ஆன்மிகத் தலைவர். இவர் உலக மெங்குருவாக்கம் 300ற்கு மேற்பட்ட யோகா நிலையங்களை உருவாக்கியதோடு 80ற்கு மேற்பட்ட நூல்களையும் எழுதியுள்ளார். இவர் ஆயுர்வேத மருத்துவத் துறையிலும் கற்றுத் தேறியவர்.

அவர் உருவாக்கிய ஆன்மிக நிறுவனம் உலக சமுதாய சேவா நிலையம் என்பதாகும். இந்த நிலையம் “வாழ்க வையகம் வாழ்க வளமுடன்” என்ற தாரக மந்திரத்துடன் சேவை புரிகின்றது. இவரது பல நூல்கள் பாடநூல்களாகவும் உள்ளன. “மனிதர்கள் வாழ்க்கையில் பொருளாதார விடயங்களைக் கவனித்துக் கொண்டு ஆன்மிகத்திலும் உயர்வதற்கு இவ்வுலகத்தின் இயற்கை பற்றி நன்கு புரிந்து கொண்டிருத்தல் மிகவும் அவசியமானது” என்று கூறியிருக்கின்றார். இவரது ஆன்மிக உரைகளில் வானியல், ஐம்பூதங்கள் பற்றி விரிவாக விளக்கப்படுகின்றன. மனங்கள் நமது நாளாந்த போராட்டங்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்காது பிரபஞ்சத்தைப் பற்றி சிந்தித்து விரிவு பெற வேண்டும் என்று போதித்தார். கோள்கள், நட்சத்திரங்கள் பற்றியெல்லாம் கூறும் வானியலை சாதாரண மக்களுக்கு எடுத்துக் கூறி வந்தார். அவரது விளக்கம் விஞ்ஞானக் கொள்கைகளோடு சமரசம் செய்யக்கூடிய விதமாக இருந்தது. கிரகங்கள் சுயமாக வெளிச்சத்தைக் கொடுக்க முடியாதவை. ஆனால் நட்சத்திரங்கள் சுயமாக வெளிச்சம் அளிக்கக் கூடியவை. சூரிய மண்டலத்தில் விண்ணில் மிதந்து கொண்டிருக்கும் விண்கற்களின் எண்ணிக்கை 40,000 வரை இருக்கும் என்றெல்லாம் அவர் கூறிவந்தார். அவரின் ஆன்மிக உரையில் விண்வெளியில் உள்ளவை சுழல்வதாலும், எல்லாத்திசையிலும் அழுத்தப்படுவதாலும் உருண்டையாக உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார். இவரது கருத்துக்கள் வேதாத்திரிய சிந்தனைகள் என்ற பெயரால் பரவியது. பிரபஞ்சமே இறைதுகள்களால் உருவானது என்பது வேதாத்திரிய மகரிஷி அவர்களின் கருத்து. பல்பேரண்டங்களைக் கடந்து செல்லும் பொழுது சுத்த வெளி எனப்படும் பிரதேசம் வானில் உள்ளது என்றும் கூறியிருந்தார். இயற்கையில் மனிதன் இன்பமாக வாழ்வதற்கென்றே எல்லாம்

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**
விளம்பரம் பத்திரிகையில் “காலத்தோடு வளரும் கணினிகள்” என்ற தலைப்பில் வெளிவந்த தொடர் கட்டுரை நூலுருவில் வெளி வந்துள்ளது. நூலின் பிரதிகளை விளம்பரம் பத்திரிகைப் பணிமனையில் வாங்கிக் கொள்ளலாம்.

அமைந்துள்ளன. ஆனால் மனிதர்களின் தவறுகளால் துன்பம் ஏற்படுகின்றது. மனிதனின் தவறுகள் தடுமாற்றம், தடமாற்றம் போன்ற இரண்டு செய்கைகளால் ஏற்படுகின்றன. இயற்கை தனது கடமையை நேர்த்தியாகச் செய்து வருவதைக் கவனிக்கும் பொழுது மனிதர்களாகிய நாங்களும் எங்கள் கடமைகளை நேர்த்தியாகச் செய்ய வேண்டும் என்ற விடயத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம். மனிதர்கள் இயற்கை தரும் வாய்ப்புக்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உணவு உடலில் சென்று ஏழு தாதுக்களாக மாற்றம் அடைகின்றது. மனிதர் அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுவதால்தான் அதிக துன்பம் வருகின்றது. இந்த உண்மையை நாம் அறிந்திருந்தாலும் திரும்பத் திரும்ப தவறு செய்கின்றோம். இயற்கை வளத்தை விரயமாக்காது நாங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். உடலில் ஓடுகின்ற ஜீவகாந்த அலைகள் பெருக்கம் பெறச் செய்ய வேண்டும். உடலில் ஜீவகாந்த அலைகள் வலுப்பெறும் பொழுது உடலும், உள்ளமும் வலிமை பெறும். பிரபஞ்சத்திலும் காந்த அலைகள் உள்ளன. பிரபஞ்சத்தின் காந்த அலையுடன் நமத உடலில் ஓடுகின்ற ஜீவகாந்த அலைகள் தொடர்பு கொள்ளும் பொழுது எங்களின் எண்ணங்கள் நிறைவேறுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகும். ஒருவர் இனிமையாகப் பேசும் பொழுது, மகான்களின் படங்களைப் பார்க்கும் பொழுதும் ஜீவகாந்த அலைகளுக்கும் பிரபஞ்ச அலைகளுக்கும் இடையில் தொடர்பு ஏற்பட்டு எண்ணங்கள் ஈடேறும் என்று சொல்லப்படுகின்றது. ஜீவகாந்த அலைகளின் பெருக்கத்திற்கு மனமே முக்கிய காரணம்.

அன்பான விளம்பர வாசகர்களே!
அடுத்த இதழில் தொடர்ந்து ஆய்வு செய்வோம்.

(தொடரும்)

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL



• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# பாகுபலி: The Conclusion - திரைவிமர்சனம்



ஞா. ஆரணி அகவை 18

2015இல் வெளிவந்த 'பாகுபலி: The Beginning' என்ற படத்தின் இரண்டாவது பாகம் 'பாகுபலி: The Conclusion' ஆகும். முதலாவது படத்தின் வெற்றிக்கு பின்னர் இந்தப் படம் பெரும் எதிர்பார்ப்புகளுடன் April 28 ஆம் திகதி வெளியானது. இப்படம் முதலாவது பாகம் முடிந்த இடத்தில் ஆரம்பமாகிறது. காலகேயர்களுக்கு எதிராக நடந்த போரில் மகிழ்மதி வெல்கிறது. ராஜமாதா சிவகாமி, அமரேந்திர பாகுபலி அடுத்த அரசனாகவும், அவளது சொந்த மகன் பல்லாள் தேவன் படைத்தளபதியாகவும் வரவேண்டும் என அறிவிக்கின்றார்.

அமரேந்திர பாகுபலிக்கு கல்யாணம் செய்ய சிவகாமி ஒரு பெண்ணைத் தேடுகிறார். இத்தோடு சிவகாமியும் அவர் அரசனாக முன் மகிழ்மதியை மாறுவேடத்தில் ஒருமுறை சுற்றிப்பார்க்க வேண்டும் என்கிறார். அவரும் சரி என துணைக்கு கட்டப்பாவை அழைத்துக் கொண்டு செல்கிறார். இருவரும் இவ்வாறு சென்று மக்களது கஷ்டங்களை அறிகின்றனர்.

படம் இவ்வாறு செல்லுகையில் அமரேந்திர பாகுபலியும் குந்தளதேச சிற்றரசின் இளவரசியான தேவசேனாவை (அனுஷ்கா) சந்திக்கிறார். அவள் மீது காதல் கொள்ளும் பாகுபலி எவ்வாறு தேவசேனாவுடன் பழகுகிறார் எனப் படத்தைப் பார்த்து அறியுங்கள்.

தான் அரசனாக வேண்டும் என விரும்பும் பல்லாள்தேவன் எவ்வாறு அரசைக் கைப்பற்றுகிறான் என்றும், கட்டப்பா ஏன் அமரேந்திர பாகுபலியை கொல்கிறார் என்றும், பின்னர் அமரேந்திர பாகுபலியின் மகன் மகேந்திர பாகுபலி மகிழ்மதியை மீண்டும் கைப்பற்றுவாரா? எனவும் படத்தை பார்த்து அறியுங்கள்.

பிரமாண்டமான காட்சிகளும், பெரும் பணச் செலவும், மிகவும் இலாபம் ஈட்டியது எனவும் புகழ்பெற்ற முதலாவது படத்தைவிட இரண்டாவது படம் இன்னும் பிரமாண்டமாக இருக்கின்றது. பாகுபலி 1ஐ விட பாகுபலி 2, இரண்டு மடங்கு பணச் செலவுடன் எடுக்கப்பட்டது. எமக்குத் தெரிந்த இடமான மகிழ்மதியையும் அதில் இருப்பவர்களையும் புதிதாகக் காணுகிறோம். அத்துடன் புதிதாக குந்தள தேசம் மற்றும் அங்கு வாழும் இளம் தேவசேனாவையும் அவரது குடும்பத்தையும் சந்திக்கின்றோம்.



தேவசேனாவாக அனுஷ்காவும், சிவகாமியாக ரம்யா கிருஷ்ணனும் மிக நன்றாக நடித்துள்ளனர். குறிப்பாக போர்வீரரும் இளவரசியுமான தேவசேனா எவ்வாறு யார் பிழை விட்டாலும், அதை அஞ்சாமல் வீரமுடன் எதிர்ப்பது நன்றாக காட்டப்படுகிறது.

பாகுபலி தேவசேனாவை மகிழ்மதிக்கு அழைத்துச் செல்லும்போது அவளுக்கு மானபங்கமோ, ஆபத்தோ நேரத் தான் விடமாட்டேன் என வாக்குறுதி கொடுக்கிறார். அதை நம்பிவரும் தேவசேனாவை அரசனாகச் சூழ்ச்சி செய்யும் பல்லாள்தேவனின் ஆட்கள் அவமதிக்கின்றனர். தேவசேனா மீது தீய எண்ணத்துடன் தொட முயலும் ஒருவனின் விரல்களை தேவசேனா வெட்டுகிறார். அரச அவையில் சங்கிலிகளில் கட்டப்பட்டு விசாரணைக்கு நிற்கும் தேவசேனாவிடம், "பெண்களைத் தவறாகத் தொடுபவனின் விரல்களை வெட்டுவது தவறு" எனக் கூறும் பாகுபலியைப் பார்த்து கவலைப்படும் பார்வையாளர்களையும், திரைஅரங்கையும் அதிரவைக்கும் பாகுபலியின் அடுத்த செய்கை பார்வையாளர்களது கைத்தட்டலை பெறுகிறது.

முதல் படத்தைப்போல இதிலும் ஒரு சிறந்த அரசன் எவ்வாறு இருக்க வேண்டும் எனக் காட்டப்படுகிறது. உதாரணத்திற்கு 'உயிரைப் படைப்பவர் கடவுள், உயிரைக் காப்பாற்றுபவர் வைத்தியர், உயிரைக் காப்பவர் அரசன்' எனக் கூறுப்படுகிறது.கதாநாயகனுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படமாக இது இருந்தாலும், தேவசேனாவிற்கும், சிவகாமிக்கும் கொடுக்கப்பட்ட முக்கியத்துவமும், வசனங்களும், அவர்களுக்கு இடையே நடக்கும் வாக்குவாதங்களும், மற்றும் இந்நடிகைகள் கதாபாத்திரமாகவே மாறி நடிக்கும் திறமையும் இப்படத்தில் நன்றாகக் காட்டப்படுகின்றன. தென்இந்திய சினிமாவின் பிரமாண்டத்தையும், தரத்தையும் காட்டும் இப்படத்தை எல்லோரும் கட்டாயம் திரையில் பார்க்க வேண்டும்.

**இளையோர் ஆக்கம்** இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.



Math tutorial 342

Answers to tutorial 341

1)Since we want the smallest number of years . let the father's age be 27 & the son's age is 6 .After one year the father's age will be 28 and the son's age will be 7

2)The light flashes in 6mts ,12mts ,18mts ,and 24mts.The bell rings in8mts ,16 mts and 24 mts.The elapsed time before reoccurrence is 24 mts.Note that 24 is the LCM of 6&8.

3)Slope of y= 8x+b and $y=2x^2$ are equal.therefore 4x=8 ,x=2 substituting in $y=x^2$, $y= 2(2)^2=8$. The point is (2,8), subs. X=2 in y=8x+b , b=y-8x,y=8-16 =-8

4)Given vector a=4i-3j+k =(4, -3 ,1)A vector parallel to the xy plane has the form u=(p ,q,0) ,since $\bar{a}$ is perpendicular to $\bar{u}$,$\bar{a}.\bar{u}$=0 and 4p-3q =0 ,choosing p=3 and q-4 gives vector $\bar{u}$=(3 ,4 0) which is perpendicular to $\bar{a}$,now the magnitude of $\bar{u}$ =$\sqrt{(9+16)}$=5 therefore the req. unit vector is

$\bar{u}$=(3/5 ,4/5 ,0)

Tutorial 342 Questions

1)A10kg mass is supported by two strings of length 5m and 7 m attached to two points in the cealing 10m apart.Find the tension in the string.

2)Given $\bar{a}$=(2 ,3 ,7 ) and $\bar{b}$=-4 ,y , -14 ,for what value of y are the vectors collinear?

3)Calculate the area of the parallelogram with sides consisting of vectors $\bar{a}$=(1 ,2 ,-2) and $\bar{b}$ =(-1 ,3 ,0 )

4)You are driving from point A(24 ,96 )on a map grid toward point B with a velocity defined by $\bar{d}$(85 -65)km/h.State the parametric equation of the highway line.

5)Find symmetric equations for the line through the origin that is parallel to the line thro.the points(4 ,3 ,1)&(-2 ,-4 ,3)

By Mr S.F.Xavier(Teacher) tel 6473409490/4167322228

## BASEMENT RENT

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, utilities. Close to all facilities. Avail. immediately.
**905.554.5403 / 416.662.7160**

---

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately. தொடர்புகளுக்கு:
**416.546.8253 / 647.741.5335**

---

**OLD FINCH AVE. & MORNINGSIDE AVE.**
1 Bedroom Bsmt for rent. Sep. entrance. Laundry, internet. Close to all amenities. Avail. Immediately. தொடர்புகளுக்கு:
**647.855.6482 / 416.832.5381**

---

**14 TH AVE. & MARKHAM**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, sep washer & dryer, 1 parking, 30% utilities. Close to all facilities. No pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.631.5745**

---

**MORNINGSIDE & SHEPPARD(GOUDI RD.)**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, parking, utilities. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.881.5239**

---

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Couple/Family preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.278.3124**

---

**MORNINGSIDE & STAINES**
Brand new spacious & bright 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC & all facilities. Avail. immediately.
**416.882.4170 / 647.882.0156**

---

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.710.8304 / 647.717.9157**

---

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.501.3006**

---

**STEELES & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Parking, laundry, internet. Close to all facilities. Avail. June 01, 2017. தொடர்புகளுக்கு:
**647.872.0524 / 647.867.5307**

---

**MARKHAM & STEELES**
3 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry. Student preferred. Close to TTC, school. Avail. June 01, 2017.
**905.471.2582 / 647.505.2582**

---

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry. Close to all facilities. Single preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.655.6370**

---

**BRIMLEY & EGLINTON**
பங்களா வீட்டில் ஒரு அறையுடன் கூடிய bsmt வாடகைக்கு உண்டு. Sep. entrance. laundry. No smoking. தொடர்புகளுக்கு:
**416.294.0193 / 416.892.7762**

---

**MORNINGSIDE & STAINES**
1 Bedroom bsmt for rent. Couple or Seniors preferred. Close to all facilities. Avail.immediately.
தொடர்புகளுக்கு: **647.330.4327**

---

**KENNEDY & ELLESMERE**
இரு முதியோர்(Husband & wife) வசிக்கும் வீடொன்றில் 1 bedroom walkout bsmt வாடகைக்கு உண்டு. Close to all facilities. படிக்கும்/வேலை செய்யும் பெண்கள் மட்டும்.
**416.291.6667 / 416.895.8111**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & BRIMORTON**
3 Bedroom bsmt for rent. 2 Washroom. Sep. entrance, Parking, laundry. Close to all faciliteis. No Pets / No Smoking Avail. June 01, 2017.
தொடர்புகளுக்கு: **647.206.8145**

## BASEMENT FOR RENT

**KENNEDY & ST. CLAIR**
2 Bedroom Bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all amenities. Avail. July 01, 2017.
தொடர்புகளுக்கு: **416.266.7704 / 416.346.2971**

## BASEMENT FOR RENT

**KENNEDY & FINCH**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, large living room, Sep. laundry. Close to TTC, school. No pets & No smoking. Avail. immediately. Couple or 2 Working Ladies preferred.
**416.574.5663 / 416.332.3781**

## BASEMENT FOR RENT

**KENNEDY & EGLINTON**
2 Bedroom furnished bsmt apartment for rent. Sep. entrance, parking, laundry, internet, utilities. Close to all facilities. No pets/No smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.930.1171**

## BASEMENT FOR RENT

**STAINES & SEASONS**
1 Bedroom + Den bsmt for rent. Sep. entrance, parking, laundry, internet. Close to TTC & all facilities. Single / couple working person preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.527.6877**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## ROOM FOR RENT

**BRIMLEY & EGLINTON**
Rooms for rent in main floor. Living room, Kitchen, washroom, Parking. Close to all amenities. Available. immediately.
தொடர்புகளுக்கு: **416.833.9567**

## HOUSE/BASEMENT FOR RENT

**PHARMACY & MCNICOLL**
4 Bedroom house for rent. Avail. immediately.
3 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.866.9464**

## ROOM FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom for rent in a 2 bedroom **Condo**. Sep. washroom, laundry, cable, internet, kitchen to share, sep. car park. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.835.5244**

## ROOM FOR RENT

**STAINES & MORNINGSIDE**
5 Bedrooms available for rent in main floor . Only seniors (Ladies preferred)
தொடர்புகளுக்கு:
**647.888.9437**

## APARTMENT FOR RENT

**MARKHAM & EGLINTON**
2 Bedroom apartment இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Female preferred.
**647.272.3704 / 647.219.6553**

## HOUSE FOR RENT

**BRIMLEY & LAWRENCE**
3 bedrooms house for rent. Available July.
தொடர்புகளுக்கு:
**647.296.7932**

## வீடு வாடகைக்கு கொடுத்திட/பெற்றிட

வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட அழையுங்கள்: **647.402.2937**

மேலும் பக்கங்கள் 28, 29, 30, 32, 33

## CONDO RENT

**WARDEN & FINCH**
3 Bedroom condo for rent. Parking, laundry, cable, utilities. Family preferred. Close to Mall, School, TTC, Hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.704.4444**

## HOUSE FOR SALE

**MARKHAM & ELLESMERE**
Established Commercial Laundry Plant (Linen) company for sale.
தொடர்புகளுக்கு: ***Kannan Kankesu***
**416.834.4200**

## SPACE FOR RENT

Space available for rent.
5210 Finch Ave.East, unit #2
Scarborough, Ontario
M1S 4Z6
தொடர்புகளுக்கு: **416.710.0193**

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட அழகிய பண்பான படித்த 34 வயதுடைய மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றார்கள்.
தொடர்புகளுக்கு: **416.519.0061**

## மணமகள் தேவை

யாழ் இந்துசமய நற்குடும்பத்தைச் சேர்ந்த கனடிய பிரஜையும், உயர்கல்விகற்று உயர்பதவியிலும் இருக்கும்,1977 இல் பிறந்த, செவ்வாய் தோஷமுள்ள தங்கள் மகனுக்கு, பெற்றார் தகுந்த மணமகளை எதிர்பார்க்கிறார்கள்.
**905 488 1735** (Message Please)

## மணமகள் தேவை

31 வயதுடைய London(UK) இல் வாழும் MBA படித்த செவ்வாய் குற்றமற்ற மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றோம். கனடா, Europe இல் உள்ள மணமகள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **647.708.9937**

## திருமண சேவை

### ஸ்ரீசாயி திருமணசேவை

உங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான வாழ்க்கை துணையை தேடிக்கொள்ள எங்கள் சேவையை நாடுங்கள். பல துறைகளில் தகுதி பெற்ற மணமகன், மணமகள் உள்ளனர்.
***416.890.6497/srisai2912@hotmail.com***

## ROOM FOR RENT

***MCCOWAN & BRIMORTON***
3 Bedroom for rent in a bsmt. 2 Washroom. Ladies preferred. Close to all faciliteis. NO Pets No Smoking. Avail. June 01, 2017.
தொடர்புகளுக்கு: ***647.848.2850***

***BROCK & TAUNTON (PICKERING)***
1 Bedroom for rent in main floor with food or without food. Parking, laundry, internet. Close to all faciliteis. Avail. immediately.
***647.628.4754 / 647.351.4315***

***MORNINGSIDE & OLD FINCH***
1 Room for rent with food. Laundry, internet. Close to Eraa Super Market, TTC, etc.பெண்கள் விரும்பத்தக்கது. Avail. June 01, 2017. தொடர்புகளுக்கு:
***647.739.6416 / 647.740.1504***

***BIRCHMOUNT & FINCH***
Room for rent in a 2 bedroom Condo. 1 or 2 bedrooms available. All inclusive. Close to all facilities. Avail. immediately.
***905.475.6702 / 416.293.2456 (SAT. & SUN.)***

***MIDLAND & STEELES***
வீடொன்றில் அறைகள் உடனடியாக வாடகைக்கு உண்டு. 24 hours பஸ் நடை தூரத்தில் தமிழ் கடைகள், No Frills உண்டு
***Call: (416) 894-9309***

***NEILSON & SHEPPARD***
***Malvern mall***க்கு அருகில் அறைகள் வாடகைக்கு உண்டு. ***Couple / small family*** விரும்பத்தக்கது. ***Avail. immediately.***
தொடர்புகளுக்கு***: 647.529.7320***

***PHARMACY & FINCH***
**3 bedfoom on the mainfloor for rent. Close to TTC all facilities. Unlimited internet. Avail. immediately.** அழைக்கவும்.
தொடர்புகளுக்கு: ***416.201.1222***

***KENNEDY & LAWRENCE***
1 Room for Rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
***647.923.8283 / 647.247.6311***

***SEASONS DR. & STAINES***
One bedroom for rent. Parking, laundry, cable, internet, utilities. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: ***647.656.1700***

***NEILSON & FINCH***
1 Bedroom for rent in bsmt. Single seniors preferred. No smoker, no parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: ***416.802.6067***

***MORNINGSIDE & STAINES***
1 Bedroom for rent in a mainfloor. Female only with Food or not. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: ***416.505.7922***

***MORNINGSIDE & SEWELLS***
Morningview Trail இல் 4 அறைகள் கொண்ட வீட்டில் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. Washroom, kitchen must be shared. Female preferred. Close to TTC - 131 bus, school.
தொடர்புகளுக்கு: ***416.805.8791***

## HOUSE FOR RENT

***NEILSON & FINCH***
3 Bedroom house for rent. Close to 24 hrs bus, school, shopping mall & Eraa super market. Avail. July 01, 2017.
***416.299.3919 / 416.456.1031***

***FINCH & TAPSCOTT***
3 Bedroom house for rent. Rent $1400 + 60% utilities. No Alcohol , No Smoking & No Pets. தொடர்புகளுக்கு:
***647.855.2148 / 647.771.3735***

***MILLARD & 9TH LINE***
4 Bedroom full house for rent. Double garage, 2 1/2 Washroom. Avail. September 01, 2017.
தொடர்புகளுக்கு: ***647.771.4250***

***MARKHAM & LAWRENCE***
3 Bedroom + 1.5 Bathroom mainfloor unit or a bangalow house for rent. $1600 + utilities per month. Avail. immediately.
***416.618.5907 / 416.271.5420***

***MARKHAM & DENISON***
4 bedroom town house for rent.
Haran Thangavadivel (Sales Representative)
HomeLife / Future Realty Inc, Brokerage*
***Contact: 416.880.4829***

***MCCOWAN & LAWRENCE***
3 Bedroom house for rent. Parking, laundry, utilities. Close to Hospital, Banks, S.P importers, Bus. Avail. anytime.
***647.686.3283 / 647.712.3055***

***SALEM & ROSSLAND***
4 Bedroom single detached house for rent. Parking, laundry. Close to school, mall, bus. Family preferred. Avail. August 01, 2017.
***438.879.6064 / 905.550.7006***

## Tutoring

**Gr. 1 - Gr.12, College & University students Math, Science, English, Advance Functions Calculus** **& Vectors, Data, physics, Chemistry.** ***Free EQAO preparation class. University Calculus I & II, Linear Algebra, Physics, Chemistry.*** **Ruban Master: 416.817.8226**

## HOME DAY CARE

இலங்கையில் 15 வருட சேவை அனுபவமுள்ள பாலர் பராமரிப்பு நிலையத்தில் தலைமை ஆசிரியராக கடைமையாற்றி தற்போது கனடாவில் 7 வருட Day care அனுபவமும் கொண்ட ஆசிரியர். 4 மாதம் தொடக்கம் 4 வயது வரையான பிள்ளைகளை தமது Home daycare க்கு விட விரும்பும் பெற்றோர்கள் தொடர்புக்கொள்ள:
***647.704.7157***

## உடனடி வாடகைக்கு

வீடுகள், கொண்டோக்கள் வாடகைக்கு விட, வாடகைக்கு பெற்றுக்கொள்ள அழையுங்கள்:
***416-816-9011***

மேலும் பக்கங்கள் 28, 30, 31, 32, 33

## HOUSE FOR RENT

### *MARKHAM & HWY7 / 9TH LINE*

04 Bedroom house for rent. Parking, cable, internet. Family Preferred. Close to all facilities. Avail. June 01, 2017.

தொடர்புகளுக்கு:
***647.284.2499 / 647.771.7693/ 905.201.7693***

## APARTMENT FOR SALE

### *NELSON PLACE, WELLAWATTE COLOMBO*

2 Bedroom & 2 Washroom apartment for sale.
தொடர்புகளுக்கு: ***647.928.5956***

## வீடு விற்பனைக்கு

வவுனியாவில் 5 Rooms, 2 kitchen, double hall, 2 attached bathroom, one separate bathroom கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. 40 perches. deed land. Deed was clear. Opposite for Koomankulam school. வீட்டுடன் ஒரு கடையும் உள்ளது. இன்னும் இரண்டு கடை கட்ட போதுமான இடவசதி உள்ளது. வவுனியா நகரில் இருந்து 5km தூரம் கூமாங்குளம். விலை 90 லட்சம்.
தொடர்புகளுக்கு: ***Abinaa - 00.44.794.358.2572***

## விற்பனையாளர் தேவை

**ரொறன்ரோ பெரும்பாகப் பகுதியில் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் பணி புரிவதற்கு** IPTV BOX விற்பனையாளர் தேவை.
தொடர்புகளுக்கு: **647.968.1087**

## JERICO- SEWERS NEEDED

தையல் அனுபவமுள்ளவர் (experienced) தேவை.
நேரடியாக Factory (JERICO) க்கு வந்து விண்ணப்பிக்கலாம்.
Full-Time. Salary plus Benefits.
Please come to our factory at:
**120 Commander Blvd.**
**Scarborough, Ontario, M1S 3H7**

## கடை விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட ஐந்து மாடிக் கட்டிடத்தில் கீழ் மாடியில் 400-450 சதுர அடி கடை ஒன்று (லிங்கம் கூல்பாரிற்கு முன்பாக) விற்பனைக்கு உண்டு.**
**தொடர்புகளுக்கு** ***289.980.5597*** ***( Toronto Phone Number)***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## DISCOUNT STORE SALE

• @ **Kennedy & Eglinton**
• Well established business with great potential
• Risk-free investment
• Training provided
CALL FOR MORE INFO.:
**416.697.9822**

## வாகன போக்குவரத்து

Western பல்கலைக்கழகம், விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி சுற்றாடல், மற்றும் குறுகிய தூரம்.
தொடர்புகளுக்கு: **416.880.5952**

## BEEDA MIX

**QUALITY BEEDA MIX FOR YOUR SPECIAL OCCASIONS**
**416.575.8073**
**905.948.1706**

## தையல் வகுப்புக்கள் / Orders

**MARKHAM & LAWRENCE**
Saree Blouse, Skirt & Blouse, Ladies Items மற்றும் Saree Blouse Block எடுத்து தைப்பதற்கும் கற்றுக் கொடுப்பதுடன், மணப்பெண்ணுக்கும் blouse தைத்துக் கொடுக்கப்படும்.
**416.438.2552 /647.853.5524**

## காணி விற்பனைக்கு

திருகோணமலையில் வீட்டோடு சேர்ந்த காணி 20 பரப்பு விற்பதற்கு உள்ளது.
தொடர்புகளுக்கு:
**077.706.5994 / 647.384.9751**

## METAL THINGS WANTED

பழைய இரும்பு பொருட்கள், Door, Computer, fridge, stove, தொலைக்காட்சி பெட்டி, மற்றும் வேறு பல பொருட்கள் நீங்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.
**Junk Removal**
தொடர்புகளுக்கு: பிறேம் - **647.835.5244**

## புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிகத் தரமான புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு.
● பெரியது $5 *வரி கட்டப்பட்டது*
தொடர்புகளுக்கு: **647.629.9095**

## QUALITY USED CARS

தரமான பாவித்த ஜப்பானிய வாகனங்கள் நியாயமான விலையில் கிடைக்கும்.
PSP
**PSP Motors - 416.871.0450**

## HELP WANTED

Stouffville பகுதியில் உள்ள Pizza கடைக்கு அனுபவமுள்ள முழுநேர & பகுதிநேர delivery driver தேவை. Markham Stouffville பகுதியில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **416.953.4933**

## HOME DAY CARE

**HARMONY AND TAUNTON (OSHAWA)**
16 மாதம் தொடக்கம் 10 வயது வரையான பிள்ளைகளை Home daycare க்கு விட விரும்பும் பெற்றோர்கள் தொடர்புக்கொள்ள:
**647.526.5839**

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட 29 வயதுடைய நற்குணமுள்ள மணமகனுக்கு கனடாவில் தகுந்த மணமகளைத் தேடுகின்றோம்.
தொடர்புகளுக்கு: **416.648.7078**

## இந்திரா திருமணசேவை

பல துறைகளில் தகுதி பெற்ற மணமக்கள் எம்மிடம் உள்ளனர். தகுந்த வரன் களைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: **416.837.4845**

## மனமகிழ் திருமணசேவை

28 வயதுடைய பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகனைக் கனடாவில் தேடுகிறோம். 33 வயதுடைய மணமகனுக்கு அழகான மணமகளை இலங்கையில் தேடுகிறோம்.மேலும் பட்டதாரி மணமக்கள் எம்மிடம் உள்ளனர். இலங்கையிலும் மணமக்கள் உள்ளனர்.
**416.666.1855 / 647.504.3336**




## JOB JOB JOB

**PHARMACY & FINCH**
**MIDDLEFIELD & FINCH**
உணவகம் ஒன்றிற்கு Cashier , kitchen helper வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: **416.318.9866**

## AZ DRIVERS WANTED

Need immediately experience drivers (At least one year) for long & short run within Canada & USA. Benefit available.
தொடர்புகளுக்கு: **416.835.6701**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**MARKHAM & STEELES**
லிங்கம் cream house இல் coustomer service க்கு முழு நேர/பகுதி நேர வேலைக்கு ஆட்கள் தேவை. Sri-lankan & South Indian cook, அப்பம் செய்யத்தெரிந்தவர்கள் தேவை.
தொடர்புகளுக்கு: **416.879.4190**

## வேலைக்கு ஆட்கள் தேவை

***Samosa Hut Restaurant in Ajax***
Cooking செய்வதற்கு மாலை நேரத்திற்கு ஆட்கள் தேவை. ஆண்கள் கூடுதலாக விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **416.731.9138**

## JOB JOB JOB

CLEANERS/Sub-Contractors - *WITH CAR ONLY* - Please Apply All Jobs in Vaughan/Woodbridge/ Concord Areas
EXPERIENCED CLEANERS - Janitorial / Commercial / Residential / Construction / Post Construction Cleaning
***Please call: 905-738-4468 X 3***
and leave a message

## CLEANERS WANTED

Cleaning in Pickering, Ajax & Whitby. Family or Men preferred.
After 8 p.m. to morning.
தொடர்புகளுக்கு: **416.315.9348**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**CROWN PARADISE**
அனுபவமுள்ள Kitchen Helper தேவை. பெண்கள் விரும்பத்தக்கது. Cashier தேவை.
647.309.4755 / 647.547.3234

## வேலைக்கு ஆட்கள் தேவை

Part time & Full time வேலைக்கு ஆட்கள் தேவை. Day time & Night time . Starting $12 per hour. ஆண்களுக்கு மட்டும். Must have G Licence. Down Town Area தெரிந்திருக்கவேண்டும்.
தொடர்புகளுக்கு:**416.453.0000**
*(call only 9a.m - 5p.m)*

## வேலை வாய்ப்புக்கள்

**கனடாவுக்கு வெளியில் உள்ளவர்களுக்கு மட்டும்.**
நீங்கள் கல்வி, தொழிலில் தகுதியும், அனுபவமும் உடையவர்களா? அப்படியானால் நீங்களும் கனடா வரலாம். உங்களின் தகுதிக்கு அமையக் கூடிய வேலை வாய்ப்பை சரியான நிறுவனங்களில் இருந்து சகல சட்ட விதி முறைகளுக்கும் அமைய ஒப்பந்தங்களுடன் ஒழுங்கு செய்து தரப்படும்.
மேலதிக விபரங்களுக்கு: **647.478.9510**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 28, 29, 31, 32, 33

## COOK WANTED

East of Oshawa, Town of Cobourg Restaurant looking Full or Part time Lunch, Breakfast Cook. Long hours, Good Pay and room available to stay.
**BOB: 905.269.4033**

## MISSISSAUGA / BRAMPTON- PRESSURE WASH CLEANING JOB

Full time & Part time Cleaners need Mississauga/Brampton need Gents for Pressure Wash Cleaning.
***Call: Gopi-647-205-2545***

## SPACE FOR AVAILABLE

***MIDLAND & LAWRENCE***
***RENT OR LEASE***

Dance/ music/ cultural classes நடத்துவதற்கு spacious place. Inclusive for everything

தொடர்புகளுக்கு:***647.720.7745***

## LADY HELPER WANTED

***14TH AVE. & 9TH LINE (MARKHAM)***

வயது முதிர்ந்த பெண் ஒருவருக்கு பெண் உதவியாளர் உடனடியாகத் தேவை. சுலபமான வேலைகளுக்கு அவருக்கு உதவியாக இருந்தால் போதுமானது. தங்கி இருக்கும் இடவசதியும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: ***647.449.2671***

## HONDA CIVIC CAR SALE

Honda Civic 2008 Black Car for Sale.
154600 KM, Four doors, Automatic, Power Windows, Doors Locks and Power Heated Seats.
Sunroof, Winter Tires included. $6700 or Best Offer.

***CALL: RAJ - 647.588.3987***

## JOB IMMEDIATELY

***DRIVERS WANTED***

G Drivers licence உள்ள ஆண்கள், பெண்கள் மற்றும் மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பு. உங்களுக்கு விரும்பிய நேரத்தில் மணித்தியாலத்திற்கு $22 தொடக்கம் $30 வரை சம்பளமாகப் பெற்றுக் கொள்ள இன்றே அழையுங்கள்.

தொடர்புகளுக்கு: ***647.761.6246***

## குழந்தைப் பராமரிப்பாளர் தேவை

***KENNEDY & 16TH AVENUE***

குழந்தைகளைப் பராமரிக்கவும் வீட்டு வேலைகள் செய்யவும் ஒரு பெண்மணி தேவை.

தொடர்புகளுக்கு:**647.938.3635**

## காணி விற்பனைக்கு

20 ஏக்கர் Farm காணி விற்பனைக்கு உண்டு. அதாவது 3,200 பேச்சஸ். அறுதி உறுதிக்காணி. காணி முழுமையாக டோசர் போட்டு லெவல் படுத்தி இருக்கு. 30' அகலமான 45' ஆழமான கிணறு உள்ளது. 20x100 அடி பரப்பளவிலான 5 கட்டட அத்திவாரம் போட்டு தூண் எழுப்பி உள்ளது. கூரை போடவில்லை. பன்முகப்படுத்தப்பட்ட பண்ணை அமைப்பதற்குரிய காணி. விலை 140,00000.00

***Contact: Abinaa - 00.44.794.358.2572***

## OFFICE CLEANING CONTRACT

- Available through GTA Area
- Experience Required
- Some Deposit Required

Also looking for experienced night cleaners

- GTA வளாகத்தில் Office Cleaning Contract வழங்கப்படும்.
- முன் அனுபவம் அவசியம்
- முற்காப்பு நிதி அறவிடப்படும்

Contact
Phone: 416-727-5410
Email: jobs@focuscleaning.ca

## THIRUMALLAI EXPRESS

**Moving and Delivers நிறுவனத்திற்கு ஆண்கள் வேலைக்குத் தேவை.** AZ Drivers Wanted.
Minimum 6 Month Experience. US & Canada.
Free Estimates. சகலவிதமான Moving தேவைகளுக்கும்

Anand : ***416.834.5219*** Selva : ***416.271.5483***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 28, 29, 30, 32, 33

தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com



## COMPUTER REPAIR

Laptop,Computer Repair, Virus Removal, Data Recovery, Upgrading, Networking, Printer Problems & Any Other Troubleshooting அனைத்து விதமான Computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

Please Call Varun: **416.894.6244**

## CASHIER WANTED

***EGLINTON & BERMONDSEY***

Part-time cashier wanted. Night & Afternoon shift. ESSO gas station experience. Apply in person.
1725 Eglinton Ave., E. NorthYork

தொடர்புகளுக்கு: **416.292.6592**

## Professional Home Painting

✓Home ✓Apartment ✓Office

All Your Interior , Exterior Painting Needs , Molding works and Basement Renovation

Professional - Reliable - Affordable

Contact: Maran 647-993-6103 amkmaran19@gmail.com

## A+ DRIVING SCHOOL

For all your driving educational needs

***Thava Nagaratnam***

*(Govt. Licensed In - Car Instructor)*

**416.473.6155**

***www.aplusdriving.ca***



## ஸ்ரீ வெங்கடேஸ்வரர் திருமண மாலை

முற்கட்டணம் இல்லை

எம்மிடம் கனடா, லண்டன், பிரான்ஸ், ஸ்வீஸ், இலங்கை, இந்தியா போன்ற நாட்டிலுள்ள பட்டதாரி டாக்டர்கள், சாதாரண படிப்பாளர்கள் போன்ற சகல வகுப்பி-னருடைய ஜாதகங்களும் உள்ளது. ஜாதகம், படம், பயோடாட்டா இவைகளை கடித மூலம் அனுப்பவும் அல்லது நேரில் வரவும். தொடர்புகளிற்கு: ராம் அலெக்சாண்டர்

*2 Daliyn Crescent* *647.638.5304*
*Scarborough M1K 4V9* *647.389.4130*

இந்திய தொலைபேசிஎண்: *01191.876.051.7774*

## வேலைக்கு ஆட்கள் தேவை

**MARKHAM & PROGRESS AVE.** சந்திப்புக்கு அருகாமையில் **PRK DOORS & WINDOWS** தொழிற்சாலைக்கு மரவேலை செய்வதற்கு அனுபவமுள்ள நிரந்தர வேலையாட்கள் தேவை. வயதுக் கட்டுப்பாடு இல்லை.

தொடர்புகளுக்கு: **416.875.4119**

## FOR RENT - CONDO/HOUSE / BASEMENT
## WATSON PROPERTY MANAGEMENT - 416-284-9999

***Scarborough* –McCowan / 401– Condo Apt**
(1Brm+1Bath) Bright And Spacious, Laminate Flooring Through Out. Open Concept Kitchen.. In The Heart Of Scarborough Town Center, Step To Ttc, Subway, And Close to 401 And Shopping Mall. **[Asking $1600/m]**

***Scarborough* – McCowan /Ellesmere – Condo Apt**
(1Brm, 1Bath) Bright & spacious, Close To 401 & All Amenities, Scarborough Town Centre, Ymca, Ttc, Loblaws.24-Hr Concierge W/ Sec System **[Asking $1600/m]**

***Scarborough* - Eglinton / Markham – Ground/ 2nd/ Bsmt**
(3 Brm, 2Bath) Newly renovated, Bright, Steps To G O Station, Wal-Mart And All Amenities. Beautiful Wood Deck At Back. Separate Entrance To Finished Basement. Private Driveway Can Park 3 Cars. **[Asking $1700/m]**

***Scarborough* – McCowan / Finch – Condo Apt**
(2Brm, 2Bath) eat-In Kitchen. Indoor Pool & Great Facilities. Across From Woodside Mall. Steps To Ttc, Library, Schools, Restaurants, Grocery, Mcdonalds & Etc. 24 Hours Security & Gate House **[Asking $1720/m]**

***Scarborough* – Bellamy /Ellesmere – Main & Upper**
(3Brm, 1Bath) Close to 401, Scarborough Town Centre, Centennial College, Uot, Schools And Rec Centre, Supermarket & Stores, 5 Mins Walk To Public Transit. **[Asking $1850/m]**

***Scarborough – Ellesmere / Kennedy- Main**
(3Br + 1Bath) Newly renovated, Close to TTC, shopping, 401 **[Asking $1900/m]**

** Scarborough – McCowan / Lawrence – Main**
Steps To Ttc, Schools, Hospital, Shopping & Thomson Park. Close To 401. Sun Room/Covered Porch, And 1 Car Parking. Shared Back Yard. **[Asking $1850}**

***Scarborough* – Finch / Middlefield – Full House**
(3Br,3Bath) Newly Renovated Unit ,Brand-New Kitchen. Ceramic And Hardwood Floor Thru Out. New Foyer & Powder Rm. Professional Cleaned. Move-In Ready Condition, Back Onto Park. Close to all amenities **[Asking $1850/m]**

***Scarborough* – Sheppard Ave E / Brimley – Full House**
(3+1Brm, 2Bath) Great Primary/High Schools, Shopping Plazas, Highway 401, Ttc, Scar Town Center, Large Back Yard & Finished Basement. Hardwood Floor throughout **[Asking $1925/m]**

***Scarborough* – St. Claire / Kennedy – Full House**
(3+2Brm, 2Bath) Short Term Lease (Whole House/Separately, , Sep. Entrance To One Bdrm Apartment, Main Fl Hardwood Floors . Lots Of Parking. **[Asking $2200/m]**

***Brampton – Mavis /Steeles* – Basement**
(5Brm + 4Bath) 2 Car Parking On Driveway. All Levels Of Schooling, Plaza And Public Transportation Within Walking Distance. Close To Shoppers World, Parks, Banks, Hwy 401 & 407.. **[Asking $1100/m]**

***Brampton* – Van Kirk / Wanless – Upper floor**
(4Brm, 3Bath) Hwd Floors, Open Concept.Newley Painted. Easy Access To 410, 407 And 401, Close To School,Park,Bus,Major Shopping Mall Nearby. **[Asking $2000m]**

watsonpm1989@gmail.com

MANAGING RESIDENTIAL PROPERTIES

Karu: 416-616-7278 Vithy: 416-509-9557 Watson: 416-417-8432

## CAR DETAILING & USED TIRES

**MIDLAND AND LAWRENCE**
Starting from $90
More than 15 years experience
Used Tires Starting from $20 (any size)
தொடர்புகளுக்கு: **416.419.7548**

## LAW OFFICE RECEPTIONIST & ADMIN

Law office looking for Receptionist & Admin person to Scarborough or Mississauga location. Able to speak Tamil, English & knowledge of English Typing.
**Contact: 647.688.2663**

## PTR DOORS & WINDOWS

**Spotlights Installation**
**- Over 10 years experience -**
**Ravi : 416.825.9482   Kanna : 647.297.7815**
**email : ptrrenovation@gmail.com**

## ALL COUNTRIES TOUR SERVICES

**AC TOURS -** Airport, Buffalo, Niagara falls, CN Tower, Central Island, Wonderland, African safari, Midland, 1000 Island, Wasaga, Montreal மற்றும் அனைத்து இடங்களுக்கும் ஒருவர் தொடக்கம் எத்தனை பேர் என்றாலும் அழைத்துச் செல்லப்படும்.
போட்டோ இலவசம்.
**Contact: Ratha Francis - 416.566.7920**

## முதியோர் பராமரிப்பு இல்லம்

**VCARE RETIREMENT HOME INC.**
***Personal & Social Care with access to Health Care***
அன்பான அரவணைப்புடன் கூடிய முதியோர் பராமரிப்பினை (Senior Care) 24 மணிநேரம் நாங்கள் வழங்குகின்றோம். Scarborough நகரின் மத்தியில் மிகவும் அமைதியான சூழலில் ஈழத்தமிழர் வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கும் வண்ணம் எங்கள் முதியோர் இல்லம் அமைந்துள்ளது.
தொடர்புகளுக்கு: **SUBA: 289-200-4677**
**Email: vcarerh@hotmail.com**   **Website: www.vcarerh.com**

## வேலை வாய்ப்பு

ரொரொன்ரோவில் இருந்து நடத்திவரும் பத்திரிகை மற்றும் இணையத்தளத்தில் பகுதிநேரமாகத் தொழில் புரிவதற்கு தகுந்தவர் தேவைப்படுகின்றது. தமிழ், ஆங்கிலம் தட்டச்சு, Graphic Design தெரிந்தவர், தமிழ், ஆங்கிலம் சரளமாகப் பேசக்கூடியவர் தங்களது சுயவிபரப் படிவத்தை (Resume)ஐ கீழுள்ள மின்னஞ்சல் (email) இற்கு அனுப்பவும். தெரிவு செய்பவர்கள் மட்டுமே அழைக்கப்படுவர்.
*email: helpwanted.application@hotmail.com*


# குரு



**நா. க. சிவராமலிங்கம்**

மாதா, பிதா, குரு, தெய்வம் என வரிசைப் படுத்தும்போது தெய்வத்திற்கு மிக அருகில் இருப்பவர் குரு.

குழந்தை அறியும் முதல் முகம் தாயின் முகம். தாயானவள் தந்தையை அறிமுகம் செய்கிறார். தன் குழந்தை ஞானத்தையும், கல்வியையும் அறியும் பொருட்டு குருவிடம் அழைத்துச் செல்கிறார் தந்தை. குரு என்ற ஆசிரியன் அறியாமை இருளைப்போக்கி, ஞானதீபத்தை ஏற்றி, கல்வியை கற்றுத் தந்து, தெய்வத்தைக் காட்டுகிறார். குரு இல்லாத வித்தை பாழ் எனப்படுகின்றது. குருவினால் தான் வித்தையைக் கற்கின்றோம்.

தாரமும் குருவும் தலையின் எழுத்து எனவும் சொல்லப்படுகின்றது. நல்ல குரு கிடைப்பது எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியம் நல்ல சீடன் கிடைப்பதுமாகும். எந்தவகைக் கல்வியாக இருந்தாலும், ஆரம்பக் கல்வி, உயர்கல்வி, இவைதவிர, இசை நடனம், ஓவியம், ஆன்மீகம், சிற்பவேலைகள், போர் முறைகள் என்பவற்றை கற்பதற்கும் நல்ல குரு மிக அவசியம்.

நன்னூல் என்னும் இலக்கண நூல் பவனந்தி முனிவரால் 12ஆம் நூற்றாண்டிலே இயற்றப்பட்டது. இந்நூல் நல்லாசிரியனுக்கு உரியது இலக்கணம், ஆசிரியர் அல்லா தார்க்குரிய இலக்கணம், நல்ல மாணவர்க்குரிய இலக்கணம், மாணவரல்லாதவர்க்குரிய இலக்கணம் ஆகியவற்றை விரிந்துரைகின்றது.

ஒவ்வொரு துறையிலும் சிலர் சிறந்து விளங்குவது இயல்பு. ஆன்மீகத்தில் இராமகிருஷ்ணர், விவேகானந்தர் அரசியலில் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, தீரர் சத்திய மூர்த்தி, தமிழ் இலக்கிய உலகில் மகா வித்து வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, உ வே சாமிநாதஐயர், இசை உலகில் மகாராஜபுரம் விஸ்வநாத அய்யர், மகாராஜபுரம் சந்தானம், நாடக உலகில் சங்கரதாஸ் சுவாமிகள், டிகே சண்முகம், நடிப்பு உலகில் சிவாஜிகணேசன், கமலகாசன் என சிலரை குறிப்பிடலாம். நாட்டுப்புறக்கலை வடிவங்களான தெருக்கூத்து, பொம்மலாட்டம், வில்லுப்பாட்டு, தேவராட்டம் ஒயிலாட்டம், கரகாட்டம் போன்ற வற்றை குருவிடமிருந்து கற்றுக் கொண்ட செய்திகளுமுண்டு.

ஆங்கிலேயர் வருகைக்கு முன்பாக நம் நாட்டில் கல்விமுறை குருகுலங்களா திண்ணைப் பள்ளிக் கூடங்களாக அமைந்திருந்தன. குரு குலமுறை என்பது ஆசிரியருடைய வீட்டிற்குச் சென்று அவரோடு மாணவர்கள் (சீடர்கள்) எப்போதும் தங்கி இருந்து கல்வி கேள்விகள் தவிர அவரது ஒழுக்க சீலங்களையும் அறிந்து பயன்பெறுதலாகும். கல்வி பயிலும் போது தாகமுடையவன் தண்ணீருக்கு அலைவது போல் மாணவன் அலைய வேண்டும்.

கேடு இல் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு




மாடு அல்ல மற்றயவை என்றார் வள்ளுவர். கற்க, கசடறக்கற்க, கற்பவை கற்க, கற்ற பின் கற்க, கற்க நிற்க, கற்க அதற்குத் தக. படி, பிழையில்லாமல் படி, படிக்க வேண்டிய வற்றைப் படி, படித்தபின்பும் படி, படித்தபடி நிற்பதற்காகப் படி, என்பதே, வள்ளுவர் ஆணை. எல்லாத் துன்பங்களையும் போக்கும் நிவாரணி கல்வி. மம்மர் அறுக்கும் மருந்தாவதும் கல்வி. வழக்கமாக சீடர்களுக்கு பலவிதமான சோதனைகளை வைத்து அதன் பின்னரே அவர்களை குருமார்கள் சீடர்களாக ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் விவேகானந்தரோ தன்னுடைய குருநாதராகிய இராம கிருஷ்ணரைப் பலவித கேள்விகள் கேட்டும் பல சோதனைகள் செய்தும் அதன் பின்னரே அவர் உண்மைத் துறவி என உறுதிப்படுத்தி அறிந்து கொண்டு குருவாக ஏற்றுக் கொண்டாராம்.

'தமிழ் தாத்தா' என்றழைக்கப்பட்ட மகா மகோபாத்தியாய பட்டம் பெற்ற உ.வே சாமிநாதய்யர் அவர்கள் தம்முடைய ஆசிரியராகிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களைப் பற்றிக்குறிப்பிடும் போது தன் உயர்வுக்கு உணவும், உடையும், கல்வி யும் தந்து பேருதவி புரிந்தவர் அவரே என குறிப்பிடுகின்றார்.

பக்தி நெறியில் சிறந்து விளங்கிய அருளாளர்களான சைவசமய குரவர்கள் நால்வரும், அருணகிரியார் போன்றோரும் முறையே சிவ பெருமானையும், முருகக் கடவுளையும், குருவாகவும் தங்களைச் சீடர்களாகவும் அடியார்களாகவும் எண்ணி மகிழ்ந்தனர். அருணகிரியார் தமது நூலான 'கந்தர் அநுபூதியில்' முருகனிடத்தில் வைக்கும் வேண்டுகோள் யாதெனில் "முருகப்பெருமானே நீ என்னை ஆட் கொள்ள வரும்போது, தாயாக தந்தையாக சகோதரனாக, உறவினராக வருவதைக் காட்டிலும் குருவாக வந்து என்னை ஏற்றுக்கொள்" என்பதேயாகும்.

உருவாய், அருவாய், உளதாய், இலதாய்
மருவாய், மலராய், மணியாய், ஒளியாய்



கருவாய், உயிராய், கதியாய், விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!

குரு, சீடன் ஆசிரியன், மாணவன் எனும் பாரம்பரியம் மகன் தந்தை உறவுபோல நம் நாட்டில் மிகப்பழமையானதும் இனிமையானதுமாகும்.

# ரஷ்யாவின் மர்ம யோகி ரஸ்புடின்..!!



சுந்தரம் இந்திரராஜா


**Russia's mysterious yogi Rasputin...!!!**

கடந்த இதழ் தொடர்ச்சி...........

அன்றுமுதல் ரஸ்புடின் (சார் Tsar) அரசரின் அரசவையின் வழிகாட்டியாகவும், மதகுருவாகவும், ஆலோசகராகவும் மாறினார். அன்றிலிருந்து ரஸ்புடினை ஒரு வார்த்தை கேட்டு அலுவல்களை ஆரம்பித்தார் அரசரான நிக்கோலஸ். இது, அங்கு முன்னர் அரசரை ஆட்டு வித்துக்கொண்டிருந்த, திருச்சபையைச் சேர்ந்த மதகுருமார்களிடம் அனலைக் கிளப்பியது. எங்கிருந்தோ வந்த சாமியார், அரசரை ஆட்டுவிப்பதா? (சார் Tsar) அரசரின் ஆட்சியில், ஒரு சாமான்யனின் அதிகாரம் வேர்விடுவதா? எனப் புழுங்கிய மந்திரிகளாலும் ரஸ்புடினின் இப்புகழை சகிக்க இயலவில்லை. எத்தனையோ எதிர்ப்புகளையும், வதந்திகளையும் ரஸ்புடினுக்கு எதிராகக் கிளப்பியும் கூட அரசரிடத்தில் ரஸ்புடினின் செல்வாக்கு சரியவில்லை. ரஸ்புடினும் இதுகுறித்து கவலைப்படவும் இல்லை, அலட்டிக்கொள்ளவும் இல்லை. “ஒருவனுக்கு நாணயமற்றவர்களிடமிருந்து எதிர்ப்புகள் கிளம்புமானால் அவன் வளர்கிறான் என்று அர்த்தம்” என்பதை அறிந்திருந்தார் ரஸ்புடின்.

ரஸ்புடின், அரச தம்பதியினர் இரண்டாம் நிக்கோலஸிற்கும் (Tsar Nicholas - II), அரசி அலெக்சாண்ட்ராவிற்கும் முன் ஒரு பக்திமான் மற்றும் தெய்வத்தன்மையுடைய புனித மனிதன் ரஸ்புடின். ரஷ்யா மற்றும் முடியாட்சி அழித்துக் கொண்டிருப்பது ரஸ்புடினின் ஆலோசனைகளால் தான் என அரச குடும்பத்திலுள்ள மற்றவர்கள் நம்பினார்கள். ரஸ்புடினின் அருவருக்கத்தக்க பெண் இச்சைக்காரன். ரஸ்புடினுக்கு அரசியல் சலுகைகள் கிடைப்பதற்கு காரணம் உயர் அரச சமூகத்திலுள்ள பெண்களுடன் உடல் உறவு கொண்டதற்கான பிரதி ஈடாக என்றும் நம்பப்பட்டது. அதேபோல் ரஷ்யாவில் பலர் ரஸ்புடின் மற்றும் அரசி அலெக்சாண்ட்ரா (ஜெர்மனியைச் சேர்ந்தவர்) காதலர்களாயிருந்து முதலாம் உலகப் போரின் போது ரஷ்யாவுடன் எதிரிகளான ஜெர்மானியர்களுடன் ஒரு தனி சமாதானம் செய்யப் போகின்றார்கள் என்றும் நம்பப்பட்டது.

அனைவருக்கும் பெரும் அதிருப்தி அடையும் அளவிற்கு மேலும் வதந்திகள் பரவின. அரச தம்பதியினர் இருவரும் செவிசாய்க்கவில்லை. மகன் அலெக்ஸியின் நோய் முற்றாக மாற்றமுடியாதது என்று அறிந்திருந்த அரச தம்பதியினர், ரஸ்புடினின் சேவை அவர்களுக்கு தேவைப்பட்டதே முக்கிய காரணம். முடியாட்சி முற்றாக அழிந்து விட முன் யார் ரஸ்புடினைக் கொல்லுவது என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தனர் ஒரு கூட்டத்தினர். ரஸ்புடினிடம் பெண்கள் வலியச் சென்று பேசுவதும் பழகுவதும், அப்பெண்களின் கணவர்கள், காதலர்கள் வெறுப்புணர்ச்சியை வளர்த்தது. அந்நாட்டு ராணியாரும், அரச பரம்பரையைச் சேர்ந்த பெண்களும் இதற்கு விதிவிலக்கில்லாமல் போனது, அரச வம்சத்தைச் சேர்ந்த ஆண்களிடமும், பிரபுக்களிடமும், திருச்சபையைச் சேர்ந்தவர்களிடமும் பகையுணர்ச்சியைப் பெருக்கியது. முடிவில், ரஸ்புடினின் கதையை முடித்தால்தான், இம்மாதிரியான விஷயங்களுக்கும், வதந்திகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கமுடியும் என நாலைந்துபேர் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று முடிவு செய்தது. இவ்விஷயத்தில் பெரிதும் ஆர்வம் காட்டியவர், இளவரசர் பெலிக்ஸ் யூசுபோவ் (Felix Yusupov) காரணம், இவரும் பாதிக்கப்பட்டிருந்தார்.



ஐரிஷ்காரனான செய்ரோ (Cheiro) இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மேற்கத்தைய அரசகுடும்பங்களில் மிகவும் பிரபலமானவர், துல்லியமான கணிப்பு, கைரேகை சோதிடம், சோதிடம், எண்சோதிடம் மற்றும் புலன்கள் காணாதவற்றைக் காணும் அதிசய திறன் உடையவர். இவ்வாறான நிலையில்தான் (சார் Tsar) அரசரின் அரசவைக்கு வந்தார் மற்றோர் தீர்க்கதரிசி செய்ரோ. நமக்குப் போட்டியாக இன்னொரு தீர்க்கதரிசியா? என்கிற ஆணவத்தோடும் கோபத்தோடும் அவையில் நுழைந்தார், ரஸ்புடின். அரசவையிலிருந்த ஒவ்வொருவரின் கைகளையும் பார்த்து, அவர்களின் எதிர்காலத்தைக் கூறி, பின்னர் அரசர் நிக்கோலஸின் கைரேகையையும் பார்த்து ஜோதிடம் கூறிக் கொண்டிருந்தார் செய்ரோ. அமைதியாக ரஸ்புடினைப் பார்த்து, “உங்கள் கைகளைப் பார்க்கலாமா?” என்றார் செய்ரோ. உள் தயங்கினாலும், வெளியில் அதனைக் காட்டிக்கொள்ளதவராய் சமாளித்தார். சிலநேர விதண்டாவாதங்களுக்குப் பின், முறைத்தவாறு கைகளை நீட்டினார் ரஸ்புடின்.

இந்த அரண்மனை வளாகத்திலேயே உங்களின் மரணம் மிகக் கொடூரமாக நிகழப்போவது எனக்குத் தெரிகிறது. விஷமும், தோட்டாக்களும், கத்தியும் உங்கள் உயிரைக் குடிக்கப் போகின்றன. குளிர்நிறைந்த நேவா நதியில் உங்கள் உடல் மிதக்கப் போகிறது. அதோடு உங்கள் மரணத்திற்கு அரசர் பரம்பரையினரே காரணமாக இருப்பர்” என்றவாறு மெல்ல நிமிர்ந்து ரஸ்புடினின் கண்களைப் பார்த்தார். ஒரு சில நொடிகள் முகத்தில் படர்ந்த பயம், அடுத்த கணம் வெறியாய் மாறியது. சிலவினாடிகள் அரசவையே அமைதியானது. அரசரும் அரசியும் பேயறைந்ததுபோல் அமர்ந்திருந்தனர். செய்ரோ பிடித்திருந்த தனது கையை வெடுக்கென உருவி, சட்டென எழுந்தார் ரஸ்புடின். எனது எதிர்காலத்தை நிர்ணயிக்கும் உரிமை எனக்கு மட்டும்தான் உண்டு. விதியை நிர்ணயிப்பவனின் விதியைப் பற்றி நீ சொல்லப் போகிறாயா?! இம்மக்களின் எதிர்காலம், ஏன், அரசரின் எதிர்காலம் கூட என் கைகளில்தான் உள்ளது” ”ரஸ்புடினின் மரணத்தைச் சொல்ல நீ யார்? ரஸ்புடினுக்கு மரணமே கிடையாது! நீ கூறிய விஷம், கத்தி, தோட்டா எதனாலும் என் உயிரைப் பறிக்க இயலாது. நானே மக்களின் ரட்சகன். (சார் Tsar) அரசபரம்பரையின் பாதுகாவலன். நான் சாருக்கும் (Tsar) மேலானவன்! எனக் கர்ஜித்தார் ரஸ்புடின்.

இளவரசன் பெலிக்ஸ் யூசுபோவ் அரசரின் ஒன்றுவிட்ட சகோதரர் முறையானவர், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பயின்றவன். பெலிக்ஸின் மனைவியும் அரசரின் மருமகளான ஐரினா (Irina) வின்மேல் அளவுகடந்த அன்பு கொண்டிருந்தார். ஆனால் ஐரினாவோ, போலிச்சாமியார் ரஸ்புடின் மேல் அளவுகடந்த அன்பு வைத்திருந்தாள். அரசவையின் அதிகாரத்தில் கைவைப்பதா எனப் பலநாள் புழுங்கிய மனத்தின் கடைசி அஸ்திரம்தான், ரஸ்புடினைக் கொல்லும் சதித்திட்டம். பெலிக்ஸ் யூசுபோவ் தனியொருவனாக இதைச் செய்ய விரும்பவில்லை. இதற்காக அரசரின் உறவுக்காரரான 25 வயதேயான டிமிட்ரி பவ்லோவிச் (Dmitri Pavlovich) என்பவரையும் பயத்தின் காரணமாக முதலில் தன்னுடன் கூட்டு சேர்த்தான். முதலில் சற்று தயங்கினாலும், பின்னாளில் தானும் அரியணை ஏறும் சந்தர்ப்பம் இருப்பதால் சம்மதித்தான். பின்னர், அங்கிருந்த செயல்படாத நாடாளுமன்றத் தின் தலைவனாக இருந்த விளாடிமிர் புரிஷ்கெவிச் (Vladimir Purishkevich) என்பவரை இக்கூட்டு சதியில் இணைய அழைத்தபோது, விருப்பத்தோடு வந்திணை ந்தார். இறுதியாக இக்கூட்டணியில் தன்னை இணைத்துக் கொண்டவர், டாக்டர் ஸ்டேனி ஸ்லஸ் லாசாவெர்ட் (Dr.S.Lazavert). நால் வரும் ரஸ்புடினை அழித்தே தீருவது என்பதில் முனைப்போடு மிகத்தீவிரமாகத் திட்டமிட்டார்கள். முடிவில், ரஸ்புடினுக்கு விஷம் வைத்து கொல்வது என ஏக மனதாக முடிவெடுக்கப்பட்டு, அப்பொறுப்பு டாக்டர் லாசாவெர்ட்டின் வசம் ஒப்படைக்கப்பட்டது.

மொய்கா (Moika) எனும் கால்வாய்க்கு அருகிலிருந்த மொய்கா அல்லது யூசுபோவ் என்றழைக்கப்படும் மாளிகையில் (The Moika Palace or Yusupov Palace) விருந்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவர்கள் எதிர்பார்த்தது போன்றே குறித்த நேரத்தில், தனக்கு விருப்பமான விலையுயர்ந்த உடை அணிந்தவராய் வந்து சேர்ந்தார் ரஸ்புடின். அவர் அவ்வாறு அங்கு வரும் முன், அவரது ஆதரவாளர்கள் சிலர், அங்கு அவரின் உயிருக்கு ஏதோ ஆபத்து இருப்பதாகவும், அதனாலேயே பெலிக்ஸ் யூசுபோவ் வலிய வந்து விருந்திற்கு அழைப்பதாகவும் எச்சரித்தனர். இருப்பினும், ஐரினாவின் மீதிருந்த மயக்கத்தினாலும், நம்பிக்கையினாலும் அவற்றை உதாசீனப்படுத்தினார் ரஸ்புடின். ரஸ்புடின் வரும்முன்னரே ஐரினாவை பெலிக்ஸ் யூசுபோவ் தனது எஸ்டேட்டிற்கு அனுப்பிவைத்திருந்தார். விருந்து நடக்கும் மாளிகையின் கீழேயுள்ள அறையில் ரஸ்புடினுக்கான விசேஷ உணவுகள் மேஜையின்மீது வைக்கப்பட்டிருந்தன. ரஸ்புடினுக்கு விருப்பமான கேக் வகைகள், உணவுப் பொருட்களனைத்திலும் பொட்டாசியம் சயனைட் எனும் கொடிய நஞ்சு கலக்கப்பட்டிருந்தது.ரஸ்புடினும் தனது தட்டிலுள்ளவற்றை உண்ண ஆரம் பித்தார். கேக்குகள்தான் காலியாகினவேயொழிய, ரஸ்புடின் அதே கம்பீரத்தோடு அமர்ந்திருந்தார். மணி பன்னிரெண்டை நெருங்கிக் கொண்டிருந்தது. சயனைடு அவரை ஒன்றுமே செய்யவில்லை. போதாக்குறைக்கு இடையிடையே, “ஐரினா எங்கே?” என்று வேறு கேட்டுக்கொண்டார்.

“இதைவிட்டால் இன்னொரு சந்தர்ப்பம் வாய்க்காது. ஐரினாவும் இப்போது இல்லை. பொய் சொல்லிதான் ரஸ்புடினை வரவழைத்தோம் என்று தெரிந்தால், அடுத்தமுறை உண்மையிலேயே ஐரினா இருந்தாலும்கூட ரஸ்புடின் இதுபோன்ற ஒரு சூழ்நிலைக்கு தானாக வந்து மாட்ட மாட்டார். என்ன செய்யலாம்?” என அனைத்து சதித்திட்ட உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் மேல்தளத்தில் விவாதித்துக் கொண்டிருந்தனர். “அப்படியானால் அவனை சுட்டுக் கொல்வதுதான் ஒரே வழி! கீழ் தளத்தில், பிரம்மாண்டமாக செய்யப்பட்டிருந்த அலங்காரங்களைப் பார்த்து வியந்தும், அங்குள்ள சுவற்றில் மாட்டப்பட்டிருந்த ஓவியங்களைப் பார்த்து ரசித்துக்கொண்டும் நின்றிருந்தார், ரஸ்புடின். “படங்கள் மிகவும் அழகாக இருக்கின்றன, இல்லையா?” என்று கேட்டவாரே ரஸ்புடினின் பின்னால் நின்றிருந்த பெலிக்ஸ் யூசுபோவ், அவரது முதுகில் துப்பாக்கியை வைத்து விசையை அழுத்தினான். துப்பாக்கிக் குண்டு உடலை பெரும் சத்தத்துடன் துளைக்க, முதுகிலிருந்து ரத்தம் பீறிட, சுருண்டு தரையில் விழுந்து துடித்தார் ரஸ்புடின். கீழே வந்த அனைவருக்கும் முகத்தில் அப்படியொரு சந்தோஷம். பின்னர் சலனமற்றுக்கிடந்த ரஸ்புடினின் உடலை, தரையில் விரிக்கப்பட்டிருந்த கம்பளம், அவரது ரத்தத்தால் கறை படாதவாறு இருக்க, நால்வரும் சேர்ந்து தூக்கி ஒரு ஓரமாக வைத்தனர். சட்டென கண்விழித்த ரஸ்புடின், “பெலிக்ஸ்... பெலிக்ஸ்” என பயங்கரமாய்க் கத்தியவாறு பெலிக்ஸ் யூசுபோவின் சட்டையைக்கிழித்து, பெலிக்ஸ் யூசுபோவை ஓங்கி ஒரு உதை விட தொலைவில் போய் விழுந்தான் பெலிக்ஸ் யூசுபோவ். பதட்டத்துடன் எழுந்து திரும்பிப் பார்த்தால், ரஸ்புடின் கண்ணில் கொலைவெறியோடு பெலிக்ஸ் யூசுபோவை நோக்கி ஓடி வந்துகொண்டிருந்தார். யூசுபோவ் ஓடத்துவங்க, விடா

தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# செஞ்சீனா...

25 ஆம் பக்கத்தொடர்ச்சி

பாலத் தலைநகரம் என அழைக்கப்படுகிறது. யங்சி, ஜியாலிங் ஆறுகளுக்கு மேலாகப் பல பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. ஜியாலிங் ஆற்றுக்கு மேலாக 1958 இல் முதலாவது பெரும்பாலம் அமைக்கப்பட்டது. யங்சி ஆற்றுக்குமேல் முதலில் 1977 இல் பாலம் அமைக்கப்பட்டது. 2014 வரைக்கும் யங்சி ஆற்றுக்குமேல் 20 பாலங்களும் ஜியாலிங் ஆற்றுக்கு மேல் 28 பாலங்களும் கட்டப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் வேறுபட்ட அமைப்பாலும் வடிவங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் சொங்சிங், பாலங்களின் அருங்காட்சிச்சாலை எனப்படுகிறது. இத்துடன் இங்கு உயர் தண்டவாள ட்ராம் வண்டி (Train way) இயங்குகின்றது. இது யங்சி ஆற்றின் வடகரையையும் தென் கரையையும் இணைக்கும் பாலம் போன்ற தண்டவாளத்தில் ஓடுகிறது. இதன் நீளம் 3810 அடி. இதில் நாளாந்தம் 10,000 பேர் பயணிக்கின்றனர்.



சொங்கிங் விமான நிலையத்தில் இறங்கியவுடன் அங்கிருந்த சொகுசு வண்டிகள் எம்மை ஒரு பெரிய ஹோட்டலுக்கு நண்பகல் உணவுக்காக அழைத்துச் சென்றன. இந்த சுற்றுலா முழுவதும் ஒவ்வொருவருக்கும் ஒரு மேசை எண் முதலே தரப்பட்டிருந்தது. இதனால் சில சைவ உணவுக்காரர் எல்லோரை



யும் 8ஆம் எண் மேசையில் ஒழுங்கு செய்திருந்தார்கள். பெய்ஜிங் நகரத்திலும் இதே முறை பின்பற்றப்பட்டது. நாங்கள் அங்கு போய் அங்குள்ள உணவுப்பட்டியலைப் பார்த்து விருப்பமான உணவைச் சொன்னால் அவர்கள் உடனே தயார் செய்து கொண்டு வருவார்கள். எங்களுடைய மேசையில் சிக்காகோவிலிருந்து வந்த இரு இந்திய தம்பதிகள் இருந்தனர். எல்லாமாக நாங்கள் ஆறு பேர் இம்மேசையில் சென்ற விடமெல்லாம் ஒன்றாகச் சேர்ந்திருந்து உண்டோம். சீன உணவகங்களில் ஒருவருக்கு ஒரு பியர் போத்தல் அல்லது ஒரு தண்ணீப் போத்தல் இலவசமாகத் தருவார்கள். அதற்கு மேல் தேவை என்றால் மூன்று அமெரிக்கன் டொலர் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பெரும்பாலும் எல்லோரும் ஒரு போத்தலுடன் சமாளித்தனர். ஓரிருவர் மேலதிகமாக ஒரு போத்தல் பியரை வாங்கினர். எமது மேசையில் இரு பெண்கள் மட்டுமே இருந்தனர். உணவு சிறப்பாகவும் போதியளவும் இருந்தது. உறைப்புக்கு அங்கு பலவகை சோசுகள் வைக்கப்பட்டிருந்தன. எனவே சாப்பாடு ஒரு பிரச்சினையாகவே இருக்கவில்லை. சுற்றுலாவை ஒழுங்கு செய்த சீனோறாமா நிறுவனத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. எல்லாம் நேரத்துக்கு ஒழுங்கு செய்யப்பட்டு, தரப்பட்ட பட்டியல்படி பின்பற்றப்பட்டது. நாம் சென்ற இடங்கள் யாவுக்கும் எங்களுடன் கூடவே ஒரு பெண்வழிகாட்டி வந்தார். நன்கு ஆங்கிலம் பேசுவார். சுற்றுலாத்துறையில் பட்டம் பெற்றிருந்தார். ஆங்கிலமும் ஸ்பானிய மொழியும் தெரிந்தவர். இத்துடன் சென்ற ஊர்கள் ஒவ்வொன்றிலும் உள்ளூர் வழிகாட்டியும் நாங்கள் ஏறிய வண்டியில் இருப்பார். அவர் அங்குள்ள முக்கிய சுற்றுலா இடங்களைப் பற்றிக் கூறிக் கொண்டே வந்தார். இவ்வாறு ஒவ்வொரு குழுவுக்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. நாம் உணவை முடித்துக் கொண்டு அங்கிருந்த விலங்குக் காட்சிச் சாலைக்குச் சென்றோம்.



சொங்கிங் மாநகரத்தில. கார், மோட்டார் சைக்கிள், இரசாயனங்கள், புடவைகள், பல்வேறு இயந்திரங்கள், இலத்திரனியல் பொருட்கள் யாவும் தயாரிக்கப்படுகின்றன. இங்கு பத்தாண்டுகளுக்குள் முன் வருடமொன்றுக்கு 1 மில்லியன் கார்களும் 8.6 மில்லியன் மோட்டார் சைக்கிள்களும் தயாரிக்கப்பட்டன. இப்போது இது 10 மடங்காகி இருக்கும். எனவே 8.4 மில்லியன் பேர் இங்குள்ள தொழிற்சாலைகளில் வேலை பார்க்கிறார்கள். இங்கு அமெரிக்க நகரங்களான: நியூயோர்க், வோஷிங்டன், சிக்காகோ போன்றவற்றிலுள்ள உயர்மாடிக் கட்டிடங்கள் போல பெரும் வியாபார நிலையங்களும் உள்ளன. வாகன நெரிசலும், சனநெருக்கடியும் இங்கும் காணப்படுகின்றன. சொங்கிங் விலங்குக் காட்சிச்சாலை, நகர் மத்தியிலிருந்து 8 கி.மீ தூரத்திலுள்ளது. இது யங்கியாசிங் என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இது 1953 இல் ஆரம்பிக்கப்பட்டு 1955 இல் பொதுமக்கள் பார்வைக்காகத் திறக்கப்பட்



டது. இதன் பரப்பளவு 110 ஏக்கர். இங்கு விலங்குகளாய் பாதுகாப்புடன் விலங்குகள் பற்றிய ஆய்வுகளும் செய்யப்படுகின்றன. இங்கு முக்கியமாக அருகிவரும் விலங்குகளான: இராட்ச பண்டாக்கள் (Pandas) செந்நிறப்பண்டாக்கள், தெற்குச் சீனப் புலி, வெண்புலி, ஆபிரிக்க யானை ஆகியன காணப்படுகின்றன.

நாம் சென்றபோது வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பலரைக் காணக்கூடியதாக இருந்தது. உள்நாட்டவரும் பெரும்பாலும் சிறுவர், சிறுமியர்களுடன் வந்திருந்தார்கள். பெரும்பாலும் அருகி வரும் விலங்குகள் இருந்த பகுதியிலேயே பெரும்பாலான மக்கள் குழுமியிருந்தனர். காட்சிச் சாலை முழுவதும் சுற்றிப்பார்ப்பது ஒரு நாளில் முடியாத காரியம். நாம் நண்பகல் உணவுக்குப்பின் சென்றதால் நடப்பதும் சிரமாயிருந்தது. காலநிலையும் மந்தாரமாய் இருந்ததால் களைப்புத் தெரியவில்லை. அங்கு பல அழகான பூ மரங்களும் காணப்பட்டன. எனக்கு இலங்கையிலுள்ள பேராதனைப் பூங்கா ஞாபகத்துக்கு வந்தது. ஏறக்குறைய 4 மணித்தியலாங்களின் பின் எமது பஸ் வண்டிகளுக்குச் சென்றோம். அவர்கள் அங்கிருந்து எம்மை கப்பல் பயணத்துக்காக கப்பல் நின்ற இடத்துக்கு அழைத்துச் சென்றனர்.

# ‘கடன்...

13 ஆம் பக்கத்தொடர்ச்சி

இயங்குவதாக இருந்தால் அது முதலில் மாகாண அரச சட்ட விதிகளின்படி பதிவு செய்யப்பட்டு (Collection and debt settlement services act) பின்வரும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையிலேயே கடன்காரர்களை துரத்தி ஒரு வர்த்தக நிறுவனத்தின் சார்பில் வசூலிக்க வேண்டும் என்பது அதிகார பூர்வமாக வரையறுக்கப்பட்டுள்ளது.

• தொலைபேசியில் அழைக்கு முன்பு எழுத்து ரீதியாக முதலில் எச்சரிக்கைக் கடிதம் பதிவுத் தபாலில் அனுப்பி ஆறு நாட்களின் பின்பே தொலைபேசியில் அழைக்கலாம். மின் அஞ்சலில் கடிதம் அனுப்பக்கூடாது.

• ஒரு தனி மனிதரின் அல்லது வர்த்தக நிறுவனம் ஒன்றின் கடனை வசூலிக்கும் போது அவர்களின் பெயர், எவ்வளவு தொகைக்கடன், அதில் எவ்வளவு தொகை அறவிட்டுத் தருமாறு கோரப்பட்டுள்ளது போன்ற விபர அறிக்கையினை கடன் வசூலிக்கும் முகவர் நிறுவனத்தின் தெளிவான பெயர் முகவரியோடு முதல் கடிதத்தில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

• கடன்வசூல் முகவர் நிறுவனம் ஒருமுறை தொலைபேசியில் அழைத்து கதைத்த பின்பு கடன்பட்டவரின் சம்மதமில்லாது ஒரு கிழமைக்குள் மூன்று தரத்திற்கு மேல் தொலைபேசியில் அழைத்து அவரை தொல்லைப்படுத்த முடியாது.

• இரவு ஒன்பது மணியிலிருந்து மறுநாள் காலை ஏழு மணிவரை தொலைபேசியில் அழைக்கக் கூடாது. ஞாயிற்று கிழமைகளில் பிற்பகல் ஒரு மணியிலிருந்து ஐந்துமணி வரை மட்டுமே அழைக்கலாம். விடுமுறை நாட்களில் எந்த சந்தர்ப்பத்திலும் தொலை-பேசியில் அழைக்கக் கூடாது.

• மிரட்டுதல், அபச்சாரமான வார்த்தைகளினால் கட்டாயப்படுத்தி சம்மதிக்க செய்தல், தேவையற்ற தொல்லைகள் கொடுத்து அழுத்தங்களை வழங்குதல் போன்ற எந்தவொரு வழிமுறைகளையும் கடன்களை வசூலிக்கும்போது கையாளக் கூடாது.

• இடைதரகராக நின்று பணம் வசூலித்துக் கொடுப்பதற்காக ஒருவரிடமிருந்து எதுவிதமான கட்டணமும் மேலதிகமாக அறவிடக் கூடாது.

• ஒருவரின் கடனை மனைவி, பிள்ளைகளிடம் கோரமுடியாது. (ஆனால் அவர்களுக்கும் அக்கடனோடு தொடர்புகள், உத்தரவாதங்கள் கோரலாம்)

**‘கடன் வசூல் முகவர் நிறுவனம்’ என குறிப்பிட்டு எவராவது அழைத்தால் பின்வரும் கேள்விகளை கேட்கும் உரிமை ஒருவருக்கு உண்டு என்பது இவை தொடர்பான மாகாண சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

• ஒன்ராரியோ மாகாண அரசில் உங்கள் முகவர் நிறுவனத்தின் பதிவு இலக்கம் என்ன?

• கடன் செலுத்த வேண்டியவரின் பெயர், தொகை குறிப்பிட்டு முதலில் கடிதம் அனுப்பினீர்களா?

• எத்தனை தடவை தொலைபேசியில் அழைக்கும் எண்ணம் உங்களுக்கு உண்டு.?

மேற்குறிப்பிட்டவை தவிர பின்வரும் கோரிக்கைகளையும் ஒருவர் முன் வைக்கலாம்.

• ஒரு சட்டத்தரணியை அல்லது சட்ட உதவியாளரை (Para Legal) ஒழுங்கு செய்திருந்தால் அவரோடு மட்டும் தொடர்பு கொள்ளுங்கள் என ஆணையிடலாம்.

• வசூலிக்க முயலும் கடன் தொகை என்பது சர்ச்சைக்குரியதாக இருந்தால் அதனை நீதிமன்றத்திற்கு கொண்டு வாருங்கள் என பதிவுத் தபாலில் அவர் கோரலாம்.

• கடன்பட்டவர் தாங்கள் இல்லையென்றால் அதனை தெளிவாகத் தெரிவிக்கலாம்.

சில சந்தர்ப்பங்களில் ஒருவரின் தொழில் செய்யும் நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு (Employer) சம்பளத்திலிருந்து அறவிட முயற்சிக்கலாம். அப்படியாயின் பின்வரும் நிபந்தனைகளுக்குள் இருக்க வேண்டும்.

• கடன்தொகைக்கு தொழில் வழங்கும் நிறுவனம் பொறுப்பு நின்று உத்தரவாதம் வழங்கியிருக்க வேண்டும்.

• அவரின் சம்பளத்திலிருந்து தொகை தொகையாக அறவிடுமாறு நீதிமன்ற உத்தரவு வழங்கியிருக்க வேண்டும்.

• ஒருவர் நேரடியாக சம்மதம் வழங்கியிருக்க வேண்டும். (ஆனால் கனேடிய மத்திய அரசின் வருமான வரி பிரிவினர், செலுத்தப் படாத வரியினை நேரடியாக அறிவித்துவிட்டு சம்பளத்திலிருந்து பகுதி பகுதியாக அறவிடுவார்கள்)

கடன்காரர்களை நீதிமன்றத்தின் மூலம் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கடன் கொடுத்தோருக்கும் அல்லது அவர்கள் சார்பில் இயங்கும் கடன் வசூலிக்கும் நிறுவனத்திற்கும் உண்டு. ஆனால் அது சட்டபூர்வமானதாக இரு வருடங்களில் வழக்கு தொடர்ந்திருக்க வேண்டும். (According to the Ontario colletion agencies act & debt collections act) கடித மூலம் கடன்காரருக்கு அறிவித்த பின்பே சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். வசூலிக்க முடியாத இறுதி நிலைமையில் கடன் பதிவுகளுக்கு அனுப்பும் போது முறையாக கடன்காரனுக்கு அறிவித்திருக்க வேண்டும்.

ஆனால் நிரபராதியான நிலைமையில் பாதிப்படைந்திருந்தால் தட்டிக் கேட்டு அணுகும் துணிச்சலும் வாசகர்களுக்கு இருக்கவும் வேண்டும்.


# "சிவா" ஆளுமை மிக்க பத்திரிகை ஆசிரியர்!

## வீரகேசரி மூர்த்தி

அமெரிக்காவில் தனது எண்பத்தொராவது வயதில் அண்மையில் அமரத்துவம் அடைந்த வீரகேசரியின் முன்னாள் பிரதம ஆசிரியர் திரு.க.சிவப்பிரகாசம் அவர்களுக்கு கனடாவில் வாழ்ந்து வரும் வீரகேசரி பத்திரிகையின் முன்னாள் ஊழியர்களினால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த நினைவஞ்சலிக் கூட்டம் ஸ்காபுறோ "சிவிக் சென்ரர்" மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய வீரகேசரி பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியரும் தற்போது கனடாவில் வாழ்ந்து வருபவருமான திரு.சிவநேசச்செல்வன் பின்வருமாறு கூறினார்: "வீரகேசரி" பத்திரிகை ஆரம்ப காலங்களில் தோட்டத் தொழிலாளர்களை மையமாகக் கொண்டு வெளி வந்தது. காலம் என்றென்றும் ஒரே மாதிரியாக நிலைத்திருப்பதில்லை. கீழது மேலும், மேலது கீழுமாக மாறும். திரு. சிவப்பிரகாசம் வீரகேசரியின் ஆசிரியப் பொறுப்பினை ஏற்றதும் செய்திகளில் இந்திய வாடை இல்லாது எழுதச் செய்து வீரகேசரிக்கு பிரபல்யத்தை ஏற்படுத்தினார். அவர் ஒரு ஆளுமை மிக்க பத்திரிகை ஆசிரியர். ஆழமாக, நிதானமாக சிந்தித்து செயலாற்றுபவர். சிவா வீரகேசரிக்கு உயிர் கொடுத்தவர் எனப் பலர் கூறி வருகின்றனர். அவரது பதவிக் காலத்தில் நான் "மாதொரு பாகன்"என்ற புனை பெயரில் வீரகேசரிக்கு பல கட்டுரைகளை எழுதினேன். திரு.சிவா அவற்றை வீரகேசரியின் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றிய திரு.பாலச்சந்திரனுடன் கலந்துரையாடிய பின்னரே அவற்றைப் பிரசுரித்து வந்தார்".

"அமரர் திரு. சிவப்பிரகாசத்தின் காலத்தில் திரு. கைலாசபதி, திரு. வித்தியானந்தன் ஆகியோரின் அனுசரணையுடன் நாம் தமிழ் பத்திரிகைகளின் வரலாறு பற்றிய



ஆய்வினை மேற்கொண்டோம். 1930ஆம் ஆண்டு காலப்பகுதியில் "டொனமூர்" அரசியல் சட்டம் பத்திரிகைத் துறைக்கும், இலக்கியத் துறைக்கும் ஒரு களமாக இருந்தது. தற்போதைய பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்கவின் தந்தையாரான ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமரர் எட்மன்ட் விக்கிரமசிங்க பத்திரிகை துறையினை தனது ஆளுமையின் கீழ் கொண்டு வந்தார். அப்போது "லேக் ஹவுஸ்" பத்திரிகை நிறுவனத்தில் பணியாற்றிய திரு.க.சிவப்பிரகாசம், திரு.ரி.சிவப்பிரகாசம், திரு.கே.பாலச்சந்திரன் ஆகிய மூவரையும் வீரகேசரி பத்திரிகை அலுவலகத்துக்கு கொண்டு வந்து திரு.க.சிவப்பிரகாசத்தை ஆசிரியராகவும், திரு.ரி. சிவப்பிரகாசத்தை விநியோக முகாமையாளராகவும், திரு. பாலச்சந்திரனை நிர்வாக அதிகாரியாகவும் நியமித்தார். அதன் பின்னரே வீரகேசரி பத்திரிகையில் மறுமலர்ச்சி ஏற்பட்டது."

வீரகேசரி பத்திரிகையின் விநியோக முகாமையாளராக இருந்த திரு. ரி. சிவப்பிரகாசம் உரையாற்றியபோது: "திரு.ரணில் விக்கிரமசிங்கவின் தந்தையாரான திரு. எட்மன்ட் விக்கிரமசிங்க "Daily News" பத்திரிகையின் நிதித்துறை ஆசிரியராக (Financial Editor) பணியாற்றினார். அவர் வீரகேசரி பத்திரிகையினை பொறுப்பேற்ற கால கட்டத்தில் பத்திரிகைத் துறை அரசியல் துறையினரின் கண்டணத்துக்குரியதாக இருந்தது. இருந்தபோதும் அவர் பொறுப்பேற்றபோது வீரகேசரியின் விநியோகம் மிகக் குறைவாகவே இருந்தது. பின்னர் படிப்படியாக விநியோகம் அதிகரித்தது. வாசகர்கள் வீரகேசரி பத்திரிகையினை ஆர்வத்தோடு வாசித்து அதில் வெளிவரும் செய்திகள் பற்றி விமர்சனமும் செய்து வந்தனர். திரு.சிவப்பிரகாசம் வீரகேசரி பத்திரிகையின் வளர்ச்சியைக் கவனித்துக் கொண்டு சட்டக்கல்லூரிக்கு சென்று சட்டக் கல்வியையும் மேற்கொண்டு சட்டத்தரணியானார். சில காலத்தின் பின்னர் தனது ஆசிரிய பதவியை இராஜினாமா செய்துவிட்டு அமெரிக்காவுக்கு புலம் பெயர்ந்தார்" என்றார்.



இலங்கையில் ஆசிரியராகவும் பின்னர் கல்வி அதிகாரியாகவும் பணியாற்றிய திரு.விநாயகமூர்த்தி அவர்கள் உரையாற்றியபோது: "சமூகத்தின் எழுச்சிக்கு காரணகர்த்தாக்களாக இருப்பவர்கள் பத்திரிகையாளர்கள் தான். பத்திரிகை படிப்பதன் மூலம் நாட்டு நடப்புகளை அறிந்து கொள்வதோடு நின்றுவிடாது எழுத்தாளர்களாகவும் ஆகலாம். பலர் பத்திரிகை வாசிப்பதை தமது காலைப் பணியாகக் கொண்டுள்ளனர். பத்திரிகையை வாசித்த பின்னரே தேநீர் அருந்துவார்கள். பத்திரிகைகள் காலத்தின் கண்ணாடி போன்றவை. உள் ஊர் செய்திகளை மாத்திரமன்றி உலகச் செய்திகளையும் தினமும் அறியத் தருபவை. அந்த வகையில் இலங்கையில் முதல் தர தமிழ் பத்திரிகையாகத் திகழ்ந்துவரும் வீரகேசரி பத்திரிகையின் வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பினை வகுத்த அமரர் சிவப்பிரகாசம் அவர்களுக்கு இன்று நாம் நினைவஞ்சலி செய்கிறோம்" என்றார்.

திரு. சிவப்பிரகாசத்தினால் 1972ம் ஆண்டு உதவி ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்ட திரு.மூர்த்தி செல்லத்துரை உரையாற்றிய போது: "நான் வீரகேசரியில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தபோது திரு.கே.வி.எஸ். வாஸ் அவர்கள் பிரதம ஆசிரியராகவும், திரு.கே.சிவப்பிரகாசம் அவர்கள் நிர்வாக ஆசிரியராகவும் இருந்தார்கள். திரு. சிவப்பிரகாசம் தான் என்னையும், திரு. இராமேஸ்வரன், ஜேர்மனி சேதுபதி ஆகியோரையும் எழுத்துப் பரீட்சை மூலம் உதவி ஆசிரியர்களாகத் தெரிவு செய்தார். அவர் கண்ணியமானவர் அதேவேளையில் கண்டிப்பானவரும் கூட.

வீரகேசரியில் பணியாற்றிய அந்தப் பத்தாண்டு காலம் என் வாழ்வின் பொற்காலம் என எண்ணி நான் பெருமிதம் அடைகின்றேன். இன்றைய நிகழ்வில் பங்குபற்றிய வீரகேசரியின் முன்னாள் உத்தியோகத்தர்களுக்கும், காலஞ்சென்ற ஆசிரியர் சிவப்பிரகாசம் அவர்களின் சகோதர சகோதரிகள் உறவினர்கள் ஆகியோருக்கும் மற்றும் நண்பர்களுக்கும், நினைவஞ்சலிக் கூட்டத்தினை நடத்துவதற்கு எழுத்தாளர் இணையத்தின் ஊடாக இந்த மண்டபத்தினை ஏற்பாடு செய்து தந்த திரு.விநாயகமூர்த்தி அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்" என்றார்.

# உலகிற்கு...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

களை மேம்படுத்தினார். 60க்கு மேற்பட்ட விஞ்ஞான கண்டுபிடிப்புக்களை செய்த பெல் போல ஒரு விஞ்ஞானியை அறிய முடியாதுள்ளது.

1875இல் முதலாவது அதிர்வு தொலைபேசி (Vibraphone) ஐ கண்டுபிடித்தார். செப்ரெம்பர் 1875இல் தொலைபேசி பற்றிய விபரங்களை எழுதி 1876, பெப்ரவரி 14இல் அமெரிக்காவில் உரிமம் பெற்றது. 1876, மார்ச் 10 இல் அவரது Vibraphone மூலம் மனித குரல் கேட்கப்பட்டுள்ளது. முதலாவது தொலைபேசி மாற்றுநிலையம் (First telephone Exchange) நியூகெவன் என்ற இடத்தில் பெல் நிறுவினார். அதில் அவரது மாமனார் Gardiner Greene Hubard, Assistant Thomas Watson, Thomas Sander எல்லோருடனும் சேர்ந்து இயங்க தொடங்கியது. இதுவே முதலாவது பெல் தொலைபேசி ஆகும். 1979 பெப்ரவரி 12இல் நியூ இங்கிலாந்து தொலைபேசி நிறுவனம் (New England tele phone company) பெல் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு தேசிய பெல் தொலைபேசி நிறுவனம் (National Bell telephone compa ny) நிறுவப்பட்டது. பின்பு அமெரிக்கன் பெல் கொம்பனியாக (American Bell Company)



மாற்றமடைந்தது. 1894 இல் பெல் நிறுவனத்தின் உரிமம் முடிவடைந்தமையால் இந்த துறையில் பலத்த போட்டி ஏற்பட்டது. 10 ஆண்டுகளுக்குள் 6,000 நிறுவனங்கள் தொலைபேசி தொழிலில் இறங்கின. எனினும், கண்டம் சார்ந்து செல்லக் கூடிய தொலைபேசி அமைப்பில் பெல் நிறுவனமே புகழ்பெற்றது. இதனை 'Transcontinental telephone line' என அழைத்தனர். நியூயோர்க்கில் பெல்லும் சான்பிரான்சிஸ்கோவில் வாட்சனும் இணைந்து முதல் கண்டம் சார்ந்த தொலைபேசிய அமைப்பை நடத்திக் காட்டினர். 1922 இல் கிரகாம் பெல் இறந்தபோது 13 மில்லியன் இணைப்புகள் விற்பனையாகியிருந்தன. உலகெங்கிலும் தொலை பேசி மணிகள் அடித்தன.

பெல் தனது தொலைபேசி கண்டுபிடிப்பினை செய்து கொண்டிருந்தவேளையில் வேறு சில கண்டுபிடிப்புக்களையும் செய்துள்ளார். இதில் முக்கியமானது பறக்கும் இயந்திரம் (Flying Machine) ஆகும். எனவே விமானங்கள் உருவாகுவதற்கு ஆய்வு முன்னோடியும் இவரே யாவர். தகடுகள் மூலம் பறக்கும் கொடிகளை (Bell Tetrahedral kite) உருவாக்கினார். எதி ர்கால பறக்கும் இயந்திரங்களை (Flying Ma chines of the future) என்ற கட்டுரையை எழுதினார். தற்போது வலம் வரும் ஹெலிகொப்டர் தயாரிப்புக்கும் இதுவே முன்னோடி. நோவாஸ்கோஷியா, Beddeck என்ற இடத்தில் பல்வேறு கொடி பறப்புகளை செய்து காட்டினார். 1898 இல் தேசிய புவியியல் சங் கத்தில் (National Geographic Society) தலைவரானார். 1904இல் Frost king என்ற உலோகத் தகடுகளாலான கொடியில் பறந்து காட்டினார். 243 இறாத்தல் பாரமுள்ள கொடி மேலே பறந்தது.

பெல் கண்டுபிடித்த பல கருவிகள் மருத்துவ விஞ்ஞானத்திற்கு உதவுபவையாகும். ஒலிகளை ஒளிமூலமாக கடத்தும் தொலைபேசி (Photophone) Telectroscope, உலோக ஜக்கெட்டுகள் (Metal vaccum jacket), மின்னியக்க இயந்திரம் (Electro Mechanical Ma chine ), Metal Detector, Hydro folis Hydro planes, ஓடியோ மீட்டர், இண்டக்சன் பலன்ஸ், குரல் பதிவு (Voice recording) எல்லாமே இவரது கண்டுபிடிப்புகளே ஆகும். இவை தவிர Phonograph கூட இவராலேயே உருவானது. எல்லா விஞ்ஞானிகளுக்கும் பிதாமகன் என்பதற்கு அவரது 60 கண்டுபிடிப்புகள் காரணமாகும்.

கிரகாம் பெல் பல்வேறு பரிசில்களையும் கௌரவங்களையும் பெற்ற ஒருவர். இதில் மிகச்சிறந்தவை 9 ஆகும்.

- The volta prize - 50,000 Francs
- The UK society of arts Albert medal
- The IEE (1976) medal

தொடர்ச்சி 37ஆம் பக்கம்...)

# சிவத்தமிழ்...

24ஆம் பக்கத்தொடர்ச்சி

மாணவர்களுக்கும் ஆசிரியர் களுக்கும் யாப்பிலக்கணம் கற்பிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். கனடா தமிழ் கவிஞர்கழக உறுப்பினர்கள் இதை இலவச-மாக படிப்பிக்கத் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகளில் 'எங்கும் எதிலும் எவரும்' என்ற நடன



நிகழ்வில் இருபத்தியொரு மாணவர்கள் தமிழ், ஆங்கிலம், சீன, பஞ்சாப் மற்றும் பல்கலாசார நடனங்களை ஆடினர். 'ஔவையாரும் ஆத்திசூடியும்' என்ற உ ரையாடலில் நாற்பது மாணவர்கள் பங்கு பற்றி ஆத்திசூடியின் ஒவ்வொரு வரிக்கும் ஒரு நிகழ்வை நடித்துக் காட்டினர். மாணவர்கள் தமது பங்கை நன்றாக செய்திருந்தாலும் ஒலிவாங்கியில் ஏற்பட்ட தடங்கல்களால் இந்நிகழ்வு சரிவரி பார்வையாளர்களைச் சென்றடையவில்லை.

'ஒரு மரத்தின் குரல்' கதையும் காட்சியும் மனத்தைத்தொடும் ஒரு நிகழ்வாக இருந்தது. ஒரு மரத்தை தனது தாயாக உ ருவகித்து வாழ்வந்த சிறுமி குழலி அம்மரம் வெட்டப்படும் போது கலங்கியது மிகவும் உ ணர்வு பூர்வமாக இருந்தது. இதில் பங்கு பற்றிய பதின்னெட்டு மாணவர்களும் நன் றாக தமது பங்கைச் செய்தனர். முருகனின் ஆறுபடை வீடுகளையும் அழகான பாடல் கள் மூலமும் அவ் ஆறுபடையில் வீற்றிருக் கும் முருகனின் வடிவிலும் 'ஆறு படையில் அழகன்' என்று இருபது மாணவர்கள் ஒரு கதம்ப நிகழ்வை நடத்தினர்.

இந்நிகழ்வுகளின் இடையே இவ்விழாவிற்கு கௌரவ விருந்தினர்களாக வந்திருந்த திரு. பொன்னையா விவேகானந்தன் மற்றும் மிருதங்க ஞானவாருதி வாசுதேவன் இராஜ லிங்கம் உரையாற்றினர். இந்துக்கல்லூரி யில் பயின்று தற்போது உதவியாளராக இருக்கும் செல்வன் டுஷான் கேதாரன் 'மாணவர் பார்வை' பற்றிக் கூறினார். ஐந்து வயதில் தமிழ் எழுதவோ வாசிக்கவோ தெரியாமல் பாடசாலையில் பாலர் வகுப்பில் சேர்ந்து ஒன்பது ஆண்டுகள் கல்வி கற்று தற்போது அழகான தமிழில் டுஷான் தனது பாடசாலை அனுபவத்தைக் கூறினார்.

இந்துக்கல்லூரியில் பயின்று தற்போது பல்கலைக்கழகத்தில் படிக்கும் பழைய மாணவி செல்வி ஆரணி ஞானநாயகன் இந்துக்கல்லூரியில் கற்றதன் பயன் பற்றி உரையாற்றினார். இவர் இந்துக்கல்லூரியில் பயின்ற தமிழ்க் கல்வி பின்னர் எவ்வாறு தமிழ் திறமைச் சித்தி பெறவும் அதன்பின்னர் கனடாவின் மிகவும் தரம் வாய்ந்த பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறவும் உதவியது என்று கூறினார்.

பெற்றோரின் பார்வையில் திருமதி சந்திரிகா திவாகரன் உரையாற்றினார். புலம்பெயர்ந்து வந்து வெளிநாடுகளில் வாழும் எமது பிள்ளைகளுக்கு எமது சமயப்பண்புகளை யும் எமது அடியார்கள் எமக்கு அருளிய எண்ணற்ற கருவூலங்களையும் கற்பித்து அவர்களை பண்புள்ளவர்களாக்கும் இக் கல்லூரியின் பணி போற்றுதற்குரியது என்றார்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகளில் 'கடவுளின் பெருமை' என்ற நாடகத்தை ஏழு மாணவர்கள் பங்கேற்று நடித்தனர். ஒரு மன்னனின் இறைவன் எங்கே இருக்கிறான்? எந்ததிசையை நோக்கி இருக்கிறான்? இப்போது என்ன செய்துகொண்டு இருக்கி றான்? என்ற மூன்று கேள்விகளுக்கும் பதிலளித்த மன்னனின் அவைப்புலவரின் பேத்தி பொன்னியின் நடிப்பு மிகவும் நன்றாக இருந்தது. அதைத்தொடர்ந்து 'ஆசிரியரும் தொழிலாளர்களும்' உரை யாடல் நிகழ்வை பதினேழு மாணவர்கள் நிகழ்த்தினர். 'நிம்மதியற்ற வாழ்வு' நாடகத்தை பதின்மூன்று மாணவர்கள் பங்கேற்று நடத்தினர்.

சிவத்தமிழ் விழாவிற்கு தலைமைவகித்த கல்லூரி ஆசிரியர் செல்வி அனுஜா




இந்திரகுமார் அடுத்து தனது தலைமை உரையை நிகழ்த்தினார். இவர் கனடாவில் பிறந்து, இசை இளங்கலைமானி பட்டம் பெற்று இளம் ஆசிரியராக இந்துக் கல்லூரியில் பணியாற்றுகிறார். இவர் தனது உரையில் தற்போது கல்லூரியில் பயிலும் மாணவர்களுடைய பெற்றோர் பலருக்கு தமிழ் சமய அறிவு இல்லை. அவர்கள் பிள்ளைகளிடம் இருந்து தாமும் தமிழ், சமயம், தேவாரம் படிப்பதாகக் கூறு கின்றனர். இது எமது புராணக்கதையில் முருகன் தந்தைக்கு உபதேசித்தது போல் இருக்கிறது என்றார்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகளில் 'வேர்களைத் தேடி' நாடகத்தை பத்தொன் பது மாணவர்கள் பங்கேற்று நடித்தனர். விழாவின் இறுதிக் கலை நிகழ்வாக இருபத்தியிரண்டு மாணவர்கள் பங்கேற்ற பட்டிமன்ற நிகழ்வு நடைபெற்றது. இப்பட்டி மன்றத்தில் 'பேரன் பேத்தியாருடன் வாழ்வது சந்தோமானதா? சங்கடமானதா? என்ற விவாதம் நடைபெற்றது. விவாதங்களுக்கு இடையே வந்து நடித்த பேரன் மற்றும் பேத்தி மார்களுடைய உரையாடல்கள் நன்றாக இருந்தது.

விழாவின் பிரதம விருந்தினர் கவிஞர் வி. கந்தவனம் தனது பிரதமவிருந்தினர் உரை யில் இந்த விழாவில் பங்கு பற்றிய மாணவர்களில் பலருடைய பெயர்கள் எமது சமயப் பெயர்களாக இல்லை என்றார். தன்னுடைய பேரப்பிள்ளைக்கு மீனாட்சி என பெற்றோர் பெயர் வைத்துள்ளார்கள் என்றார். பெற்றோர்கள் எமது சமயப் பெயர்களை தமது பிள்ளைகளுக்குப் பெயராக வைக்க வேண்டும் என்றார்.

சிவத்தமிழ் விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக மதிப்பிற்குரிய Soo Wong ஒன்ராரியோ நாடாளுமன்ற உறுப்பினர், திரு. நீதன் சான் மாநகரசபை உறுப்பினர், திரு.பார்த்தி கந்தவேள் கல்விச்சபை உ றுப்பினர், திரு.லோகேந்திர லிங்கம் உதயன் பத்திரிகை ஆசிரியர், கலாநிதி. இ பாலசுந்தரம் மற்றும் திரு. தனா மாணிக்கவாசகர் ஆகியோர் வந்திருந்தனர். இவர்களும் விழாவின் நிகழ்வுகளுக்கு இடையில் சிறப்புரைகள் ஆற்றினர்.

கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள் தனது உரையில் தான் 15 வருடகாலமாகக் கன-டாவில் உயர்தரப் பாடசாலையின் ஆலோச கராக பதவி வகித்திருப்பதால் இங்குள்ள உ யர்தரப் பாடசாலைகள் மாணவர்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிப்பது இல்லை என்று தனக்கு நன்றாகத் தெரியும், மாணவர்களை ஒழுக்கமுள்ளவர்களாக உருவாக்கி நல்ல சமுதாயத்தை உருவாக்குவது வரசித்தி விநாயர் இந்துக்கல்லூரி, நடன ஆசிரியர்கள் மற்றும் இசைத்துறை ஆசிரியர்கள் ஆவார் என்றார்.

நிகழ்வின் இடைஇடையே 2017 மார்ச் மாதம் நடைபெற்ற பொது அறிவுப்போட்டியில் பாலர் வகுப்பில் இருந்து 8 ஆம் வகுப்பு வரை பங்குபற்றி முதல் மூன்று இடங்களை யும் பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவின் இடையில் பார்வையாளர்களுக்கு தேநீர் மற்றும் சிற்றுண்டிகளும் விழா முடிவில் இரவு உ ணவும் வழங்கப்பட்டது. விழாவின் நன்றி யுரையை இந்துக்கல்லூரி நிர்வாகப் பொறுப்பாளர் திரு.ஜெயானந்த சர்மா தியாகராஜா ஐயர் வழங்கினார். இவ்விழாவின் எல்லா நிகழ்வுகளையும் இந்துக்கல்லூரியின் பன்னிரண்டு ஆசிரியர் களுமே நெறியாள்கை செய்திருந்தனர். சிவத்தமிழ்விழா 2017, 16 உரைகள், மாணவர்களின் 20 நிகழ்வுகள், 64 பரிசளிப்புக்கள் மற்றும் 308 மாணவர்களின் பங்களிப்புகளுடன் இரவு 11:30 மணியளவில் நிறைவெய்தியது.

# உலகிற்கு...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

- The sweet recorded a tribute 'Alexander Graham Bell' (Sold 1 Million copies)
- Royal bank of Scotland - A bank note to mark the 150th Anniversary of his birth March 3rd 1997
- Google had a special Alexander Graham Bell front page for his birthday in 2008
- Bell feature in the TV programmes - top ten.
- Greatest Canadians (2004)

Parks Canada maintains the Alexander Graham Bell National historic site

- United States - Library congress manuscript divison collecting of Alexander Graham Bell

இவை தவிர பல விருதுகள் முக்கிய-மானவை Hughes medal

- 1913 Invention of the telephone
- 1902 - Albert medal
- 1914- IEEE edison medal
- 1912 Elliott cresson medal
- 1907 John Fitz medal

பல்கலைக்கழகங்கள் கௌரவ கலாநிதிப் பட்டங்கள் பலவற்றை வழங்கியுள்ளன. ஏறக்குறைய 12 பல்கலைக்கழகங்கள் இதில் உள்ளன. அவற்றுள் சில முக்கிய-மானவை. ஹவாட் பல்கலைக்கழகம், இலி-ரேயியல் கல்லூரி, சென்ற் அன்ரூஸ் பல் கலைக்கழகம், ஒக்ஸ்போட் பல்கலைக் கழகம், குவின்ஸ் பல்கலைக்கழகம் (ஒன்ராரியோ), Rybert Char les University (ஜேர்மனி), 'டாட்மவுத் கல்லூரி' போன்ற உ லகின் பல உயர்கல்வி நிலையங்கள் பல்வேறு பட்டங்களையும், கௌரவங்களை யும் வழங்கின. 1917 இல் கனடாவில் அவரது பெயரிலான பூந்தோட்டத்தில் (Tele-phone city) நினைவுச் சின்னம் நிறுவப்பட்டுள்ளது. இது நோவாஸ்கோஷியா




Beddeck என்ற இடத்தில் உள்ளது.

கிரகாம் பெல் தனது 75ஆவது வயதில் 1922 ஆகஸ்ட் 2இல் நோவாஸ்கோஷியா வில் உள்ள Beinn Bhreagh என்ற இடத்தில் காலமானார். நீரிழிவு ஏற்பட்டே மரணித்துள்ளார். அவரது இறப்பு தினத்தில் வட அமெரிக்காவில் சில விநாடிகள் எல்லா தொலைபேசிகளும் மௌனித்தன. சொந்த கல்வியே வாழ்நாள் முழுவதுமான விடயம் (Self education a lifelong affair )என்று கூறியவர் உலகிற்கு குரலை வழங்கி விட்டு மறைந்து போனார்.

MATH & PHYSICS TUTION

By a well-qualified and an experienced teacher. For all grades from Gr. 4 to 1st year of university.

Special classes in advanced functions, calculus & vectors and data management. Classes available at Scarborough & Stouffville.



Contact: 647 340 9490/ 416 732 2228

# பத்தாண்டு கால ஐபிஎல் உலகில் சாதனை!

## விளையாட்டுத் தகவல்கள் 382



**எஸ். கணேஷ்**

இந்தியாவில் கடந்த 2008-ஆம் ஆண்டு முதல் ஐபிஎல் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் மொத்தம் 8 அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன. இத்




தொடரில் ஏனைய நாடுகளைச் சேர்ந்த வீரர்களும் பங்குபெற்று விளையாடி வருகின்றன. அவர்கள் ஏலம் முறையில் ஐபிஎல் அணிகளுக்கு வாங்கப்படுவர். இந்நிலையில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக, விளையாடி வருபவரும் வேகப்பந்து வீச்சாளரும் இலங்கை அணியின் வீரருமான லசித் மலிங்கா ஐபிஎல் உலகில் புது சாதனை படைத்துள்ளார்.

யோர்க்கர் ஸ்பெஷலிஸ்ட் ஆன மலிங்கா எதிரணி துடுப்பாட்டக்காரர்களை தன்னுடைய துல்லியமான யோர்க்கர் மூலம் மிரட்டி வருகிறார்.

### தம்ப்பி விரைவில் இந்திய அணிக்காக ஆடுவாரா?

நடப்பு ஐபிஎல் கிரிக்கெட்டில் சற்றும் எதிர்பார்க்காத அளவில் சிறப்பாக ஆடும் வீரர்களில் குறிப்பாக கேரள வேகப்பந்து வீச்சாளர் பேசில் தம்ப்பி அனைவரையும் கவர்ந்துள்ளார். தெற்கு மண்டல ரி20 கிரிக்கெட் தொடரில்தான் முதன் முதலாக பேசில் தம்ப்பியின் வேகப்பந்து வீச்சின் தரம் பற்றி தெரியவந்தது. சீராக 140-145 கிமீ வேகத்தில் அவர் வீசுவதைப் பார்த்துப் பலரும் ஆச்சரியமடைந்தனர். இதனையடுத்து இந்திய அணி நிர்வாகத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட, அவுஸ்திரேலியாவுக்கு எதிராகப் புனேயில் நடைபெற்ற ரெஸ்ட் போட்டியின் போது வலைப் பயிற்சியில் இந்திய ரெஸ்ட் பேட்ஸ்மென்களுக்குப் பந்து வீச தம்ப்பி அழைக்கப்பட்டார். இவர் இந்திய ரெஸ்ட் பேட்ஸ்மென்களுக்குப் பந்து வீசிக் கொண்டிருந்த அந்தத் தருணத்தில்தான் பெங்களூருவில் ஐபிஎல் ஏலத்தில் குஜராத் லயன்ஸ் இவரை ரூ.85 லட்சத்திற்கு ஏலம் எடுத்தது.

நடப்பு ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் இவர் வீசும் வேகம், லெந்த், பந்தின் எழுச்சி, இவரது யோர்க்கர்கள் ஸ்டீவ் ஸ்மித் போன்ற பெரிய பேட்ஸ்மென்களையே மிரட்டியது. முதன் முதலாக ஐபிஎல் கிரிக்கெட்டில் ஆடும் போதே ஜாம்பவான்களான கோஹ்லி, கெய்ல், டோனி ஆகி-



யோரை வீழ்த்தினார். இந்நிலையில் அவர் அளித்த பேட்டியில், "கடந்த ஒரு மாதம் எனக்கு அருமையாக அமைந்தது. கிரேட் பேட்ஸ்மென்களுக்கு வீசுவேன் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் ஐபிஎல் கிரிக்கெட்டில் விளையாடுகிறேன் என்பதை இன்னும் என்னால் நம்ப முடியவில்லை" என்றார். இவரது முதல் விக்கெட் கிறிஸ் கெய்ல். இது குறித்து அவர் கூறும்போது, "இதைவிடப் பெரிய விக்கெட்டை நான் எதிர்பார்க்க முடியாது, யோர்க்கரில் இவரை எல்.பி. ஆக்கியதை என்னால் மறக்க முடியாது. மேலும் கோஹ்லி, டோனி, மணிஷ் பாண்டே, கெய்ரன் பொலார்ட் விக்கெட்டுகளையும் என்னால் மறக்க முடியாது.

அணித்தலைவர் ரெய்னா, பயிற்சியாளர் பிராட் ஹாட்ஜ், பந்து வீச்சுப் பயிற்சியாளர் ஹீத் ஸ்ட்ரீக், சக வீச்சாளர்கள் முனாஃப் படேல், பிரவீண் குமார் ஆகியோர் மிக பெரிய அளவில் தமக்கு உதவி புரிந்ததாக கூறும் தம்ப்பி, பிரெண்டன் மெக்கல்லம், டிவைன் பிராவோ, டிவைன் ஸ்மித், பிஞ்ச், ஜேசன் ராய், ஜேம்ஸ் பாக்னர், ஜடேஜா ஆகியோருடன் ஓய்வறையைப் பகிர்ந்து கொள்வது தமக்குக் கிடைத்த பேறு என்றார்.

தற்போது மேலும் கூடுதல் ஸ்விங் மற்றும் ரிவர்ஸ் ஸ்விங் ஆகியவற்றைப் பயிற்சி செய்து வருகிறேன். ஆனால் என் பந்து வீச்சு வேகத்தில் சமரசம் செய்து கொள்ளப் போவதில்லை" என்று கூறும் தம்ப்பி விரைவில் இந்திய அணிக்காக ஆடுவார் என்று எதிர்பார்க்கலாம்.

### சதம்! சதம்! சதம்!

இந்த ஆண்டு நடைபெற்றுவரும் ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் பஞ்சாப் அணிக்காக விளையாடிய தென்னாபிரிக்கா வீரர் ஹாசிம் அம்லா சதம் விளாசி, ஐ.பி.எல் கிரிக்கெட்டில் சதம் கண்டவர் பட்டியலில் இரண்டாவது முறையாக இணைந்தார். இந்த சீசனில் அவர் அடித்த இரண்டாவது சதம் இது. இதற்கு முன் இவர் மும்பைக்கு எதிராக, 104 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

பெங்களூர் அணிக்காக விளையாடும் கிறிஸ் கெய்ல் 5 முறை சதம் விளாசியுள்ளார். கொல்கத்தாவுக்கு எதிராக 102, பஞ்சாப்புக்கு எதிராக 107, டெல்லி அணிக்கு எதிராக 128, புனேவுக்கு எதிராக 175, பஞ்சாப்புக்கு எதிராக மீண்டும் 117 என 5 முறை சதம் அடித்துள்ளார்.

விராட் கோஹ்லி, குஜராத்துக்கு எதிராக 100, புனேவுக்கு எதிராக 108, குஜராத்துக்கு எதிராக 109, பஞ்சாப்புக்கு எதிராக 113 என 4 முறை சதம் எடுத்துள்ளார்.

பெங்களூர் அணியின் டிவில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா) இதுவரை சென்னைக்கு எதிராக 105, மும்பைக்கு எதிராக 133, குஜராத்துக்கு எதிராக 129 என 3 முறை சதம் அடித்துள்ளார். ஹைதராபாத் அணியின் தலைவர் டேவிட் வார்னர் கொல்கத்தாவுக்கு எதிராக 107, டெக்கான் அணிக்கு எதிராக 109, கொல்கத்தாவுக்கு எதிராக 126 என 3 முறை சதம் விளாசியுள்ளார்.

பிரண்டன் மெக்கல்லம் (நியூசிலாந்து), முரளி விஜய் (இந்தியா), கிறிஸ் கிறிஸ்ட் (அவுஸ்திரேலியா) ஆகியோர் தலா 2 முறை இதுவரை சதம் அடித்துள்ளனர்.

### அதிவேகத்தில் அரை சதம்!

பல்வேறு மாற்றங்களை கண்டுவரும் கிரிக்கெட்டில் தற்போது நடைபெற்று வரும் ஐபிஎல் 20-20 கிரிக்கெட் ரசிகர்களை ஆட்டிப்படைக்கிறது. ஐ.பி.எல் தொடரில் கிரிக்கெட் வீரர்கள் நாளுக்குநாள் புதிய புதிய சாதனைகள் அரங்கேற்றி வருகின்றனர். இதில், அதிவேகமாக அரைசதம் கடந்த அசகாயசூரர்கள் பட்டியல் உங்களுக்காக.

அண்மையில் நடந்த பெங்களூருக்கு எதிரான ஆட்டத்தில் மைதானத்தையே அதிரவைக்கும் வகையில் ஆடிய சுனில் நரேன், 15 பந்துகளில் 50 ஓட்டங்களைக் கடந்து வாண வேடிக்கை நிகழ்த்தினார். இதேபோல், ஹைதராபாத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் யூசப்பதானும் 15 பந்துகளில் அரைசதம் கடந்துள்ளார். அடுத்தபடியாக, சுரேஷ் ரெய்னா பஞ்சாப் அணிக்கு எதிராக 16 பந்துகளிலும், கிறிஸ் கெயில் புனே அணிக்கு எதிராகவும், ஆடம் கில்கிறிஸ்ட் டெல்லி அணிக்கு எதிராகவும் தலா 17 பந்துகளில் அரைசதம் அடித்து அசத்தியுள்ளனர்.

### முத்தையா முரளிதரனுக்கு கௌரவ விருது: ஐசிசி அறிவிப்பு

ஐசிசி-யின் Hall of Fame விருதுக்கு இலங்கை அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சர்வதேச கிரிக்கெட் பேரவையான ஐ.சி.சி, கிரிக்கெட் விளையாட்டிற்கு ஆற்றிய சேவைக்காக Hall of Fame என்னும் விருதை வீரர்களுக்கு வழங்கி வருகிறது. இந்த வருடத்துக்கான Hall of Fame விருது இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனுக்கு வழங்கப்படும் என ஐசிசி அறிவித்துள்ளது. இந்த விருது கௌரவிக்கும் விழாவில் முரளிதரனுக்கு ஐசிசி தொப்பியும் பரிசாக வழங்கப்படும். இந்த கௌரவிப்பின் உத்தியோகபூர்வ நிகழ்வு வரும் ஜூன் மாதம் இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரின் போது நடைபெறும். இந்த விருதுக்கு தெரிவு செய்யப்படும் முதல் இலங்கை வீரர் முத்தையா முரளிதரன் என்பது குறிப்பிடத்தக்கது.

### சாம்பியன் கிண்ண தொடர்: இலங்கை அணி!

சாம்பியன் கிண்ண தொடருக்கான இலங்கை அணித் தலைவராக அஞ்சலோ மத்தியூஸ் நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கட் நிறுவனம் தெரிவித்துள் ளது. உபாதை காரணமாக சில போட்டிகளில் விளையாடாமல் இருந்த நிலையில் தற்போது, அஞ்சலோ மத்தியூஸ் ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடி வருகின்றார். இந்நிலையில் ஐ.சி.சி சாம்பியன் கிண்ணத் தொடருக்கு தகுந்த உடல் நலம் உள்ளமையின் காரணமாக அணியில் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


**உலகத் தொல்காப்பிய மன்றம் கனடாக்கிளை நடத்தும்**
**தொல்காப்பிய விழாப் போட்டிகள் - 2017**

உலகத் தொல்காப்பிய மன்றக் கனடாக்கிளையின் ஆண்டுவிழாவை ஒட்டி நடத்தப்படும் "தொல்காப்பிய விழாப் போட்டிகள்" மே மாதத்தில் வரும் வார விடுமுறைநாட்களில் நடைபெறவுள்ளன.

காலம் : 21 - 22 மே, 2017 (ஞாயிறு - திங்கள்) நேரம்: காலை 8:30 தொடக்கம்
இடம் : 1240, Ellesmere Road, Scarborough ON - M1P 2X4 (Brimley & Ellesmere)

போட்டியிற் கலந்துகொள்வோர் பின்வரும் இணைய முகவரிக்குச் சென்று நேரஅட்டவணையைப் பார்வையிடலாம். **தேவயானி மகிழ்ச்சிதான் எனக்கு விருது!**

**ராஜகுமாரன்**www.tolkapiyam.ca

தொல்காப்பிய ஆண்டுவிழா 25. 06. 2017 அன்று தமிழிசைக் கலாமன்றத்தில் நடைபெறும். போட்டி அமைப்பாளர்கள்

# ரஷ்யாவின்...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

மல் விரட்டினார் ரஸ்புடின். ஓடும்போதே தன்னிடமிருந்த துப்பாக்கியால் பின்னால் அவ்வப்போது திரும்பி 4 முறை சுட்டான் பெலிக்ஸ் யூசுபோவ். சத்தம்கேட்டு கீழே வந்த விளாடிமிர் புரிஷ்கெவிச் தனது பாதுகாவலர்களுக்கு உத்தரவிட அவர்களும் சுட்டனர். அதுவும் வேலை செய்யவில்லை. ஆனால், எதிரிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதை உணர்ந்த ரஸ்புடின், வேறொரு பாதைவழியாக அங்கிருந்த நந்தவனத்தினுள் நுழைந்து ஓடத் துவங்கினார். அப்போது பின்னாலிருந்து வந்த டிமிட்ரி பவ்லோவிச் தனது பெரிய துப்பாக்கியால் ரஸ்புடினைச் சுட, தலையில் குண்டுதுளைத்து ரத்தவெள்ளத்தில் கீழே சரிந்தார். ரஸ்புடின் நறநறவென பற்களைக் கடிப்பது தெரிந்தது! "இவன் இன்னும் இறக்கவில்லை. இன்னும் உயிரோடுதான் இருக்கிறான்" என்று ஒரு இரும்புத்தடியை எடுத்து ரஸ்புடினின் தலையிலும் உடலிலும் சரமாரியாக வெறிபிடித்தவனைப் போல் தாக்கினான், யூசுபோவ். ரஸ்புடினின் துடிப்பு அடங்கியது. ரஸ்புடினின் உடலை இறந்துவிட்டதாக முடிவுசெய்து, ஒரு கம்பளத்தில் வெளியில் வர முடியாதபடி (ஒருவேளை உயிர் பிழைத்து விட்டால்] இறுகக் கட்டி ராணுவ ஆம்புலன்ஸ் ஒன்றில் ரகசியமாக ஏற்றி, அருகில் ஓடிக்கொண்டிருந்த நேவா நதியில் வீசி விட்டு ஒன்றும் தெரியாதவர்களாக மீண்டும் மாளிகைக்கு நிம்மதியாகத் திரும்பினர்.

ரஸ்புடினைக் காணவில்லை என்கிற செய்தி பரபரப்பாகப் பேசப்பட்டுக்கொண்டிருந்தது. நேவா நதிக்குள், ரஸ்புடினின் உடல் கிடப்பதைக் டிசம்பர் 19-ம் தேதி கண்டறிந்தனர். பிரேதப் பரிசோதனையும் செய்தனர். உடலில் விஷம் எதுவும் இல்லை! 3 துப்பாக்கிக் குண்டுகள் மட்டும் இருந்தன. ஒரு குண்டு வயிற்றுப் பகுதியையும், கல்லீரலையும் தாக்கியிருந்தது.



இன்னொரு குண்டு சிறுநீரகப் பகுதியைத் தாக்கியிருந்தது. மற்றொரு குண்டு மூளைப் பகுதியில் காயத் தை ஏற்படுத்தியிருந்தது. நுரையீரலில் நீர் இருந்தது. அதாவது நீரினுள் தூக்கிப் போட்டபோதும் கூட ரஸ்புடின் உயிரோடு இருந்திருக்கிறார். அவர் சுவாசிக்கும்போது, நீர் நுரையீரலுள் புகுந்திருக்கும் என சில மருத்துவர்கள் கூறினர். கட்டித் தூக்கிப் போட்டபின் எவ்வாறு வெளியே வந்திருப் பார் எனக் குழம்பிக்கொண்டிருந்த கும்பலுக்கு, அவ்வுறை நீரிலும், அவர் உயிரோடு நீந்தி, எப்படியோ முடிச்சை அவிழ்த்து வெளியேறி, கரையேற முயன்றிருப்பது தெரிந்து வியர்த்துக்கொட்டியது. முடிவில், கொலைகாரக்கும்பல் பிடிபட்டது. 1916-ம் ஆண்டு டிசம்பர் 17-ம் தேதி ரஸ்புடின் அதி காலையில் தான் இறந்தார் என்று முடிவாகியது. ரஸ்புடினின் உடன்பிறந்த சகோதரன் டிமிட்ரி, சகோதரி மரியா ஆகியோரின் உயிர் எவ்வாறு நீரில் பிரிந்ததோ, அவ்வாறே தான் ரஸ்புடினுக்கும் நிகழ்ந்தது!

விஷமளித்தனர், அவர் இறக்கவில்லை. சுட்டனர், அவர் இறக்கவில்லை. கத்தியால் குத்தினர் அவர் இறக்கவில்லை. உடலை கயிற்றால் கட்டி நதியில் மூழ்கடித்தனர், உயிர் உடனே பிரியவில்லை, மறுநாள் இறந்து போனார். ஏனெனில் அப்போது தான் தன்னை யாரும் விரும்பவில்லை என்று அவருக்கு உறைத்தது போலும்! 48 வயது ஆரம்பமாக முன் இறந்தார்.

ரஸ்புடினின் மறைவுக்குப் பின், அரண்மனையிலிருந்த அவரது அறையை சோதனையிட்டனர். அப்போது கிடைத்த ஒரு கடிதத்தில் ரஸ்புடின் எழுதியிருந்த தீர் க்கதரிசனங்கள் மக்களை வியப்பில் ஆழ்த்தியது. அதில் ரஸ்புடின் குறிப்பிட்டிருந்தவை.

*1917-ம் ஆண்டு ஜனவரி முதல் தேதிக்கு முன்பாகவே நான் மரணமடைவேன்.
*பிரபுக்கள் அல்லது உயர்குடியைச் சேர்ந்தவர்களால் நான் கொல்லப்படலாம்.
*எனது மரணம் நிகழ்ந்த அடுத்த இரண்டு ஆண்டுகளில், அரசகுடும்பத்தை சேர்ந்த அனைவரும் மரணமடைவார்கள்.

*கிறிஸ்தவ மதத்திற்கு எதிரானவர்கள் ரஷ்யாவில் ஆட்சியைப் பிடிப்பார்கள்.
*அவ்வாறு ஆட்சியைப் பிடிப்பவர்கள், பின்னாளில் தங்களுக்குள் ஏற்படும் சகோதரச் சண்டை காரணமாக வெறுப்பு மிகுதியாகி, ஒருவரையொருவர் தாக்கி மடிவார்கள்.
*தேவாலயங்களின் மதிப்பு குலைக்கப்படும்.

இவற்றில் அவர் குறிப்பிட்டிருந்த அனைத்துமே நடந்தது தான் ஆச்சரியம்.

உசாத்துணை: 1. ரஷ்யாவின் ராட்சஸ ரட்சகன் - ரஸ்புடின்...!! by Jayanthi Nathan
2. ரஷ்யாவின் ரஸ்புட்டின்... தீர்க்தரிசியா? மக்கள் புரட்சிக்கு வித்திட்டவரா? by M.T. Selvarajah

# மறைகிறதா...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒருவர். அவரே தொடர்ந்து, "2016இல் அசாம் சட்டப் பேரவைத் தேர்தல் முடிந்ததுமே உத்தர பிரதேச தேர்தலில் கவனம் செலுத்தத் தொடங்கினார், பாஜக தேசிய தலைவர் அமித்ஷா. முதல்கட்டமாக, உத்தர பிரதேசத்தில் அடிமட்ட அளவிலான பணிகளில் முனைப்புடன் இறங்க முடிவுசெய்யப்பட்டது. ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் 10 முதல் 21 கட்சித் தொண்டர்களை நியமிப்பதை உறுதிசெய்தார். மொத்தம் 1,47,401 வாக்குச் சாவடிகள். அதற்கு 13,50,000 பேர் களமிறக்கப்பட்டார்கள். இன்று உத்தரப் பிரதேசத்தில் பாஜக பெற்றிருக்கும் வெற்றிக்கு இந்தக் களப்பணியாளர்கள் முக்கிய காரணம். இந்த அளவுக்கு களப் பணியாளர்கள் தமிழகத்தில் பாஜகவுக்கு கிடையாது என்பது முக்கியப் பலவீனம்" என்கிறார் அவர். மேலும், "இறங்கி வேலை செய்யத் தொண்டர்கள் கிடைத்துவிட்டால், பாஜக வடக்கே பெறும் வெற்றிகளை தமிழகத்திலும் தொடங்கும் நாள் நெருங்கி விடும்" என்றும் உற்சாகமாக சொல்கிறார் அவர்.

ஆனால், நம்மிடம் பேசிய திமுக செய்தித் தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவனோ, "எந்தச் சூழ்நிலையிலும் தமிழ்நாட்டில் பிஜேபிக்கு வாய்ப்பே இல்லை" என்று மறுத்தார். "தமிழ்நாட்டுக்கு மத்திய பாரதிய ஜனதா அரசு செய்துவரும் அடுக்கடுக்கான துரோகங்கள் மக்களை அதிருப்தி அடைய செய்துள்ளது. காவிரி நீர் பிரச்சனைத் தொடங்கி ஹைட்ரோ கார்பன் திட்டம், ஜல்லிக்கட்டு, மீனவர்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை எனப் பல்வேறு பிரச்சனைகளில் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை பாரதிய ஜனதா மதிக்கவில்லை. இதனால், பாஜக இங்கு வெறுப்பை மட்டுமே சம்பாதித்துள்ளது. அடுத்தவர்களை குறை சொல்லிக்கொண்டிருக்கும் மோடி அரசு, சரியான சூழ்நிலைகளில் தமிழ்நாட்டுக்கு உதவுகின்ற நடவடிக்கைகளை எடுக்காததால் தேர்தல் நேரத்தில் தமிழக வாக்காளர்களை எதிர்கொள்ள முடியாது என்கிற நிலைதான் இன்று உள்ளது. பாரதிய ஜனதாவின் பாசாங்கு வார்த்தைகளால் தமிழக மக்களை ஏமாற்ற முடியாது" என்கிறார் டி.கே.எஸ். இளங்கோவன்.

முன்னாள் ஐஏஎஸ் அதிகாரியும் எழுத்தாளருமான சிவகாமி, "நடந்து முடிந்த 5 மாநில சட்டமன்றத் தேர்தல்களில் பாஜக பெரும்பான்மை பெற்றிருப்பது கொஞ்சம் கொஞ்சமாக பல மாநிலங்களில் அதன் பலம் அதிகரித்துக்கொண்டு வருவதையே காட்டுகிறது. 2019 நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றிபெற்று, தொடர்ந்து மத்தியில் பாஜக அரசு நீடித்தால், அடுத்து வரும் தேர்தலில் இல்லையென்றாலும், அடுத்தடுத்த தேர்தல்களில் தமிழகத்திலும் ஆட்சியமைக்கும் அளவு பாஜக வெற்றி பெறவே வாய்ப்பிருக்கிறது" என்கிறார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சிப் பொதுச் செயலாளர் ரவிக்குமாரும் இதனையே சொல்கிறார். "உத்தரப் பிரதேசத்தில் பாஜக அடைந்திருக்கும் வெற்றி, அவர்களுடைய துல்லியமான தேர்தல் பணிக்காகவும், அவர்கள் வகுத்த திட்டங்களுக்காகவும் மட்டும் கிடைத்த வெற்றியல்ல. பாஜகவின் வெற்றிக்குப் பின்னால் ஆளுங்கட்சியின் பலவீனமும் இருக்கிறது. ஏற்கெனவே காங்கிரஸ் மற்றும் சமாஜ்வாதி கட்சிகளின் மீது கொண்டிருந்த வெறுப்பினால் பெருவாரியான மக்கள் சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட, சண்டைக்காரன் காலில் விழுந்துவிடலாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இன்னொரு பக்கம் மதவாதமும் சாதியவாதமும் ஒருங்கிணைந்த வெற்றியாகவும் பாஜகவின் வெற்றி இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. இதே நிலைமை தமிழகத்திலும் நீடிக்கலாம். இங்கே மெல்ல பாஜக கொள்கைகளை பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அடுத்தத் தேர்தலில் தமிழகத்தில் பாஜக ஆட்சியைப் பிடிக்க முடியும் என்று உறுதியாகச் சொல்லிவிட முடியாது என்றாலும், அவர்கள் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவார்கள் என்பது தெளிவாகவே தெரிகிறது. 2016 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்திலிருந்து ஒருவர்தான் வெற்றி பெற்றிருந்தார். 2019 தேர்தலில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும். தமிழகத்தில் பாஜக வளர்ந்து கொண்டிருப்பதை தெளிவாக பார்க்க முடிகிறது" என்கிறார் ரவிக்குமார்.

நம்முடன் பேசிய தமிழக பாஜக துணைத் தலைவர் வானதி சீனிவாசன் உற்சாகத்தில் இருந்தார். காரணம், தமிழகத்தில் அவர் மேற்கொண்ட 'தாமரையின் தாகம் தீர்க்கும் யாத்திரை'க்கு கிடைத்த வரவேற்பு. "தமிழகத்தில் பாஜக காலூன்ற முடியாது என்பதற்கு என்னென்ன காரணங்கள் சொல்லி வந்தார்களோ அவை எல்லாவற்றும் உபி தேர்தல் முடிவுகளே பதில் சொல்லியிருக்கிறது. தமிழகத்திலும் அது போன்ற ஒரு சூழல் உருவாகத் துவங்கி விட்டது. தமிழகத்தில் நடந்த கடைசி இடைத்தேர்தலில் பாஜக மூன்றாவது இடத்தைப் பிடித்ததே அதற்கு சிறந்த உதாரணம்" என்கிறார் வானதி சீனிவாசன். திராவிடக் கோட்டையில் தாமரை!

www.vlambaram.com
www.tamilvanakkam.com

# மனவெளி...

24ஆம் பக்கத்தொடர்ச்சி

'உயிரி' கோடிட்டுக் காட்டியது. பஞ்ச தந்திரத்தில் இடம்பெறும் இத்தகைய கூற்றுகள் பெண்களின் பாலியலைக் கட்டுப்படுத்தல், பெண்களை மட்டுமே பாலியல் ஒழுக்க வாதிகளாகப் பார்த்தல் எனும் தந்தைவழிச் சமூகத்தின் ஆண் மேலாண்மைக் கருத்தாக்கங்களைத் தன்னகத்தே பொதிந்துள்ளன.

மெலிஞ்சிமுத்தனின் நெறியாள்கையில் 'காலசர்ப்பம்' எனும் நாடகமும் கூத்தும் சேர்ந்த ஆற்றுகை மூன்றாவதாக இடம் பெற்றது. பல்வேறு பிரச்சினைகளைத் தொட்டுச்செல்லும் காலசர்ப்பம் தன் பெயருகேற்றாற்போல் நீண்டிருந்தது. நேரத்தைச் சற்றுக் குறுக்கியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். கி.பி. 17ஆம் நூற்றாண்டில் டச்சுக்காரர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களையும், இரண்டாம் இராஜசிங்கன் மலை நாட்டினையும், கிழக்குப் பகுதிகளையும் உள்ளடக்கிய தனி இராச்சியமான கண்டியையும் ஆண்ட காலப்பகுதிக்குக் காலசர்ப்பம் பார்வையாளரை அழைத்துச் சென்றது. உண்மையும் (fact), கற்பனையும் பின்னிப்பிணைந்ததாய், வரலாற்றுப் புனைவு நவீனத்தின் சாயலில் அமைந்திருந்த காலசர்ப்பத்தின் கதை, கண்டி மன்னனால் சிறைபிடிக்கப்பட்ட கிழக்கிந்திய பிரிட்டிஷ் கம்பனி மாலுமியான ரொபேட் நொக்ஸ்சையும், கண்டி மன்னனுக் கெதிராகப் போராடக் கிளம்பிய கிளர்ச்சிக்காரர்களுள் ஒருவனையும் மையமாக வைத்துப் பின்னப்பட்டிருந்தது. நாடகப் பிரதியினை வியாபித்து நிற்கும் துருவச் சார்புகள் - சுதேசி/விதேசி, காதல் (அகம்)/ வீரம் (புறம்), நட்பு/துரோகம், இறப்பு/பிறப்பு, பிரிவு / சேர்க்கை - பிரதிக்குச் சுவை கூட்டுகின்றன.

காலசர்ப்பம் வரலாற்றுக்காலத்தினைப் பற்றியதாக இருப்பினும், நிகழ்காலப் பிரக்ஞை கொண்டது. பழங்காலத்தினை நிகழ்காலத்திற்கு சமீபமானதாக்கி, அதற்கும், இதற்கும் என்ன வித்தியாசம் என்று பார்வையாளர் மனதில் வினா தொடுக்கின்றது. தேசிய அரசியல் எடுகோள்களான 'இனத்தூய்மை' 'பழங்காலப் பண்பாட்டுப் பெருமிதம்' என்பவற்றை மீள்பரிசீலனை செய்யத் தூண்டுகின்றது. அடக்கு முறைக்கும், வன்முறைக்கும் உட்படுத்தி, ஆறாத் துன்பச்சுமை சுமக்க வைத்த பின்னர், பெண்களுக்குத் தெய்வத் தன்மை அளித்து, அவர்களைத் தெய்வங்களாக வழிபடுதலின் அபத்தத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது. மேலும், 'தகாத உறவினை' (incest) வயதுடன் தொடர்புடையதாக அன்றி, 'மனைவியும், மக்களும் எனது உடைமைகள்' என்ற கருத்தினை வரித்துக் கொண்ட ஆண் மேலாதிக்க சமூகத்தின் வன்முறை வடிவங்களுள் ஒன்றாகப் பார்க்கின்றது. இவ்விடத்தில் பின்வரும் மேற்கோளை நோக்குதல் பொருத்தமுடையதாகும்: **….in interrogating incest, Vikki Bell states the crime of incest is less about the daughter's age than about the 'gen-**



**dered power dynamics of a male dominated society that depicts women and children as possessions of the male.' (Christine Grogan, Father-daughter incest in twentieth century American novels, pages 123-24).** சுருங்கச்சொல்லின், காலங்காலமாக நிகழும் சமூக அதர்மங்களுக்கு எதிரான குரலாகக் காலசர்ப்பம் நகர்கிறது.

மேடை ஆற்றுகை என்று பார்க்கும்போது, காலசர்ப்பத்தின் பிரதான பலம் அதன் காதற் காட்சிகள் ஆகும். ரொனால்ட் தேவதாசனும், சுரபி யோகநாதனும் நடிப்பு, பாட்டுகள் மூலம் கண்ணுக்கும் செவிக்கும் ரம்மியமான விருந்தளித்தனர். மேலும், மெலிஞ்சிமுத்தனின் பின்பாட்டும், இடையிடையே வந்துபோன கூத்துநடைகளும் அருமையாக இருந்தன. பரதநாட்டிய சாஸ்திரம் கூறும் எட்டு ரசங்களும் -சிருங்காரம் (காதல்), ஹாஸ்யம் (நகைச்சுவை), கருணை (இரக்கம்), ரௌத்திரம் (கோபம்), வீரம், பயாநகம் (பயம்), பீபத்சம் (அருவெறுப்பு), அற்புதம் (ஆச்சரியம் அல்லது வியப்பு) _ இவ் அளிக்கையில் ஏறத்தாழப் பொருந்தி வந்துள்ளமையை அவதானிக்கலாம். நடிகர்கள் அனைவரும் தம் பங்கினைத் தம்மாலான விதத்தில் திறம்பட ஆற்றி யிருப்பினும், பிரதியே ஆற்றுகையினும் பார்க்கப் பலமாகத் தன்னை முன்னிறுத்துகிறது.

நான்காவதாக அரங்கேறிய சுமதியின் 'துன்முகி' நாடகம் தமிழ்ச் சமூகத்தில் உரையாடலுக்கு உட்படுத்த விரும்பாத விடயமொன்றினை ஆதாரமாகக் கொண்டது. தாய்மை என்பது இயற்கையானது, புனிதமானது, அன்பும், இரக்கமும் இயல்பாகவே பொருந்தியது என்று நாம் நினைத்தாலும் தாய்மை என்பதும் ஒரு சமூகக்கட்டே (social construct) ஆகும். சுமதியின் பிரதி சமூகத்தினால் கட்டப்பட்ட தாய் எனும் அன்பு பிம்பத்தினைச் சுக்கு நூறாக்குகின்றது.

இத்தகையதொரு நாடகத்திற்கான சமூகத் தேவை என்ன என்ற வினா எழக்கூடும். பெண் குழந்தைகளைப் பொறுத்தவரையில் முதல் மனிதத் தொடர்பாக மட்டும் தாய் அமையவில்லை. ஆண் குழந்தைகளைப் போலன்றி, பெண் குழந்தைகள் வளருங் காலத்தில் தாயுடனேயே தம்மை அடையாளப்படுத்தவும் முயல்கின்றனர். எனவே, தாய்-மகள் உறவில் வன்முறை இடம் பெறும்போது, அது மகள் மனதில் ஆறாப் புண்ணை உண்டாக்குகின்றது. மகளின் மனதில் அதிகார ஸ்தானத்தில் விளங்கும் தாயின் வன்மொழியால், நடத்தையினால் ஏற்படுத்தப்படும் வலி **"The mother wound"** என்று அழைக்கப்படுகின்றது. இந்தக் காயத்தைக் குணப்படுத்தாது, தாய்-மகள் உறவினை சீர்செய்தல் இயலாது. ஆனால் தாய்மை புனிதமானது என்ற சமூகக் கற்பிதம் தாயும் தவறிழைக்கக் கூடியவள் எனும் சாத்தியப்பாட்டினை அகற்றிவிடுகிறது. மகளின் தாய் பற்றிய தவறான கண்ணோட்டம் அல்லது தாயினைப் பிழையாக விளங்கிக் கொள்ளல் மட்டுமே காரணம் எனக் கொள்ளல் மூலம் இருவழி உறவினைச் சீர்ப்படுத்த இயலாது. அத்துடன், தாயின் வன்முறைக்கான அடிப்படைக்காரணங்கள், பின்னணி என்பதை ஆராய்தல் தாயின் நடத்தை பற்றிய புரிதலை அதிகப்படுத்தும்.

துன்முகி நாடகத்தில் தாயின் வன்முறைக்கு அவளின் மூன்று பெண் குழந்தைகளும் ஆளாகின்றன. தாயின் வன்முறை சார் நடவடிக்கைகளுக்கு அவளின் விருப்பத்திற்கு மாறான திருமணம், அவளிலும் பார்க்க அதிக வயது கூடிய கணவன், திருமணத்தில் அவள் அனுபவித்த பாலியல் வல்லுறவு என்பன காரணங்களாகச் சொல்லப்படுகின்றன. சுருங்கச் சொல்லின் தாயின் திருப்திப்படுத்தப்படாத பாலியல் விருப்பங்கள் பாலியல் ஏமாற்றங்கள் பிள்ளைகள் மீது வன்முறையாக வடிவம் பெறுகின்றன. கடைசி இரண்டு பிள்ளைகளும் தாயின் கொடுமை பொறுக்காது வீட்டை விட்டு வெளியேற, மூத்தமகள் மாத்திரம் தாயுடனேயே வாழ்ந்து, முதுகன்னியாக, வீட்டில் தாய் வகித்த அதிகார ஸ்தானத்தைத் தன்னகப்படுத்துகின்றாள் என்பதுடன் நாடகம் நிறைவுறுகின்றது. தாய் தன் பெண் பிள்ளைகள் மீது பிரயோகிக்கும் வன்முறையானது பாலியல் அதிருப்தியிலிருந்துதான் முளை விடுகின்றது என்ற சுருக்கல்வாதத்தை (**reductionist argument**) முன் வைப்பதன் மூலம் நாடகம் மனித நடத்தையின் சிக்கலான பண்பினை எளிமைப்படுத்த முனைகின்றது.

எல்லா நடிகர்களும் சிறப்பாக நடித்திருந்தனர் எனினும், தாய் பாத்திரமேற்று நடித்த தர்ஷினி வரப்பிரகாசம், கடைசிப் பெண் பிள்ளையாக நடித்த ஆர்த்தி அச்சுதப்பா மனதில் நிலைக்கின்றனர். முதலில் எளிமையான உடை, தளர்ந்த நடை, தாயின் செயல்களை எதிர்க்காது ஏற்றுக்கொள்பவளாகத் தோன்றிய மூத்த பெண்பிள்ளை இறுதிக்காட்சியில் நிமிர்ந்த, மிடுக்கான நடையுடன் நடுத்தரவயதுப் பெண்ணாக சேலையில் மாற்றம் பெற்று, தாயை அதிகாரம் செய்த பாங்கு வியப்பில் ஆழ்த்தியது. உரையாடல்களை மட்டுப்படுத்தி, நேரத்தினைச் சற்றுக் குறைத்திருந்தால் நாடகம் இன்னும் விறுவிறுப்பாக இருந்திருக்கும். மேலும், எதனை மேடையில் காட்டலாம், காட்டக்கூடாது என்பது தொடர்பில் நிலவி வரும் பேசப்படாத சமூகத் தடைக்கட்டினையும் (**unspoken taboo**) துன்முகி உடைத்துள்ளது. அதேசமயம் நாடகத்தில் அது எத்தகைய நோக்கத்தினை நிறைவேற்றியது என்பது விவாதத்திற்குரியது.

இறுதியாக மேடையேறிய சோபாசக்தியின் 'ஆறாம் படை'யினைப் புராந்தகன் நெறிப்படுத்தியிருந்தார். செய்திகளைப் பரபரப்பூட்டும் வகையில் தரும் பத்திரிகைகளைப் பிரித்தறிதல் உணர்வேதுமின்றி நுகரும் வாசகர்கள் கைக்கு முன்னாள் போராளி இணையர் தற்கொலை செய்யு முன்னர் எழுதிய 'நடந்தவைகளை உள்ளவாறே கூறும்' கடிதம் கிடைக்கின்றது. போர் முடிவிற்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் சமூகத்தில் மீள் இணைந்து கொள்ள அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் அதில் ஒவ்வொன்றாக விவரிக்கப்படுகின்றன.

பிரதியை விட, எவ்வாறு அப்பிரதிக்கு உயிரூட்டப்பட்டிருந்தது என்பதே இங்கு சிறப்பாகச் சொல்லப்பட வேண்டிய விடயம். அவ்விதத்தில் ஆறாம் படையே "உதாரண மேடை ஆற்றுகையாக" (**exemplary stage performance**) என் மனதிற்குப் பட்டது. அரங்க வெளியை முழுமையாகப் பயன்படுத்தியமை, ஒரு நடிகர் மேடையில் ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களை மிக இயல்பாக ஏற்று நடித்தமை, நாடகத்தையும், நடனத்தினையும் ஒன்றிணைத்தமை, பொருத்தமான வகையில் நாட்டுப்புறப்பாடல்கள் அழகாக இசையமைக்கப்பட்டு இசைக்கப்பட்டமை, ஒருவருக்கொருவர் சோடை போகாத நடிகர்களின் நடிப்பு, சற்றும் தொய்யாமல் நாடகம் சென்ற விதம் என்பன இதில் என் மனம் கவர்ந்த அம்சங்கள்.

இவ்வாண்டு அரங்காடல் நிகழ்வின் குறை என்று சொல்வதானால், மேடையில் தாம் மைக்கில் பேசுவதை தமிழ் அறிவிப்பாளரும், நடிகர்கள் சிலரும் சிற்சில வேளைகளில் மறந்து விட்டார்கள் என்பது போல் தோன்றியது. பேச்சுபயிற்சியுடன் நின்றுவிடாது, குரற்பயிற்சியிலும் கவனம் செலுத்தியிருக்கலாமோ என்ற எண்ணம் உண்டானது. தெளிவாகவும், உணர்ச்சி பூர்வமாகவும் பேச்சினை வழங்க வேண்டிய அதே நேரத்தில், குரலினை எவ்வாறு கையாளல் வேண்டும் (**how to project the voice on stage**) என்ற பிரக்ஞையும் இருத்தல் நலம்.

நிறைவாக, சலிப்பின்றிப் பார்க்கக்கூடிய வகையில் அரங்க நிகழ்வுகள் யாவும் அமைந்திருந்தன. கலைஞர்களின் ஆர்வமும், ஆற்றலும், உழைப்பும், திறமையும் பல விடங்களில் வெளிப்பட்டன. கலைஞர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன். அடுத்த அரங்காடலுக்காகக் காத்திருக்கின்றேன்.

யோகா சோதிடம்
- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# தேவயானி மகிழ்ச்சிதான் எனக்கு விருது!

## நேர்காணல் - ராஜகுமாரன்

### சந்திப்பு: சிவதாணு

“இதோ, உங்கள் நேர்காணல் முடிந்ததும் எங்கள் சொந்த ஊருக்குத்தான் போகிறோம். ஊரில் விவசாயம் செய்கிறேன். சுரக்காய், கத்திரி போட்டிருக்கிறேன். இப்போது எல்லா இடத்திலும் தண்ணீர் தட்டுப்பாடு. அதனால், தண்ணீருக்கு வழி பார்க்க வேண்டும். இப்போது கதை எழுத வேண்டும், திரைப்படம் பண்ணவேண்டும் என்ற ஈடுபாட்டைவிட விவசாயத்தில்தான் அதிக ஈடுபாடு இருக்கிறது.” வெள்ளந்தியாகப் பேசுகிறார் ராஜகுமாரன். நடிகர், இயக்குநர், நடிகை தேவயானியின் காதல் கணவர்!

மனம் பூரித்து இருக்கிறார். ‘கடுகு’ படத்தில் புலி வேஷக்காரராக ராஜகுமாரன் பூசிய அரிதாரத்திற்கு ரசிகர்களிடம் இருந்து இப்போதும் பாராட்டுகள் குவிகிறது. கிட்டத்தட்ட இயக்கத்துக்கு முற்றுப்புள்ளி என்று ஒதுங்கியிருந்தவரை நல்ல நடிகராக அடையாளம் காட்டியிருக்கிறார் இயக்குநர் விஜய் மில்டன்.

**சென்னையில் ராஜகுமாரனைச் சந்தித்தோம்...**

‘கடுகு’ படத்தில் உங்கள் நடிப்புக்குக் கிடைத்த வரவேற்பால் தமிழ்த் திரையில் இரண்டாம் ஆட்டத்தை தொடங்கியிருக்கீங்க என்று சொல்லலாமா?

இரண்டாம் ஆட்டம் ஆடுகிற அளவுக்கு நான் பெரிய நடிகன் இல்லை. ‘கடுகு’ படத்தில் புலி பாண்டி பாத்திரத்தை என்னால் செய்ய முடியும் என்று விஜய் மில்டன் நம்பினார். அந்த நம்பிக்கையை காப்பாற்றும் அளவுக்கு செய்திருக்கிறேன், அவ்வளவுதான். மற்றபடி இரண்டாம் ஆட்டம் என்று சொல்கிற மாதிரி இதற்கு முன்னால் அப்படி பெரிதாக என்ன பண்ணிவிட்டேன். இப்போதுதான் முதல் ஆட்டத்தையே ஆரம்பித்திருக்கிறேன்.

‘கடுகு’ இயக்குநர் விஜய் மில்டன் உங்களிடம் கதை சொல்ல வந்தபோது இதற்கெல்லாம் நான் சரிப்படமாட்டேன் என்று நடிக்க மறுத்தீர்களாமே?

ஆமாம், உண்மைதான். இப்போது இருக்கும் திரைப்படச் சந்தை, நாயகர்கள் கூட்டத்தில் நான் உண்மையிலேயே சின்ன கடுகுதான். பொருளாதாரம், வியாபாரம், திரையரங்கு என்று திரைப்படச் சந்தை இப்போது வேறு மாதிரி இருக்கிறது. அதனால், “என்ன வைத்து படம் பண்ண வேண்டும் என்று விபரீதமா யோசிக்காமல் வேற நாயகர்களை வைத்துப் பண்ணுங்கள்” என்று மறுத்தது உண்மைதான். விஜய் மில்டன் பிடிவாதமாகக் கதை உங்களைத்தான் கேட்கிறது என்று சொன்னதால் சரியென்று ஒப்புக்கொண்டேன். விஜய் மில்டன் நம்பிக்கையை வீணடிக்காததில் எனக்கு மகிழ்ச்சிதான்.

நல்ல கதையும் அதைப் படமாக்கும் விதமும் வெற்றியைத் தீர்மானிக்கும் என்ற இன்றைய காலகட்டத்தில் நாயகன் சந்தை பற்றிப் பேசுகிறது முரணாக இல்லையா?

மற்றவர்களின் படங்களை விடுங்கள். விஜய் மில்டனின் படங்களையே இதற்கு உதாரணமாக எடுத்துக்கொள்வோம். அவர் இயக்கிய ‘பத்து எண்றதுக்குள்ளே’ படம் சரியாகப் போகவில்லை என்று சொல்லப்பட்டாலும் அந்தப் படத்துக்கு என்ன



வியாபாரம் ஆகவேண்டுமோ அது நடந்தது. ஆனால், ‘கடுகு’ படத்துக்கு நல்ல படம் என்று பாராட்டு, விமர்சனம் கிடைத்தாலும், அந்த அளவுக்கு வியாபாரம் நடக்கவில்லை. அதற்குக் காரணம், நல்ல படமென்று தெரிந்து மக்கள் திரையரங்கத்துக்கு வரும்வரை, படம் திரையரங்கில் ஓடிக்கொண்டிருக்கும் அவகாசம் இருந்த காலம் முடிந்துவிட்டது. மக்கள் திரையரங்கத்துக்கு வருவதற்குள் அங்கிருந்து படத்தை எடுத்துவிடுகிற சுழற்சியில் ‘கடுகு’ மாதிரியான படங்கள் சிக்கிக்கொள்கிறது.

**சரி, படம் பார்த்துட்டு தேவயானி என்ன சொன்னார்கள்?**

இந்தப் படத்தில் என்ன தெரிந்து கொண்டீர்கள் என்று எங்கள் சின்ன மகளிடம் கேட்டதற்கு “குட் டச் பேட் டச் பற்றித்தான் இந்தப் படம் பேசுகி றது” என்று மகள் பதில் சொன்னாள். அதைக் கேட்டு தேவயானிக்கு மகிழ்ச்சி தாங்க வில்லை. ‘காதல் கோட்டை’ படத்துக்குப் பிறகு நான் வியந்து பார்க்கிற படமென்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். ‘காதல்கோட்டை’, ‘கடுகு’ படங்களை எடை போட்டால் ‘கடுகு’ எடை கூடுதலாக இருக்கிறது என்று பாராட்டினார்கள்.

தேவயானி, படத்தை நிறையத் தடவை பார்த்துவிட்டார்கள். ஒவ்வொரு முறை பார்த்துவிட்டு வரும்போதும், “ரொம்ப நல்லா நடிச்சிருக்கீங்க. வாழ்க்கையில் உங்களுக்கு மறக்க முடியாத பாத்திரமா இது அமைஞ்சிருக்கு”ன்னு சொல்வார்கள். என் நடிப்பைப் பார்த்து, தேவயானி மகிழ்ச்சி அடைகிறார்களே, அதுவே எனக்கு விருதுதான்.

அஜித், விக்ரம் போன்ற பெரிய நட்சத்திர நடிகர்களை எல்லாம் வைத்து படம் இயக்கிய நீங்கள் ஒரு கட்டத்தில் இயக்கத்தை கைவிட்டு விட்டீர்களே?

எதற்கு இயக்க வேண்டும்? பண்ணித்தான் ஆகவேண்டும் என்று என்ன கடமை இருக்கிறது? ஓடும் குதிரைகளை நம்பித்தான் இன்றைக்கு திரைப்பட சந்தை இருக்கிறது. இந்நிலையில், நாம் படம் இயக்கித்தான் ஆகவேண்டும் என்று எனக்கு எந்த வெறியும் வேகமும் இல்லை. ஒரு காலகட்டத்தில் ‘பசி’ மாதிரியான படங்கள் வந்தது போல இப்போது ‘காக்கா முட்டை’ மாதிரியான முயற்சிகளும் நடக்கிறது. மகிழ்ச்சியாகத் தான் இருக்கிறேன்.

இந்தப் படத்தில் நாம் நடித்திருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிற படம், பாத்திரம் என்ன?

உண்மையில் எனக்கு நடிக்கிற ஆசையே இல்லைங்க. ‘திருமதி தமிழ்’ படத்துக்காக நாயகர்களை தேடிக் கெஞ்சிக் கொண்டிருக்க என்னால் முடியவில்லை. அதனால்தான் நானே நடித்தேன். அந்தப் படத்தில் நாயகனாக நான் நடித்தது தவறு. என்னை யாரும் நாயகனாக ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த படத்தின் பாடல் வெளியீட்டு விழாவில் ஒருவர் மட்டுமே என்னை ஊக்குவித்துப் பேசினார்.

தேவயானிக்கு உங்கள் மீது காதல் வரக் காரணம் என்ன என்பது குறித்து சொல்லியிருக்கிறார்களா?

நான் இயக்கிய, அவர் நடித்த, ‘நீ வருவாய் என’ படம்தான் காரணம். ஒரு திரைப் படத்திலேயே இவ்வளவு அற்புதமாகக் காதலை சொல்லமுடியும் என்றால் நிஜத்தில் எவ்வளவு காதலோடு இருப்பார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் காதலித்ததாக தேவயானி சொல்லியிருக்கிறார்கள். இப்போதும் எங்கள் ஊருக்குப் போனால், அங்கிருக்கும் எளிய மனிதர்களோடு பழகுவது, பாசம் காட்டுவது தேவயானிக்கு பிடிக்கும். வாழ்க்கை இயல்பாக இருக்கவேண்டும்



சார். என் வாழ்க்கையில் ஒவ்வொரு நொடியும் நானா செதுக்கினது என்று வசனம் பேசுவதைவிட, நமக்கு என்ன அமைந்திருக்கிறதோ அதுதான் கடவுளுடைய அனுக்கிரகம்.

**அடுத்த படம்?**

நான் ஒன்றும் நினைக்கவில்லை. கதை சொல்ல வரலாமா சார் என்று நிறைய பேர் கேட்கிறார்கள். சிலரிடம் கதை கேட்கிறதாக சொல்லியிருக்கிறேன். பார்ப்போம்.

---

# அதிசயம்

முத்தம்
கண்ணீர்
பூப்பு
புன்னகை
வாசம்
வெளிச்சம்
பனி
ஆழ்கடல்
யாவும்
சத்தமின்றி
சுவாசிக்கின்றன
கடைசி மூச்சுப்போல



- இரா சத்திக்கண்ணன் -

MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS

# JRS AUTO TECH

OPEN 7 DAYS A WEEK
9am-11pm

VISA



- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash

SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors

TIRE SPECIALS
NEW TIRES FROM $99
USED TIRES FROM $49.95



FREE OIL CHANGE WITH RUST PROOFING
$99 Car
$120 SUV

BRAKE JOB
STARTING FROM
$199

WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol
REGULAR OIL CHANGE $29.95
CASTROL OIL CHANGE $39.95
SYNTHETIC OIL CHANGE $49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR $149.95

TRANSMISSION FLUSH
*Starting From...*
*Imports $74.95*
*Radiator Flush $79.95*
*Domestic $149.95*

ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK
BMW
LEXUS
FREE DTC Code Run and Inspection

## 2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)

CALL SUBAS DIRECT → 416-206-9489

Tel: 416-628-4399

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

designed by panchaldesigns.com 647.294.2963

# FOR ALL YOUR MORTGAGE NEEDS

## Purchase - Refinance - Renewal - Self Employed

Access over 30 lenders with one application

*Best Rates & Advice You Can Trust!*

PRE-QUALIFIED

PRE-APPROVED

Dedicated and knowledgable team...
Provide you with the best solutions for 1st and 2nd Mortgage...
Our commitment to you is to provide with the very best...





**Pradeepraj Mani**
*Mortgage Agent*
LIC# M14001956
**416.997.3682**
np_57@hotmail.com

MORTGAGE ALLIANCE

**Gaya Kathir**
*Mortgage Agent*
LIC# M13001852 FSCO #10530
**416.806.2274**
gayamortgage@hotmail.com
www.mortageagencytoronto.ca



















Free Real Estate Class - Call: 416.321.6969










விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

